Digitization by eGangotri-South Center

அறிவிலே தெளிவு

ஆசார்ய ஸந்தேசத் தொகுப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1936 2015

இந்நூலை,

தேனி, வேதபுரீ, ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரம அறப்பணிகளுக்கு

பேரன்பும், பேராதரவும் வழங்கிய

உயர்திரு ஆர். கிருஷ்ணஸ்வாமி அவர்களின்

(சென்னை, நாரதகான ஸபா, செயலாளர்)

நினைவு மலராக ஸமர்ப்பித்து மகிழ்கிறோம்.

பணிவன்புடன்

அறங்காவலர்கள்

வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் & ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸேவாஸமிதி

வேதபுரீ, தேனி.

திருநெல்வேலி மாவட்டம் ஹரிகேசநல்லூரில், 1936ல் பிறந்தார் ஆர். கிருஷ்ணஸ்வாமி. இளமையில் கிருஷ்ணஸ்வாமி சென்னையில் கல்வி கற்று, பின்னர் சட்டக் கல்லூரியில் படித்துத் தேறினார். நீதிபதி திரு கே.எஸ். ராமமூர்த்தி அவர்களிடம் சிறிது காலம் பயிற்சி பெற்ற பிறகு, அன்றைய சொலிசிடார் ஜெனரல் திரு வி.பி. ராமன் அவர்களிடம் ஜூனியராகச் சேர்ந்தார். பின்னர் தனியாக வழக்கறிஞர் தொழில் தொடங்கி, விசாரணைச் சட்டம் (Trial Law), திவாலா சட்டம் (Insalvency Law) மற்றும் திரைப்படத் தொழில் சட்டம் (Movie Law) ஆகிய பிரிவுகளில் பரந்த அனுபவம் வாய்ந்தவராகப் புகழ் பெற்றார். அவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் மூத்த வழக்கறிஞராகத் பணி புரிந்தார்.

தொடர்ச்சி..... பின் அட்டை உள்பக்கம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

அறிவிலே தெளிவு

ஆசார்ய ஸந்தேஶத் தொகுப்பு



அருளியவர்
பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதற்பதிப்பு	:	மார்ச், 2017
உரிமை	:	வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் (பதிவு:226/1992)
புத்தகத்தின் பெயர்	:	ஆசார்ய ஸந்தேஶம்
அருளியவர்	:	பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்
மொழி	:	தமிழ்
புத்தக அளவு	:	1/8 டெம்மி
மொத்த பக்கங்கள்	:	160
எழுத்து அளவு	:	12 புள்ளிகள் Shree-TAM7-0803
விலை	:	ரூ 100/-
ஒருங்கிணைப்பு	:	ஸ்ரீஸ்வாமீ ஜ்ஞானஶிவாநந்த
தட்டச்சு தொகுப்பு	:	ஸ்ரீமதீ க்ருஷ்ணவேணீ ஹரிராம்
அட்டைப்படம் & புத்தக வடிவமைப்பு	:	ஸ்ரீ ஆ. சுந்தரராஜன்

வெளியீடு :

ஸ்ரீப்ரஜ்ஞா பதிப்பகம்

வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு:226/1992)

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

வேதபுரீ, தேனி-625 531. ☎: 04546-253908

e-mail: swamiomkarananda@gmail.com

www.vedaneri.org

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞாதக்ஷிணாமூர்த்தி
ஸ்ரீவேத வ்யாஸர்
ஸ்ரீஆதிஸங்கர பகவத்பாதர்

ஸ்ரீபத்மபாதாசார்யர்
ஸ்ரீதோடகாசார்யர்

ஸ்ரீஹஸ்தாமலகாசார்யர்
ஸ்ரீஸுரேச்வராசார்யர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருளடக்கம்

	பக்கம்
1. மனத்தூய்மை	7
2. பேச்சாற்றல்	10
3. பயம்	13
4. துன்பம்	16
5. நிம்மதிக்கு வழி	19
6. பக்தன்-பக்தி	22
7. தற்பெருமை	25
8. தெய்விக குணங்கள்	28
9. குரு	31
10. இறை சிந்தனை	34
11. மனம்	37
12. பாதுகாப்பு	40
13. சிவாத்மபுத்தி	44
14. வாக்கு	47
15. அச்சம் தவிர்	50
16. நிலையான இன்பம்	53
17. விருப்பு வெறுப்பு	56
18. நியதி	59
19. புத்தி	62
20. பொருளும் இன்பமும்	65
21. வைராக்யம்	68
22. உள்ளத் தெளிவு	71
23. கற்பவை கற்க	74
24. நற்பண்புகள்	78
25. மனவலிமை	81
26. விச்வரூப உபாஸனை	84
27. இறைவனின் கூடாரம்	87
28. கர்மபலன்	90
29. க்ஷேத்ரம்	93
30. அபயம்	96
31. வேதநெறி	99
32. தெய்விகக் குணங்கள்	102
33. உண்மையான ஆநந்தம்	105
34. புலனடக்கம்	108
35. முப்புரம் எரித்தல்	111
36. ஸாத்விக இன்பம்	114
37. குறிக்கோள்	118
38. பண்படுதல்	121
39. துன்பமில்லா வாழ்வு	124
40. ஆச்ரமம்	127
41. மனிதப்பிறவி	130
42. மந்த்ரோபதேசம்	133
43. நேர்கோடு	136
44. தன்னை ஆளுதல்	139
45. ஆற்றல்	142
46. தர்ம சாஸ்த்ரம்	145
47. கற்றது கைமண் அளவு	148
48. பரந்த உள்ளம்	151
49. ஆன்மிகக் கல்வி	154
50. மெய்யுணர்தல்	158

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

இந்நூல் பற்றி...

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

மெய்யன்பர்களுக்குப் பணிவன்பான வணக்கங்கள்.

பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த மஹாஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அருளுரைகள் வேதநெறி மாத இதழிலும், ஸ்ரீபுவநேச்வரீ விஜயம் மாத இதழிலும் ஆசார்ய ஸந்தேஶம் எனும் தலைப்பில் மாதந்தோறும் வெளிவந்தது.

அவ்வனைத்தையும் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட இறையருள் கூட்டி வைத்துள்ளது.

அமைதிபெற்று ஆநந்தத்தை உணர இதுதான் பாதை என்று திட்டவட்டமாக வழிகாட்டியுள்ளார் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள்.

எல்லா திசைகளிலும் வானம் இருப்பதுபோல் ஆசார்ய ஸந்தேஶத்தின் எப்பகுதியைப் படித்தாலும் ஆன்மிகத்திற்குள் ஸுலபமாய் நுழைந்துவிடலாம்.

ஒரு சில கருத்துக்களும், உவமைகளும் திரும்பத் திரும்ப வருவதுபோல் தோன்றினாலும் அந்தந்த தலைப்புகளுக்கு அது பொருத்தமானதாக இருப்பதால் நீக்கவோ மாற்றவோ தேவையில்லை என்பதை மெய்யன்பர்கள் படித்துப்பார்த்து உணர்ந்துகொள்ளலாம்.

வேத, வேதாந்த கருத்துக்களுடன் திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற தமிழ் அறநூல்களின் கருத்துக்களை ஒப்புமைகாட்டி பாரதநாட்டு மக்களின் வாழ்க்கை முறை அறநூல்கள் காட்டிய வழியிலேயே அமைந்திருக்கின்றன என்ற உண்மையைத் தெளிவாக உணர்த்துகிறார் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸாதாரண ஒரு மனிதனின் வாழ்க்கைமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறுமிடத்து, தற்போது அவன் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையிலிருந்து தன்னை தெய்வநிலைக்கு உயர்த்திக்கொள்ளும் விதமாகவும் கருத்துக்கள் மனதில் நன்கு வேரூன்றி நலம் பயக்கும் விதமாகவும் வழங்கியிருக்கிறார் பூஜ்யஸ்ரீஸ்வாமீ அவர்கள்.

பணத்திற்குப் பின்னாலும், மிகப்பிரம்மாண்டமாய் விச்வரூபம் எடுத்துநிற்கும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பின்னாலும் ஓடிக்களைத்த மனங்களுக்கு இது அமைதி தரும் மந்திரப்புத்தகம்.

நாம் சந்திக்கும் மனிதர்கள், நமது பொருளாதார சூழ்நிலைகள், ஒழுங்குமுறையற்ற வாழ்க்கை முறைகள், உணவுப் பழக்கங்கள் என நமது ஆன்மிகப் பேராற்றலை வீணடித்துப் பிறவியின் சிறப்பை உணர்ந்துகொள்ளாத தன்மைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையிலிருந்து சிந்தித்து மீள இப்புத்தகம் நல்லதொரு வழிகாட்டி.

தினமும் ஓர் ஆசார்ய ஸந்தேஶத்தைப் படித்து அதன் கருத்துக்களை ஆழ்ந்துசிந்தித்து மேம்படுத்திக்கொண்டால், வருங்கால ஸமுதாயம் வளமுடன் வாழ வழிகாட்ட முடியும் என்பதில் ஐயமில்லை.

இப்புத்தகத்தில் அருளியுள்ள கருத்துக்களோடு நமது நடைமுறை வாழ்க்கையை ஒப்பிட்டு மனிதப்பிறவியின் சிறப்பான பகுத்தறிவைப் பயன்படுத்தி வளமாய் வாழ மனமார ப்ரார்த்திக்கிறோம்.

ஆசார்ய ஸந்தேஶம்....

நற்சிந்தனைக்கு நல்லதொரு விருந்து.
நலம்குன்றிய மனதிற்கு மாமருந்து.

பேரன்புடன்
ஆ.சுந்தரராஜன்
ஸ்ரீகுருஸேவக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1

பலனில் நாட்டமின்மை
செயலில் கவனம்
விருப்பு-வெறுப்பின்மை
கர்மயோகம் இவையே
மனத்தூய்மைக்கும்
மெய்யறிவிற்கும்
வழி

மனத்தூய்மை

பெரும்பாலான மக்கள் இன்றைய சூழலில் நிறைவான சம்பளம், பரந்த வசதிகள், குறைவான வேலை ஆகியவற்றையே விரும்புகின்றனர். அதனோடு பொருளாதார முன்னேற்றத்திற்கும் மன நிம்மதிக்கும் இல்லாததோர் மாயத் தொடர்பையும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர். உலகில் பொருளாதார வசதி படைத்த பலர், மன அமைதியை இழந்து தவிப்பதையும் காண முடிகிறது.

பாரதப் பண்பாடு சார்ந்த அறச் சிந்தனை, சமூகத்திடமிருந்து தான் பெறுவது குறைவாகவும், சமூகத்திற்குத் தான் வழங்குவது அதிகமாகவும் இருக்க வேண்டும் என அறிவுறுத்துகிறது. எவனொருவன் குறைவாகப் பெற்று, சமூகத்திற்கு நிறைய வழங்குகிறானோ, அவனே மன அமைதி பெறுகிறான், சமூகத்தின் அமைதியையும் வளர்க்கிறான்.

வாழ்க்கையின் முழுமுதற் குறிக்கோளைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் மட்டுமே, ஏன் குறைவாகப் பெற்று, நிறைவாகக் கொடுக்க வேண்டும் என்பது விளங்கும். நம் முன்னோர்கள் மனித வாழ்வின் குறிக்கோள்களை அறம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருள், இன்பம், வீடு என நான்காகப் பிரித்துக் கூறியிருக்கிறார்கள். பொருள் ஈட்டுதல், குடும்பம் நடத்துதல் ஆகிய இரண்டும் மனித வாழ்வின் முடிந்த குறிக்கோள்கள் அல்ல.

அறச் செயல்களைச் செய்வதும்கூட வாழ்வின் முடிந்த குறிக்கோள் அல்ல. பாபம் செய்யக் கூடாது, புண்ணியம் செய்ய வேண்டும். பிறகு புண்ணியம் செய்வதிலிருந்தும் விடுபடவேண்டும்.

இந்த உயிர் இனி உடல் எடுக்கக் கூடாது; உடலைத் தான் என்று எண்ணும் எண்ணம் அகல வேண்டும்; தனது தனித்தன்மையை முற்றிலும் அழிய வேண்டும். இவ்வாறு தனது தனித்தன்மையை முற்றிலும் அறிவால் அழிக்கப்படுவதே முக்தி அல்லது வீடுபேறு எனப்படும். இதனை உணர்வதே மனித உடலில் வாழ்கின்ற உயிரின் முழுமுதற் குறிக்கோளாகும்.

இந்தப் பிறவாப் பெருநிலையாகிய முக்தியை இம்மண்ணுலக வாழ்விலேயே உணர்வதுதான் இல்லறம், துறவறம் ஆகிய இருவிதமான வாழ்க்கைமுறைகளை மேற்கொள்பவர்களுக்கும் முடிந்த குறிக்கோளாகும்.

வாழ்வின் முழுமுதற் குறிக்கோளாகிய முக்தியை உணர, மெய்யறிவைப் பெற வேண்டும். மெய்யறிவைப் பெற வேண்டுமானால், அதற்கு மனம் தூய்மை பெற வேண்டும். அறத்தைக் கடைப்பிடித்து, சமூகத்திடமிருந்து குறைவாகப் பெற்று, நிறைய வழங்கினால் மனம் தூய்மை பெறும்.

இறைவனே அனைத்து உயிர்க்கூட்டங்களாகவும் சமூகங்களாகவும் விளங்குகிறார். இறைவன் வேறு, சமூகம் வேறு அல்ல. உடல், மனம், புத்தி அனைத்தும் இறைவனுடையவை. அவற்றை சமூக நலனுக்குப் பயன்படுத்தினால் மனவமைதி பெறலாம்.

அவ்வாறு செய்தால் நம் உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தேவையானவற்றை பகவான் கொடுப்பார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடலை வைத்துத்தான், உயிரானது தனது மனதைத் தூய்மைப்படுத்திக்கொள்ள முடியும்.

செயலின் பலனில் நாட்டம் செலுத்துவதை விடுத்து, செயலில் கவனம் செலுத்தி, விருப்பு வெறுப்பின்றி இறை வழிபாட்டுணர்வுடன் செயலாற்றி மனத்தூய்மையும் மெய்யறிவும் பெற்றுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

कायेन मनसा बुद्ध्या केवलैरीनन्द्रियैरपि।
योगिन: कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये।।

காயேந மநஸா புத்த்யா கேவலைரிந்த்ரியைரபி।
யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே।।
(ஸ்ரீமத்பகவத்கீதை 5-11)

யோகிகள் மனத்தூய்மைக்காக பற்றைத் துறந்து, உடலாலும் மனதாலும் அறிவினாலும் புலன்களாலும் கர்மம் செய்கிறார்கள்.

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு - அது
சந்ததமும் சக்திதனைச் சூழும் - மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு - அதில்
சாவுபெறுந் தீவினையும் ஊழும்.

(சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம் (18) - மஹாகவி பாரதியார்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2

பொய் கூறுதல், புறங்கூறுதல், பயனற்ற சொற்களைக் கூறுதல், கடுமையாகப் பேசுதல் போன்றவற்றை அறவே தவிர்த்துவிட வேண்டும்.

பேச்சாற்றல்

இறைவன் மனிதனுக்கு ஒப்பற்ற செல்வமான பேச்சாற்றலை அருளியுள்ளார். பிற உயிரினங்களுக்கு இல்லாத மாபெரும் சிறப்பம்சமான பேச்சாற்றலை மனிதன் முறையாகப் பயன்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான்.

மனதில் தோன்றும் எண்ணங்களைச் சொற்கள் வாயிலாக நாம் வெளிப்படுத்துகிறோம். சொற்களைக் கவனமாகக் கையாளுவது ஒரு கலை.

''நாவின் நுனியில் திருமகள் வசிக்கிறாள்; நாவின் நுனியில் விஷம் இருக்கிறது; நாவின் நுனியில்தான் உறவினரும் நண்பர்களும் இருக்கின்றனர். நாவின் நுனியில் தளையுறுதலும், மரணமும் இருக்கிறது.'' எனவே, சொற்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

சொற்களை ஆயுதமாகப் பயன்படுத்துவதும், அணிகலனாக அணிந்துகொள்வதும் நம் கையில்தான் இருக்கிறது. சரியான நேரத்தில், சரியான இடத்தில் சரியான சொல்லைச் சொல்வதற்கு மிகுந்த அருள் வேண்டும். ஒருவரது பேச்சு, அவரது உள்ளத்தெளிவை உணர்த்தும் கண்ணாடியாக விளங்குகிறது. மனிதனுக்கு இயல்பாகவே பேச்சாற்றல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருக்கிறது என்பதால், அவன் வாய்க்கு வந்தவற்றையெல்லாம் பேசிவிடக் கூடாது. பேச்சில் அறத்தைக் கடைப்பிடிப்பது மிக முக்கியம்.

ஆதிசங்கரர், நாம் பேசும்போது, நான்கு விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்கிறார். ''நம்முடைய பேச்சானது பிறரைத் துன்புறுத்தக் கூடாது; பேச்சில் பொய் கலந்திருக்கக் கூடாது; அன்பாகப் பேச வேண்டும்; பேச்சு சொல்பவருக்கும் கேட்பவருக்கும் நன்மை தருவதாக இருக்க வேண்டும்.''

பேசும்போது, பொய் கூறுதல், புறங்கூறுதல், பயனற்ற சொற்களைக் கூறுதல், கடுமையாகப் பேசுதல் போன்றவற்றை அறவே தவிர்த்துவிட வேண்டும்.

''அம்பால் துளைத்த உடலும், கோடாரியால் வெட்டப்பட்ட காடும், வடு ஆறி மறுபடியும் துளிர்க்கும். ஆனால் சொல்லால் அடிபட்ட புண் ஆறவே ஆறாது'' என்கிறது விதுர நீதி. எனவே, சொற்களை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். ஒருவரிடம் உள்ள குறையைச் சுட்டிக் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் கூட, அவரது நற்குணங்களைப் பாராட்டிக் கூறிய பிறகே, மிகவும் சுருக்கமாகவும் இதமாகவும் தவறைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கக்கூடிய சொற்களை இனிமையாக, அளவாக பேச, இடையறாது முயற்சிக்க வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு பேசாமல், அறிவுபூர்வமாக ஆராய்ந்து, பண்பட்ட வார்த்தைகளை வெளிப்படுத்தும் பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பொய் கலவாத, பிறரைத் துன்புறுத்தாத, தனக்கும் பிறருக்கும் பயன்படக்கூடிய, இனிய, பண்பட்ட சொற்களை அணிகலனாக அணிந்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्ज्वला
न स्नानं न विलेपनं न कुसुमं नालङ्कृता मूर्धजा।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

वाण्येका समलङ्करोति पुरुषं या संस्कृता धार्यते
क्षीयन्ते खलु भूषणानि सततं वाग्भूषणं भूषणम्।।

கேயூராநி ந பூஷயந்தி புருஷம் ஹாரா ந சந்த்ரோஜ்ஜ்வலா
ந ஸ்நாநம் ந விலேபநம் ந குஸுமம் நாலங்க்ருதா மூர்தஜா।
வாண்யேகா ஸமலங்கரோதி புருஷம் யா ஸம்ஸ்க்ருதா தார்யதே
க்ஷீயந்தே கலு பூஷணாநி ஸததம் வாக்பூஷணம் பூஷணம்।।
(நீதி சதகம்)

தோள்வளைகள், நிலவைப் போன்று ஒளிரும் மாலைகள், குளியல், நறுமணப் பொருட்கள், மலர்கள், கிரீடங்கள் - இவை எவையும் மனிதனை அலங்கரிப்பதில்லை. பண்பாடு மிகுந்த ஒரு சொல்லே மனிதனுக்குச் சிறந்த அணிகலனாக அமைகிறது. பிற அணிகலன்கள் அழிந்துவிடக் கூடியவை; சொல்லாகிய அணிகலனே அழியாத அணிகலன்.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (திருக்குறள் : 95)

வணக்கம் உடையவனாகவும், இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும்; மற்றைய அணிகள், அணிகள் அல்ல.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

3

அனைத்துயிரும்
நானே,
அனைத்துலகும்
நானே,
என உணர்ந்து
கொண்டவனுக்கு
பயமேற்பட
வாய்ப்பே
இல்லை.

பயம் →

உலகில் மனிதன் எவ்வளவு பொருளீட்டினாலும், எத்தனை இன்பங்களை அனுபவித்தாலும் பயம் என்பது ஏற்படத்தான் செய்கிறது. வயதாகும்போது பயமும் பாதுகாப்பின்மையும் அதிகரிக்கின்றன.

பயத்திலிருந்து விடுபடுவதற்கு, உலகியல் ரீதியாக மனிதன் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தாற்காலிகமானவையாகவே இருக்கின்றன. அனைத்து பயங்களும் மரண பயத்தை அடிப்படையாகக் கொண்டவை. நான் உடல், நான் ஒரு நாள் இறந்துவிடுவேன் என்ற பயம் மனிதனை ஆட்டிப் படைக்கிறது.

தான் அல்லாத உடல்-மனக் கூட்டமைப்பை, தான் என்று எண்ணிக் கொள்வதால் ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் சிக்கித் தவிக்கிறான் மனிதன்.

எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கின்ற, நிலையில்லாத உடலை மனிதன் தான் என்று எண்ணிக்கொள்வதால், மனம் அலைபாய்கிறது, பரபரப்பில் ஆழ்கிறது, பெருந்துயரில் வீழ்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாழ்வின் இத்தகைய துயரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், அதற்கு இறைவனுடைய திருவடிகளை ஆழ்ந்து தியானம் செய்வது ஒன்றே வழி.

இறைவன் பயக்ருத் பயநாஶந: - பயத்தை தோற்றுவிப்பவர், பயத்தை அழிப்பவர். அந்த இறைவனுடைய திருவடிகளை தியானம் செய்தால், நாம் பயத்திலிருந்து விடுபடுவோம்.

வேதம் முதலான மெய்யறிவு நூல்கள், இறைவனுடைய திருவடிகளாக விளங்குகின்றன. அத்தகைய இறைவனின் திருவடித் தாமரைகளை தியானம் செய்வதால், மெய்யறிவு ஏற்பட்டு தனித்தன்மை முழுவதுமாக அழியும். உலகமனைத்தும் தானே என்ற எண்ணம் தோன்றும். அனைத்துவித பயங்களும் அடியோடு நீங்கும். அனைத்துயிர்களும் நானே, அனைத்துலகும் நானே என்று உணர்ந்துகொண்டவனுக்கு எதனைக் கண்டும் பயம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

தன்னை உடலாகக் கருதிக் கொள்ளும் குறுகிய மனப்பான்மையினால்தான் பயம் தோன்றுகிறது. தன்னை உலகமனைத்திலும் நிறைந்திருக்கின்ற பரம்பொருளாக உணர்ந்துகொள்வதால், பயப்படுவதற்கு ஒரு பொருளும் இல்லை. அத்தகைய மெய்யறிவாளன் பயத்தை வென்றுவிடுகிறான்.

''வேற்றுமை எண்ணம் உள்ள இடத்தில் பயத்தைத் தவிர்க்க முடியாது. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளில், சிறிதளவு வேற்றுமையைப் பார்த்தாலும் கூட பயம் ஏற்படும்'' என்கிறது தைத்திரீய உபநிஷதம்.

அனைத்தும் ஒன்றே என்று உணரும் மெய்யறிவுதான், அனைத்துவித அச்சங்களிலிருந்தும், பாதுகாப்பின்மையிலிருந்தும் மனிதனை விடுவிக்கும்.

இறைவனுடைய திருவடித் தாமரைகளை ஆழ்ந்து எண்ணி, உடலைத் தான் என்று எண்ணும் தவறான எண்ணத்தை நீக்கி, தான் எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் என்பதை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உணர்த்தும் மெய்யறிவைப் பெற்று, பயத்தை வென்று, பிறவாப் பெருநிலை அடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

मन्येऽकुतश्चिद्भयमच्युतस्य पादाम्बुजोपासनमत्र नित्यम्।
उद्विग्नबुद्धेरसदात्मभावाद् विश्वात्मना यत्र निवर्तते भीः।।

மந்யேSகுதஶ்சித்பயமச்யுதஸ்ய
பாதாம்புஜோபாஸநமத்ர நித்யம்।
உத்விக்நபுத்தேரஸதாத்மபாவாத்
விஶ்வாத்மநா யத்ர நிவர்த்ததே பீ:।।

(ஸ்ரீமத்பாகவதம் - நவயோகி ஸம்வாதம் - 11-2-33)

இந்த வாழ்வில் உண்மையில்லாத உடல் முதலான பொருட்களில் ஏற்படும் தான் என்ற எண்ணத்தினால், எப்பொழுதும் பயம் ஏற்படுகிறது. எந்த அச்யுதருடைய திருவடித் தாமரைகளை வழிபட்டால், பயமும் துயரமும் நீங்குகின்றவோ, அதனை வழிபட்டால் பயத்திலிருந்தும் ஸம்ஸாரத்திலிருந்தும் விடுபடலாம்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (திருக்குறள்: 7)

தனக்கு ஒப்பும் உயர்வும் அற்ற இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு மனதில் தோன்றி வருத்தும் துன்ப எண்ணங்களை மாற்றுவது (நீக்கி இன்பமடைவது) மிகக் கடினமானது (இயலாது).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4

மனிதன், வாழ்வின் துன்பங்களிலிருந்து அடியோடு விடுபட வேண்டுமென்றால், பரம்பொருள் தத்துவத்தை உள்ளவாறு உணர்வதுதான் ஒரே வழி.

துன்பம்

உலகில் மனிதனின் வாழ்க்கை மிகுந்த சிக்கல்கள் நிறைந்ததாக இருக்கிறது. எவ்வளவுதான் கடுமையாக உழைத்தாலும், ஆன்மிக ஸாதனைகளில் ஈடுபட்டாலும் துன்பத்தை முற்றிலுமாகத் தவிர்க்க முடிவதில்லை.

அவதார புருஷர்களுக்கே கஷ்டம் வந்தது என்று இதிஹாஸங்கள் கூறுகின்றன. இந்த உலக வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்களுக்குக் காரணம் மாயை. மாயையிலிருந்து, இறையருளால் விடுபடுவதற்குப் பெயர் மோக்ஷம்.

மனித வாழ்வின் துன்பங்களிலிருந்து அடியோடு விடுபட வேண்டுமென்றால், பரம்பொருள் தத்துவத்தை உள்ளவாறு உணர வேண்டும். பரம்பொருள் தத்துவத்தை உணர்வதற்கு, தகுந்த குருநாதரை சரணடைந்து, மெய்யறிவு நூற் கருத்துக்களை கேட்டறிந்து தெளிவது ஒன்றே வழி.

உடலுக்கு நோய் ஏற்படும்போது, சிறந்த மருத்துவ நிபுணரிடம் சென்று வைத்தியம் பார்த்துக் கொள்வதைப் போல, பிறவி நோயாகிய இன்ப துன்ப சுழற்சியிலிருந்து விடுபடுவதற்கு, மேலான குருவிடம் சென்று சரணடைய வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறந்த மருத்துவரிடம் சென்று வைத்தியம் செய்துகொள்ள, நிறைய பணம் செலவாகும்.

சிறந்த குருவிடம் நாம் கொண்டு செல்ல வேண்டியது சிரத்தா பக்தியும் பணிவும் நிறைந்த திறந்த மனமே ஆகும்.

குருநாதர் தாம் ஒரு குருவிடம் சீடராக இருந்து, வேதாந்த சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றவராக இருக்க வேண்டும். தாம் உபதேசிக்கும் பரம்பொருள் தத்துவத்தில் நிலைத்திருப்பவராக இருக்க வேண்டும்.

தான் எதைக் கற்றுக்கொடுக்கிறாரோ, அதன்மயமாக இருக்க வேண்டும். பொறுமையோடு, தான் கற்ற சாஸ்திரத்தை, சீடருக்கு எடுத்துக் கூறும் மரபுநெறியை அறிந்தவராக இருக்க வேண்டும்.

மிகச் சிறந்த தேர்ச்சி பெற்ற, அனுபவம் மிக்க மருத்துவரிடம் செல்லும்போது, நம் மனதில் நம்பிக்கை துளிர்விட்டு, நம் நோய் சார்ந்த குழப்பங்கள் நீங்கும். அதுபோல, நூலறிவும் பட்டறிவும் நுண்ணறிவும் நிறைந்த குருவிடம் சென்றால் நம் குழப்பங்கள் அனைத்தும் அகன்றுவிடும்.

தன்னைப் பரம்பொருளாக உணர்ந்தவரால்தான், பரம்பொருள் தத்துவத்தை உணர்த்த முடியும். தான் உடல், மனம், புத்தி அல்ல என்பதில் தெளிவாக இருப்பார் உயர்ந்த குருநாதர். தன்னைப் பரம்பொருளாகவே உணர்ந்தவராக இருப்பார். தெளிந்த மெய்யறிவே சிறந்த குருவின் பலம்.

உத்தமமான சீடன் குருவை இறைவனாகவே போற்றுகிறான். இறைவன் குருவின் வாயிலாகச் சீடனுக்கு அருள்புரிகிறார்.

அத்தகைய சிறந்த குருநாதரை அணுகி, பணிந்து வணங்கி, அவருக்கு ஸேவைகள் செய்து, சாஸ்திர உபதேசங்களை அவர் வாயிலாகக் கேட்டு, ஐயங்கள் நீங்கப் பெற்று, தெளிந்த மெய்யறிவில் நிலைத்திருந்து,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயையிலிருந்து விடுபட்டு பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

तस्माद् गुरुं प्रपद्येत जिज्ञासुः श्रेय उत्तमम्।
शाब्दे परे च निष्णातं ब्रह्मण्युपशमाश्रयम्।।

தஸ்மாத் குரும் ப்ரபத்யேத ஜிஜ்ஞாஸு: ஶ்ரேய உத்தமம்।
ஶாப்தே பரே ச நிஷ்ணாதம் ப்ரஹ்மண்யுபஶமாஶ்ரயம்।।

(ஸ்ரீமத்பாகவதம் 11-3-21)

எனவே, மோக்ஷத்தை அறிய விரும்புபவன், ஞான காண்ட சாஸ்த்திரத்தில் தேர்ச்சி பெற்றவரும், பரம்பொருள் தத்துவத்தில் நிலைத்திருப்பவருமான மேலான குருவிடம் சென்று, அவரைப் பணிந்து வணங்கி, சரணடைய வேண்டும்.

ஆனபின் மனைவி மக்கள் அர்த்தஏ டணைகள் மூன்றில்
கானவர் வலையில் பட்டுக் கைதப்பி ஓடும் மான்போல்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணம் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே.

(கைவல்ய நவநீதம் - தத்துவ விளக்கப் படலம் -6)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5

வாழ்வில் எதைச் செய்தால் ஆனந்தமாக இருப்போமோ, அதைச் செய்ய வேண்டும். எதைச் செய்தால், உண்மையான நிம்மதி ஏற்படாதோ, அதைச் செய்யக் கூடாது.

நிம்மதிக்கு வழி

இறைவன் உயிருக்கு மனம், வாக்கு, காயம் என்ற மூவகைக் கருவிகளை அருளியுள்ளார். அம்மூன்று கருவிகளையும் இறைவழிபாட்டில் பயன்படுத்தி, உயிரானது தன்னை உய்வித்துக்கொள்ள வேண்டும்.

இறைவனை ஆழ்ந்து எண்ணும் மனம் பேரின்பத்தில் திளைக்கிறது. இறைவனைப் போற்றிப் பாடுவதன் வாயிலாக, வாக்குத் தூய்மை அடைகிறது. இறைவனுக்குத் தொண்டு செய்து, அவரைப் போற்றி வணங்கும் உடல் புனிதத்தன்மை பெறுகிறது. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றின் வாயிலாக, நாம் நன்மையை அடையும்பொருட்டே இறைவனைப் போற்றுகிறோம்.

வாழ்வில் எதைச் செய்தால் நான் உலகில் ஆனந்தமாக இருப்போமோ, அதைச் செய்ய வேண்டும். எதைச் செய்தால், உண்மையான நிம்மதி ஏற்படாதோ, அதைச் செய்யக் கூடாது.

சில சமயங்களில், வாழ்வில் உண்மையான நிம்மதியைத் தரக் கூடியது துன்பத்தைத் தருவது போன்றும், உண்மையான நிம்மதியைத் தராதது இன்பமாகவும் தோன்றும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பகவான் கீதையில் ஸுகத்தை ஸாத்விக, ராஜஸ, தாமஸ ஸுகம் என மூன்றாகப் பிரித்துக் கூறியிருக்கிறார். துவக்கத்தில் துன்பம் தருவதாகத் தோன்றினாலும், முடிவில் இன்பத்தை தருவது ஸாத்விக ஸுகம் என்கிறார்.

ஸாத்விக இன்பம் பயிற்சியினால் வளர்வது, துன்பத்திற்கு முடிவை உண்டுபண்ணுவது, தன்னைப் பற்றிய தெளிவால் ஏற்படும் தெளிந்த இன்பம் என்று வரையறுத்துக் கூறியிருக்கிறார்.

உறக்கத்திலும் மயக்கத்திலும் ஆழ்ந்து கிடப்பதால் ஏற்படும் இன்பம் தாமஸ இன்பம். இந்திரியங்களின் வாயிலாக நாம் அனுபவிக்கும் இன்பம் ராஜஸ இன்பம். ஆன்மிக வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் இன்பம் ஸாத்விக இன்பம். இறைவழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபட்டால் ஸாத்விக இன்பத்தை உணரலாம். அதற்கு மனமாகிய மலரை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

மனமாகிய மலரை இறைவனுக்கு அர்ப்பணிக்கவில்லையென்றால், பிற மலர்களை ஸமர்ப்பித்தும் பயனில்லை. ஸத்வ குணத்தை வளர்த்து, ஸாத்விக இன்பத்தை உணர்ந்து, மன மலரை இறைவனுக்கு அர்ப்பணித்துப் பேரின்பமடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः।
समर्प्यैकं चेतस्सरसिज-मुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो।।

கபீரே காஸாரே விஶதி விஜநே கோரவிபிநே
விஶாலே ஶைலே ச ப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி:।
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜ-முமாநாத பவதே
ஸுகேநாவஸ்த்தாதும் ஜந இஹ ந ஜாநாதி கிமஹோ।।

(ஶிவாநந்தலஹரீ:9)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறைந்த அறிவு படைத்தவன் ஆழமான மடுவிலும், ஜன நடமாட்டமில்லாத கொடிய காட்டிலும், பரந்த மலையிலும், மலருக்காக அலைகிறான். பார்வதியின் தலைவனே! உமக்கு மனதாகிற ஒரு தாமரைப்பூவை அன்புடன் அளித்துவிட்டு ஸுகமாக அலையாமல் ஓரிடத்திலிருப்பதற்கு இங்கே மனிதன் அறிந்துகொள்ளவில்லை, என்ன ஆச்சரியம்!

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (திருக்குறள் : 3)

உள்ளமாகிய தாமரை மலரில் எப்பொழுதும் இருக்கின்ற இறைவனுடைய மாண்புமிக்க திருவடிகளை தியானிப்பதன் மூலம் கடவுளை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பேரின்பமாகிய நிலத்தில் எப்பொழுதும் வாழ்வார்கள்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6

பக்தியினால் தன்னிலும் அனைத்து உயிர்களிலும் வேற்றுமை உணர்ச்சியின்றி பரம்பொருளை உணர்பவன் உத்தமமான பக்தன்.

பக்தன்-பக்தி

இறைவன் மீது செலுத்தப்படும் பேரன்புக்கு பக்தி என்று பெயர். அத்தகைய உயர்ந்த உணர்ச்சியை உடையவன் பக்தன்.

உலகில் பலவகையான பக்தர்கள் இருக்கிறார்கள். துன்பம் வரும்போது மட்டும் இறைவனைக் கூவி அழைப்பவன், உலக இன்பம் வேண்டித் தொழுபவன், உண்மைப் பொருளை உணர்வதற்கு முயல்பவன், தன்னைப் பரம்பொருளாகவே உணர்ந்தவன் ஆகிய அனைவருமே பக்தர்கள்தான்.

பக்தனின் மனநிலைக்கேற்றவாறு பல்வேறு வகையான பக்தர்களை மெய்யறிவு நூல்கள் அடையாளம் காட்டுகின்றன.

ஒரு பக்தன் ச்ரத்தையுடன் கடவுளின் உருவத்தில் மட்டும் பக்தி செலுத்துகிறான். ஆனால் இறையடியார்களை மதிப்பதில்லை. இறைவழிபாடுகளை இயந்தரத்தனமாக உடலளவில் செய்கிறான். அவனது உள்ளத்தில் மேலான பக்தி உணர்விருப்பதில்லை. அத்தகையவன் பக்குவப்படாத, ஆரம்ப நிலையில் உள்ள பக்தன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவனிடம் பேரன்பு, இறையடியார்களிடம் அன்புடன் கூடிய நட்புணர்வு, முட்டாளிடம் இரக்கம், தன்னை வெறுப்பவனிடம் கண்டுகொள்ளாமை முதலிய பாவனைகளை உடையவன் மத்யம பக்தன்.

தன்னிலும் அனைத்து உயிர்களிலும் வேற்றுமை உணர்ச்சியின்றி பரம்பொருளை உணர்பவன் உத்தமமான பக்தன்.

உடல், மனம், புத்தி, ப்ராணன், இந்திரியங்கள் ஆகிய அனைத்தும் குறை நிறைகளுடன் கூடியவை. அவற்றால் ஏற்படும் பிறப்பு, இறப்பு, நோய் முதலிய பிறவித் துன்பங்கள் சிறிதளவுகூட உத்தம பக்தனைக் கலக்கமடையச் செய்வதில்லை.

உத்தம பக்தன் இந்த்ரியங்களால் விஷயங்களை அனுபவித்தாலும்கூட, அதில் விருப்பு வெறுப்பின்றி இருக்கிறான். உலகில் தோன்றும் அனுபவங்கள் அனைத்தும், சேர்ப்பதும் பிரிப்பதும் பரம்பொருளின் மாயை என்பதை அவன் உணர்ந்திருக்கிறான்.

பக்தர்களுள் தலைசிறந்தவன், வாழ்க்கை அனுபவங்களில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. புகழ்ச்சியில் மயங்குவதில்லை, இகழ்ச்சியிலும் கலங்குவதில்லை.

கர்ம வாஸனை, காம வாஸனை இரண்டும் மனிதனின் உள்ளத்தை அலைக்கழிக்கின்றன. எவனுடைய உள்ளத்தில், ஆசை, கர்மத்தின் விதைகளான அறியாமை, விருப்பு, வெறுப்பு முதலியவை இல்லையோ, எவன் நிறைவே வடிவானவனாக இருக்கிறானோ, அவனே உத்தமமான பக்தன்.

எந்த உருவத்திலும் பெயரிலும் பொருளிலும் மாட்டிக்கொள்ளாத, பிளவுபடாத எண்ணமாகிய அகண்டாகார வ்ருத்தியில் உத்தம பக்தனின் உள்ளம் தோய்ந்திருக்கும். அத்தகைய உத்தமமான பக்திக்குத்தான் ஞானம் என்று பெயர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவனிடம் படிப்படியாக பக்தி செலுத்தி, மனமாசுகள் நீங்கப்பெற்று, மெய்யறிவைப் பெற்று, பக்தியின் முழுமையான பயனை அடைந்து, உத்தம பக்தர்களாக விளங்கிட மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

देहेन्द्रियप्राणमनोधियां यो जन्माप्ययक्षुद्भयतर्षकृच्छ्रैः।
संसारधर्मैरविमुह्यमानः स्मृत्या हरेर्भागवतप्रधानः।।

தேஹேந்த்ரியப்ராணமநோதியாம் யோ
ஜந்மாப்யயக்ஷுத்பயதர்ஷக்ருச்ச்ரை:।
ஸம்ஸாரதர்மைர்ரவிமுஹ்யமாந:
ஸ்ம்ருத்யா ஹரேர்பாகவதப்ரதாந:।।

(ஸ்ரீமத்பாகவதம் - நவயோகி ஸம்வாதம் 11-2-49)

பரம்பொருள் தத்துவத்திலேயே நிலைத்திருப்பவனாய், உடல், பொறிகள், ப்ராணன், மனம், புத்தி போன்றவற்றால் அனுபவிக்கப்படும் பிறப்பு, இறப்பு, பேராசை, பசி, பயம், குறைபாடுகள் போன்ற பிறவித் துன்பங்களிலிருந்து நன்கு விடுபட்டவன் பக்தர்களுள் தலைசிறந்தவன்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (திருக்குறள் : 4)

விருப்பு வெறுப்பு இல்லாத (இறைவனுடைய) திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஒருபொழுதும் துன்பமானது ஏற்படுவதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7

தற்பெருமையினால் விளையும் கர்வமும், பொறாமையும் பொருளியல் வாழ்வுக்கும் ஆன்மிக வாழ்வுக்கும் இடையூறாகும்.

தற்பெருமை

பொதுவாக, தற்பெருமை என்பது இயல்பாகவே எல்லோருக்கும் இருக்கிறது. தன்னிடம் உள்ள படிப்பு, பணம், பதவி, அழகு, செயல்திறன் போன்றவற்றைக் குறித்துத் தற்பெருமை கொள்ளுதல், மனிதனின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகும்.

தற்பெருமை என்பது நல்லதல்ல என்று சாஸ்திரம் பல கோணங்களில் அறிவுறுத்துகிறது. தனது காண்டீபத்தை இழிவாகப் பேசுபவரைக் கொல்ல வேண்டும் என்று அர்ஜுனன் வ்ரதம் பூண்டிருந்தான். காண்டீபத்தை இழிவாகப் பேசிய தர்மபுத்ரரை, பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அறிவுரைப்படி, அர்ஜுனன் ஒருமையில் பேசினான். மூத்தவர் ஒருவரை ஒருமையில் அழைத்துப் பேசுவது, அவரைக் கொல்வதற்கு ஸமமாகும்.

அடுத்து, அண்ணனை ஒருமையில் பேசிய குற்றத்திற்காக வெட்கி, தன்னையே மாய்த்துக்கொள்ளத் துணிந்தான் அர்ஜுனன். பகவான் மீண்டும் அவனுக்கு யோசனை கூறினார்: ''உன்னை நீயே புகழ்ந்துகொள். தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளுதல் தன்னைக் கொல்வதற்கு ஸமம்'' என்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தற்பெருமை நிறைந்த மனம் புகழுக்கு அடிமையாகத் தொடங்கி, எப்பொழுதும் புகழ்ச்சியை எதிர்நோக்கும். தன்னைப் புகழ்பவரையே அதற்குப் பிடிக்கும். தன்னிடம் உள்ள குறையைச் சுட்டிக் காட்டுபவரைப் பிடிக்காது. பொன், பெண், மண், புகழ் முதலியவற்றுக்கு மயங்காமல் செயலாற்றுபவன்தான் அறிவாளி. தற்பெருமை கொள்பவன், ஓயாது பாராட்டுக்கு ஏங்குகிறான்.

புகழுக்கு ஏங்குபவன், பகுத்தறிவை இழந்துவிடுவான். நம் வெற்றிக்கு நம் முயற்சி மட்டும் காரணமல்ல. நமது வெற்றியில், பெற்றோர், உற்றார் உறவினர், சமூகத்தினர் எத்தனையோ பேரின் பங்கு இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

இறையருள் இன்றி, ஒரு செயலும் நடைபெறாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எங்கு எச்சிறப்பு காணப்படினும் அது இறைவனின் மகிமை என்பதை உணர வேண்டும். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. தற்பெருமை கொள்பவனால், பிறருடைய சிறப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும். அவனால் மனம் திறந்து பிறரைப் பாராட்ட முடியாது. தற்பெருமையினால் விளையும் கர்வமும், பொறாமையும் பொருளியல் வாழ்வுக்கும் ஆன்மிக வாழ்வுக்கும் இடையூறாகும்.

தன்னைத் தாழ்த்திக்கொள்ளுதல், தன்னை உயர்த்திக்கொள்ளுதல் இரண்டுமே தவறு. மேலும் தன்னை உயர்ந்தவனாக எண்ணிக்கொண்டாலும், பிறரைத் தாழ்வாக எண்ணுவதற்கு நமக்கு தகுதியில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

எல்லோரையும் மதித்துப் பழக வேண்டும். தற்பெருமை கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் நம் பண்பாட்டில் எல்லோரையும் வணங்கும் பழக்கம் இருக்கிறது.

தற்பெருமையை விடுத்து, இறையருளை நன்றியோடு நினைந்து, நம் வெற்றியில் பிறரது பங்களிப்பை உணர்ந்து, பணிவோடு வாழ்ந்திட மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मा कुरु धनजनयौवनगर्वं हरति निमेषात्कालः सर्वम्।
मायामयमिदं अखिलं बुद्ध्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा।।

மா குரு தநஜநயௌவநகர்வம்
ஹரதி நிமேஷாத்கால: ஸர்வம்।
மாயாமயமிதம் அகிலம் புத்த்வா
ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிஶ விதித்வா।।

(பஜ கோவிந்தம் : 11)

செல்வம், ஆள்பலம், இளமை - இவை குறித்துத் தற்பெருமை கொள்ளாதே. காலமானது, கண்ணிமைப்பதற்குள் அனைத்தையும் கவர்ந்து சென்றுவிடும். இந்த உலகம் அனைத்தும் மாயை என்பதை உணர்ந்து, பரம்பொருள் தத்துவத்தை உணர்ந்து, அதில் நிலைத்திருப்பாயாக.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (திருக்குறள் : 978)

யாண்டும் பணிவோடு இருத்தலே சான்றோர் இயல்பாகும். தன்னை வியந்து, தற்பெருமைகொள்ளுதல் சிறுமையேயாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8

தூய்மையும் ஒழுங்குப்பாடும் மனிதனை தேவநிலைக்கு உயர்த்தும். எவ்வுயிரையும் துன்புறுத்தாமல் இருப்பதும், தன்னை வியந்து கொள்ளாமல் அடக்கத்துடன் இருப்பதும் கூட தெய்விக குணங்களாகும்.

தெய்விக குணங்கள்

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் இருப்பத்தாறு தெய்விக குணங்களைக் குறிப்பிடுகிறார்.

அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞானயோகத்தில் நிலைத்திருத்தல், ஈகை, புலனடக்கம், இறைவழிபாடு, அருள்நூல்களை ஓதுதல், தவம், நேர்மை, கொல்லாமை, வாய்மை, பொறுமை, தியாகம், அமைதி, புறங்கூறாமை, உயிர்களிடத்தில் கருணை, அவாவின்மை, மென்மை, நாணம், வீண் சேஷ்டை இன்மை, பிறர் தன்னைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியாமை, பொறுமை, மன உறுதி, தூய்மை, துன்புறுத்தாமை, செருக்கின்மை முதலான இருபத்தாறு தெய்விக குணங்களைப் பற்றி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுகிறார். அறிவு, அறம், அன்பு ஆகிய மூன்றுதான் மனித வாழ்வின் நோக்கம். அறம் என்ற சொல்லுக்கு நற்பண்புகள் என்று ஒரு பொருள் உண்டு.

இறைவன் இவ்வுலகில் மனிதர்களையும் பொருட்களையும் படைத்துள்ளார். மனிதர்களை நேசிப்பதற்காகவும், பொருட்களைப் பயன்படுத்துவதற்காகவும் படைத்துள்ளார். ஆனால் மனிதன் பொருட்களை நேசிக்கிறான், மனிதர்களைப் பயன்படுத்திக்கொள்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகியல் வாழ்வில் பிறர் தங்களது சுயநலத்திற்காக, தம்மைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதை பலர் உணரவே செய்கிறார்கள்.

நாம் உலகில் எல்லோரிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், பிறர் தங்களது சுயநலத்திற்காக, நம்மைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்வதை அனுமதிக்காமல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பிறர் நம்மைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்காமல் இருப்பதற்கு தேஜ: என்று பெயர். இது ஒரு தெய்விக குணம் என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர். தேஜஸ் என்ற சொல், அறவாழ்க்கையைக் கடைப்பிடிப்பதால் முகத்தில் ஏற்படும் ஒளியைக் குறித்தாலும், சமூக நன்மையின் பொருட்டு, நற்காரியங்களை முன்நின்று நிகழ்த்தும் திறமையையும் அது குறிக்கும்.

கோபம் என்பது மனதில் தோன்றும் வலியாகும். புறச்சூழல்கள், சுற்றியுள்ள மனிதர்கள் நமக்கு எவ்வளவு எரிச்சலூட்டினாலும், கோபப்படாமல், பொறுமையாக இருத்தல் ஓர் உயர்ந்த தெய்விக குணமாகும்.

உடலில் ஏற்படும் சோர்வை வென்று, மனதை உற்சாகப்படுத்திக்கொள்ளுதல், ஒருநாளும் தளர்வறியா மனதோடு இருக்கும் உறுதியும் ஒரு தெய்விக குணமே ஆகும்.

தூய்மையும் ஒழுங்குப்பாடும் மனிதனை தேவநிலைக்கு உயர்த்தும். எவ்வுயிரையும் துன்புறுத்தாமல் இருப்பதும், தன்னை வியந்துகொள்ளாமல் அடக்கத்துடன் இருப்பதும் கூட தெய்விக குணங்களாகும்.

மனிதப் பிறவியின் மாண்பை உணர்ந்து, தெய்விகக் குணங்களை அறிந்து, அவற்றை முயற்சியோடு கடைப்பிடித்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता।
भवन्ति सम्पदं दैवीमभिजातस्य भारत।।

தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசமத்ரோஹோ நாதிமாநிதா।
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத।।

(ஸ்ரீமத்பகவத்கீதை 16-3)

பரதகுலத்தில் உதித்தோனே! தன்னைப் பிறர் தவறாகப் பயன்படுத்தாதவாறு காத்துக்கொள்ளுதல், எரிச்சலடையாமல் இருத்தல், தூய்மை, எவருக்கும் துன்பம் தராதிருத்தல், தன்னை வியந்துகொள்ளாமல் இருத்தல் ஆகியவை தெய்விக குணங்களாகும்.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். (திருக்குறள்: 511)

நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து, நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

9

சாஸ்திரத்தை நாமாகக் கற்றால் விளங்காது. குருநாதர் கற்றுக்கொடுத்தால் விளங்கும். குருநாதர் சாஸ்திரத்தை அறிவுபூர்வமாக அறிந்து, அதனைக் கடைப்பிடித்து, பிறரும் அறிவுபூர்வமாக அதனைக் கடைப்பிடிப்பதற்குத் துணைபுரிகிறார்.

குரு

பாரதப் பண்பாட்டில் குருவிற்கு முக்கிய இடமுண்டு. குரு என்பவர் நடமாடும் ஞானப் பொக்கிஷமாவார். உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருவிற்கு ஸமர்ப்பணம் செய்து குருவை வழிபட வேண்டும்.

ஆசார்யரை வழிபடுவது என்பது மெய்யறிவை வழிபடுவதாகும். மெய்யறிவை வழிபடுவது என்பது மெய்யறிவைத் தரும் சாஸ்த்ரத்தை வழிபடுவதாகும். மோக்ஷத்தை விரும்புகின்ற சாதகனுக்கு ஆசார்ய உபாஸநம் மிக முக்கியம்.

சாஸ்த்ரங்கள் குருவிற்குப் பின்வருமாறு இலக்கணங்கள் கூறுகின்றன : ஒரு குருவிடம் சீடனாக இருந்து சாஸ்த்ரத்தை நன்கு கற்றவர், பாபம் செய்யாதவர், ஆசைகளுக்கு அடிமைப்படாதவர், தெளிவாகக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர், எப்பொழுதும் மெய்ப்பொருள் தத்துவத்திலேயே ஒடுங்கியிருப்பவர், நீறுபூத்த நெருப்பைப் போல அமைதியாக இருப்பவர்.

மேலும், தகுதியான மாணவனுக்குத் தன்னிடம் உள்ள ஞானச் செல்வத்தை வாரி வழங்குபவர், அவனுக்கு உற்ற உறவினராக இருப்பவர், அவனது வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பவர் அருட்குருநாதர் ஆவார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குருவை நமஸ்கரித்தால் புண்ணியம் கிடைக்கும், ஞானம் கிடைக்கும். நற்பண்புகள் நம்மையும் அறியாமல் நம் வசமாகும். குருவிடம் பக்தியுள்ளவனுக்குத்தான் ஞானம் வளரும். தன்னைக் காட்டிலும் தனது சீடன் மேன்மையுற வேண்டும் என்று குரு ஸங்கல்பம் செய்ய வேண்டும். நம் சாஸ்த்ரங்களில் உள்ள ஓர் அழகான மேலான அம்சமாகும். சீடனை நமஸ்கரித்த பிறகுதான் குருவானவர் துறவறம் அளிக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

எவருக்கு இறைவனிடம் பரிபூரணமான பக்தி இருக்கிறதோ, அதே அளவு குருவிடமும் பக்தி உள்ளதோ, அவனுக்கு குரு கற்றுக்கொடுப்பதெல்லாம் விளங்கும், கற்றுக்கொடுக்க விட்டுப் போனவையும் தானாக விளங்கும் என்கிறது ச்வேதாச்வதர உபநிஷத்.

குரு என்பது மனிதரல்ல, ஒரு தத்துவம். குருத்வம் - குருவாக இருக்கும் தன்மை என்பது கற்றுக்கொடுக்கும் ஆற்றல். அது ஒரு மனித வடிவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு அது செயல்படுகிறது.

குரு என்பவர் மெய்யறிவைக் கொடுக்கிறார். மெய்யறிவின் வாயிலாக, பிறவாப் பெருநிலையைப் பெற்றுப் பேரின்பத்தை உணர்கிறோம். குருவின்றி வேதாந்தம் விளங்காது. வேதாந்தம் என்ற தாமரையை மலரச் செய்யும் ஸூர்யனாக இருப்பவர் குருநாதர்.

கடல் நீர் உப்பு கரிக்கிறது. அதே கடல் நீர் மேகமாக மாறி, மழையாகப் பொழியும்போது, அது அமுதமாக இனிக்கிறது. சாஸ்திரத்தை நாமாகக் கற்றால் விளங்காது. ஆனால் குருநாதர் கற்றுக்கொடுத்தால் விளங்கும். குருநாதர் சாஸ்திரத்தை அறிவுபூர்வமாக அறிந்து, அதனைக் கடைப்பிடித்து, பிறரும் அறிவுபூர்வமாக அதனைக் கடைப்பிடிப்பதற்குத் துணைபுரிகிறார்.

குருவின் திருவடிகளில் போற்றி வணங்கி, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்படைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

गुरुचरणाम्बुजनिर्भरभक्तः संसारादचिराद्भवमुक्तः।
सेन्द्रियमानसनियमादेवं द्रक्ष्यसि निज हृदयस्थं देवम्॥

குருசராணாம்புஜநிர்பரபக்த:
ஸம்ஸாராதசிராத்பவமுக்த:।
ஸேந்த்ர்யமாநஸநியமாதேவம்
த்ரக்ஷ்யஸி நிஜ ஹ்ருதயஸ்தம் தேவம்॥ (பஜகோவிந்தம்)

எவருக்கு குருவின் திருவடிகளில் முழுமையான பக்தி இருக்கிறதோ, அவர் வெகுவிரைவில் பிறவித்தளைகளிலிருந்து விடுபட்டு, முக்தியை அடைகிறார். புலனடக்கத்தோடு குருவிடம் பக்தி செய்து, இமைப்பொழுதும் நீங்காமல் இதயத்தில் உள்ள இறைவனை நன்கு உணர்வாயாக!

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (திருக்குறள் : 443)

பெரியோரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

10

எவர்களுடைய உள்ளத்தில் அன்பு, அறிவு, அறம், அமைதி, ஆனந்தம் அனைத்தும் நிறைந்திருக்கிறதோ, அவர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்திருக்கிறார்கள்.

இறைசிந்தனை

ஆன்மிக வாழ்க்கையில் முன்னேறுவதற்காக பலர் தனிமையான இடங்களை நாடிச் செல்வதுண்டு.

சிலர் வீட்டை விட்டு வெளியேறி, காடுகளுக்கும் குகைகளுக்கும் மலை உச்சிக்கும் செல்வார்கள். அவ்வாறு தனிமையான இடங்களை நாடிச் செல்வதில் தவறில்லை. ஆனால் அங்கு சென்று வீட்டை எண்ணிக் கொண்டிருந்தால் பயனில்லை.

எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைக் காட்டிலும் எத்தகைய மனோபாவத்துடன் இருக்கிறோம் என்பதே மிக முக்கியம்.

சிலர் இறைவனின் திருமுன்னிலையில் அமர்ந்திருப்பார்கள். ஆனால் அவர்களது மனம் இறைவழிபாட்டில் ஈடுபடாமல், அலைபாய்ந்தபடி அலைபேசியை ஆராய்ந்து கொண்டிருக்கும்.

இறைவழிபாட்டிற்கென்று அமர்ந்திருக்கும் சிலரது மனம், வாக்கு, செயல் எல்லாம் ஒருங்கிணையாமல் திசைக்கொன்றாய் சிதறிக்கொண்டிருக்கும். ஆனால் எங்கோ வெளியில் நின்று வழிபடும் ஒருவர் உள்ளம் உருகி இறைவனை எண்ணிக் கொண்டிருப்பார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எவர்களுடைய உள்ளத்தில் அன்பு, அறிவு, அறம், அமைதி, ஆனந்தம் அனைத்தும் நிறைந்திருக்கிறதோ, அவர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்திருக்கிறார்கள்.

அத்தகையவர்கள் எங்கிருந்தாலும், எச்செயலைச் செய்துகொண்டிருந்தாலும் அவர்களது உள்ளம் இறைசிந்தனையிலேயே நிலைபெற்றிருக்கும்.

சிலர் பணத்தையே ஆழ்ந்து எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் புலனின்பத்தையும், இன்னும் சிலர் புகழையும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தன்னைப் பற்றி பிறர் கூறும் விமர்சனங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து அதனையே எண்ணிக் கொண்டிருப்பவர்களும் உண்டு.

எந்த இடத்தில் இருந்தாலும், இறைசிந்தனை அகலாது வாழ்பவரே யோகி. அத்தகையவரை உலகம் பிழைக்கத் தெரியாதவர் என்று கூறி, எள்ளி நகையாடலாம். ஆனால் உலகில் அவரே இன்பமான மனிதர்.

இறைசிந்தனையே யோகமாகும். அதனால்தான் பெரியோர்கள், ''இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்'', ''எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை'', ''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்றெல்லாம் பாடினர்.

எந்த இடத்தில் இருந்தாலும், இறைசிந்தனையில் உள்ளத்தை ஆழ்ந்து ஈடுபடுத்தி, பொருள்சேர்ந்த புகழ்மொழிகளால் இறைவனை வாயாரப் பாடி, மனத்தினால் சிந்தித்து, மனத்துக்கண் மாசிலன் ஆகி, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

गुहायां गेहे वा बहिरपि वने वाऽद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम्।
सदा यस्यैवान्तः करण-मपि शंभो तव पदे
स्थितंचेद्योगोऽसौ स च परम-योगी स च सुखी।। १२

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குஹாயாம் கேஹே வா பஹிரபி வநே வாऽத்ரிசிகரே
ஜலே வா வஹ்நௌ வா வஸது வஸதே: கிம்வத பலம்।
ஸதா யஸ்யைவாந்த: கரண-மபி ஶம்போ தவ பதே
ஸ்திதஞ்சேத் யோகோऽஸௌ ஸ ச பரமயோகீ ஸ ச ஸுகீ॥

(ஶிவாநந்தலஹரீ : 12)

ஓ சம்புவே! குகையிலோ வீட்டிலோ வெளியிலோ காட்டிலோ மலையுச்சியிலோ நீரிலோ நெருப்பிலோ ஒருவன் வசிக்கட்டும். அதனால் என்ன பயன், கூறு. எவனுடைய உள்ளமானது எப்பொழுதும் உம்முடைய திருவடியிலேயே நிலைபெற்றிருக்குமோ அதுவே யோகம், அவனே சிறந்த யோகி, அவன்தான் இன்பமான மனிதன்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (திருக்குறள் : 3)

உள்ளமாகிய தாமரை மலரில் எப்பொழுதும் வீற்றிருக்கின்ற இறைவனுடைய மாண்புடைய திருவடிகளை தியானிப்பதன் மூலம் இறைவனை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பார்கள் பேரின்பமாகிய நிலத்தில் எப்பொழுதும் வாழ்வார்கள்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

11

மனதின் இயல்பைப் புரிந்துகொண்டு, இறையருளோடு கூடிய முயற்சியில் மனதை நெறிப்படுத்தி, இறைவனின் திருவடியில் மன மலரை அர்ப்பணம் செய்தால், பேரின்பம் அடையலாம்.

மனம் →

ஆன்மிக வாழ்க்கைப் பயிற்சிகள் அனைத்தும், மனதை நெறிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. மனம் என்பது எப்பொழுதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் இயல்பு படைத்தது.

மனதை அழிக்க வேண்டும், கொல்ல வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். மனதைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை.

இன்ப துன்பங்களை நாம் மனதால்தான் அனுபவிக்கிறோம். மனமே மனிதர்களின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாக இருக்கிறது. உலக விஷயங்களில் உழலும் மனம் பந்தத்திற்கு காரணமாக இருக்கிறது. உலக விஷயங்களில் உழலாத மனம், மோக்ஷத்திற்குக் காரணமாக இருக்கிறது.

தூய்மையான மனம், தூய்மையற்ற மனம் என மனமானது இரண்டுவிதமாகப் பிரிக்கப்படுகிறது. ஆசைகள் நிறைந்த மனம் தூய்மையற்ற மனம். ஆசையற்ற மனமே தூய மனம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிலர் எப்பொழுதும் கால்களை ஆட்டிக்கொண்டே இருப்பர். காரணமின்றி உடலை அசைப்பதற்கு சாபலம் என்று பெயர். உடல் காரணமின்றி அசைந்தால், மனமும் அசையும். உடலை தேவையின்றி அசைத்தல் அஸுர குணம் என்கிறார் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர். மனதுக்கும் உடலுக்கும் தொடர்பு இருக்கிறது. பெரியோர்கள் மனதைக் குரங்கோடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. மனமாகிய குரங்கு காமமாகிய கள்ளைக் குடித்து விட்டது. சினமாகிய தேள் வேறு அந்தக் குரங்கைக் கொட்டிவிட்டது. மேலும் பொருட்பற்று என்ற பேய் அதனைப் பிடித்துவிட்டது. இப்படிப்பட்ட குரங்கைக் கற்பனை செய்ய முடிந்தால், மனித மனதின் ஆட்டங்களை ஒருவாறு புரிந்துகொள்ள முடியும்.

மனதிற்கு இயல்பாக ஸத்விஷயங்களில் ருசி ஏற்படுவதில்லை. அது பெரும்பாலான நேரங்களில் மோஹத்தில் ஆழ்ந்திருக்கிறது. எதில் ஈடுபட வேண்டுமோ, அதில் ஈடுபடுவதில்லை. தேவையற்ற விஷயங்களில் ஆழ்ந்து ஈடுபடுகிறது. மனம் எளிதில் இனக்கவர்ச்சிக்கு ஆட்பட்டு, மயங்கக்கூடிய இயல்பு படைத்தது. பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என விதவிதமான ஆசைகளிலும் எதிர்பார்ப்புகளிலும் உழன்று கொண்டிருக்கிறது.

மனம் இறைவன் திருவடியிலேயே நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் அனைவரின் ப்ரார்த்தனையாக இருக்கிறது. மனதை ஒருநிலைப்படுத்துவதும், ஒழுங்குபடுத்துவதும் இறைவனின் அருளோடு கூடிய முயற்சியாலேயே ஸித்திக்கும். எனவே நம் முயற்சி பயன் தர வேண்டும் என்று பகவானிடம் ப்ரார்த்தனை செய்ய வேண்டும். வெறும் ப்ரார்த்தனை மட்டுமே பயன் தருவதில்லை. மனதை வசப்படுத்துவதற்கு, இறையருளோடு கூடிய முயற்சி தேவை. மனதின் இயல்பைப் புரிந்துகொண்டு, மனதை நெறிப்படுத்துவதற்கு இறையருளோடு கூடிய முயற்சியில் ஈடுபட்டு, இறைவனின் திருவடியில் மன மலரை அர்ப்பணம் செய்து, பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

सदा मोहाटव्यां चरति युवतीनां कुच-गिरौ
नटत्याशा शाका स्वटति झटिति स्वैरमभितः।
कपालिन् भिक्षो मे हृदय-कपि-मत्यन्त-चपलं
दृढं भक्त्या बध्द्वा शिव भवदधीनं कुरु विभो।।

ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீநாம் குச-கிரௌ
நடத்யாஶா ஶாகா ஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபித:।
கபாலிந் பிக்ஷோ மே ஹ்ருதய கபிமத்யந்த சபலம்
த்ருடம் பக்த்யா பத்த்வா ஶிவ பவததீநம் குரு விபோ।।

(ஶிவாநந்தலஹரீ : 20)

ஓ சிவபெருமானே! எங்கும் நிறைந்தவரே! கபாலம் ஏந்திப் பிச்சை கேட்பவரே! எனது மனமானது எப்பொழுதும் மதிமயக்கமாகிற காட்டில் திரிகிறது. பெண்களின் உடல் அங்கங்களை எண்ணி கூத்தாடுகிறது. ஆசைளாகிய கிளைகளில் வேகமாக நாற்புரமும் இஷ்டப்படி தாவுகிறது. இவ்வாறு மிகுதியாகக் கூத்தாடும் எனது மனமாகிய குரங்கை அன்பெனும் கயிற்றால் உறுதியாகக் கட்டி உமது வசமாக்கிக் கொள்வீராக!

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதுஎன் கண்டாய் பராபரமே

- தாயுமானவர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

12

ஆத்மா-தூய உணர்வு யாண்டும் பாதுகாப்பே வடிவானது. உடல் மனக் கூட்டமைப்பு ஒருபோதும் பாதுகாப்பானதல்ல. இந்த உண்மையைத் தெரிந்துகொண்ட பிறகு, ஒருவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிப்பதில்லை.

பாதுகாப்பு

மனிதனின் அனைத்துவித அச்சங்களுக்கும் அடிப்படை பாதுகாப்பின்மையே ஆகும். பொதுவாக, மனிதனுக்கு உடல் ஆரோக்யம், உறவுகள், பண்ம் - என அனைத்தைக் குறித்தும் ஒரு பாதுகாப்பின்மை இருக்கிறது.

எங்கு த்வைத புத்தியாகிய இருமை எண்ணம் இருக்கிறதோ, அங்கு பயம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இருமை உள்ள இடத்தில் பயம் இருந்தே தீரும்.

எப்பொழுதும் தனக்குப் பிறர் ஆபத்து விளைவித்துவிடுவார்களோ என்ற பயம் இடையறாது இருந்துகொண்டே இருக்கிறது. தனக்கு வேறாக இருப்பவற்றைக் கண்டு பயம் ஏற்படுவது இயல்பு.

மறைத்தல் என்பது இறைவனின் ஐந்தொழில்களுள் ஒன்று. இறைவனுடைய மாயை மறைப்பதால், மனிதன் இறைவனைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறான். அதனால் உடலைத் தான் என்று எண்ணுகிறான்.

இறைவனை மறந்தவனுக்குத் தவறான எண்ணங்கள் தோன்றும் வாய்ப்பு அதிகம். உடலைத் தான் என்று எண்ணும் எண்ணம் அதிகமாக இருப்பதால், தனக்குள் இருக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவனைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் வேரூன்றுவதில்லை.

எல்லாவற்றிலும் எல்லாமாகவும் இறைவன்தான் இருக்கிறார் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த உடலுக்குள் எப்படி ஓர் உயிர் தத்துவம் இருக்கிறதோ, அதுபோல பிரபஞ்சமாகிய உடலில் ஓர் உயிர்த் தத்துவம் இருக்கிறது.

தனக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்தால்தான், எல்லோருக்குள்ளும் இருக்கின்ற இறைவனை உணர்ந்துகொள்ள முடியும். உண்மையில் இறைவனுக்குள்தான் நாம் எல்லோருமே இருக்கிறோம்.

உடலைத் தான் என்று எண்ணி பயப்படுகின்ற மனிதன், பயத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுடைய திருவடித் தாமரையை ஆழ்ந்து எண்ணினால், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரமாத்மாவை உணர்ந்து, துன்பத்திலிருந்து விடுபடலாம்.

துன்பத்திலிருந்தும் பயத்திலிருந்தும் விடுபடுவதற்காகவே வைதிக தர்மமாகிய பாகவத தர்மம் அருளப்பட்டது. வைதிக தர்மம் ச்ருதிரூபமானது, பாகவத தர்மம் ஸ்ம்ருதிரூபமானது. வைதிக தர்மமாகிய பாகவத தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்களின் வாழ்வில் எவ்வித குழப்பத்திற்கும் இடமில்லை. அவர்கள் அநாயஸமாக வாழ்க்கை நடத்துவார்கள்.

உடல், மனம், புத்தி, இந்த்ரியங்கள் முதலியவற்றால் செய்யும் அனைத்து ஆன்மிகக் கடமைகளையும், உலகியல் கடமைகளையும் பகவானின் திருவடியில் ஸமர்ப்பித்தல் பாகவத தர்மத்தின் வெளிப்பாடு.

ஆத்மா - தூய உணர்வு யாண்டும் பாதுகாப்பே வடிவானது. உடல் மனக்கூட்டமைப்பு ஒருபோதும் பாதுகாப்பானதல்ல. இந்த உண்மையைத் தெரிந்துகொண்ட பிறகு, ஒருவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிப்பதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பார்க்குமிடம் எங்கும் நீக்கமறத் தன்னையே கண்டு இன்புற்று, அச்சமின்மையில் நிலைபெற்றுப் பேரின்பமடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

भयं द्वितीयाभिनिवेशतः स्यादीशादपेतस्य विपर्ययोऽस्मृतिः।
तन्माययातो बुध आभजेत्तं भक्त्यैकयेशं गुरुदेवतात्मा।।

பயம் த்விதீயாபிநிவேஶத:
ஸ்யாதீஶாதபேதஸ்ய விபர்யயோऽஸ்ம்ருதி:।
தந்மாயயாதோ புத ஆபஜேத்தம்
பக்த்யைகயேஶம் குருதேவதாத்மா।।

(ஸ்ரீமத்பாகவதம் 11-2-37)

பகவானின் மாயையால் மனிதன் பகவானை மறந்து, தன்னை உடலாகக் கருதிக்கொண்டு, இருகைளில் சிக்கி, அச்சத்திற்கு ஆட்படுகிறான். எனவே, அறிவாளியானவன் அச்சத்திலிருந்து விடுபடும்பொருட்டு, குருவாகவும் பகவானாகவும் ஆத்மாவாகவும் விளங்கும் அந்தப் பரம்பொருளை ஞானபூர்வமான பக்தியால் வழிபட வேண்டும்.

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீயன்றோ பராபரமே. (தாயுமானவர்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



தக்ஷிணாம்னாய ஸ்ரீச்ருங்கேரி ஶாரதாபீடம்
ஜகந்மாதா ஸ்ரீஶாரதாம்பாள்,
ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்
ஜகத்குரு ஸ்ரீபாரதீதீர்த்த மஹாஸந்நிதாநம்
ஜகத்குரு ஸ்ரீவிதுசேகர பாரதீ ஸ்ரீஸந்நிதாநம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

13

பரம்பொருளே
நான்,
நானே பரம்பொருள்
என்ற எண்ணமாகிய
சிவாத்ம புத்தியானது
மோக்ஷத்தைக்
உணர்த்தும்.

சிவாத்மபுத்தி

எதனை எண்ணுகிறோமோ அதன்மயமாக ஆவது மனதின் இயல்பு. இடையறாது உலகப் பொருட்களையே எண்ணிக் கொண்டிருப்பதற்கு விஷயாத்மபுத்தி என்று பெயர். தன்னை உடலாக எண்ணிக் கொள்வதற்கு தேஹாத்மபுத்தி என்று பெயர்.

பலர் காலை முதல் இரவு வரை பணத்தையும் பொருட்களையுமே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வீடுமயமாய், வாஹனமயாய், வீட்டில் உள்ள பொருட்கள் மயமாய், உறவுகள் மயமாய் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

விஶேஷேந ஸிநோதி பத்நாதி இதி விஷய:। - நன்றாக நம்மைக் கட்டிப் போடுவதற்கு விஷயம் என்று பெயர். சிறுவயதில் கிலுகிலுப்பு நம்மைக் கட்டிப் போட்டத்தில் தொடங்கி, இன்று எத்தனையோ பொருட்கள் நம் மனதைக் கட்டிப் போடுகின்றன. விஷயங்களில் உள்ளதைக் காட்டிலும் நம் உடலில் நமக்கு அதிகப் பற்று இருக்கிறது. உடல் இல்லையென்றால் விஷயங்களால் பயன் இல்லை. எனவே, மனிதன், தனது உடலில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், சொத்துக்களை விற்றாவது உடலைக் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு பொருள்மயமாகவும் உடல்மயமாகவும் வாழும் மனிதனுக்கு சாஸ்த்ரம் பின்வருமாறு உபதேசிக்கிறது : நிறைய பாபம் செய்தால், கீழான விலங்குப் பிறவிகள் கிடைக்கும் என்றும், புண்ணியக் காரியங்களைச் செய்வதால், மேலான பிறவி கிடைக்கும் என்று கூறுகிறது.

சாஸ்த்ரத்தின் இந்த உபதேசத்தைக் கேட்டவுடன் ஜீவாத்மபுத்தி - தன்னை உயிராக எண்ணிக் கொள்ளும் எண்ணம் உள்ளத்தில் எழுகிறது. அதனோடுகூட, சிவதாஸாத்மபுத்தி - நான் இறைவனின் அடியவன் என்ற எண்ணத்தையும் சாஸ்த்ரம் சேர்த்து ஏற்படுத்துகிறது. கடந்துபோன பிறவிகளையும் இனி வரப் போகின்ற பிறவிகளையும் எண்ணினால், ஜீவாத்ம புத்திதான் வரும், தன்னை உடலாக எண்ணிக்கொள்ளத் தோன்றாது.

அடுத்து இந்தப் பிறவிப் பெருங்கடலிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணி முயற்சித்தால், சிவாத்ம புத்தியை உள்ளத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. பரம்பொருளே நான், நானே பரம்பொருள் என்ற எண்ணமாகிய சிவாத்மபுத்தியானது மோக்ஷத்தைக் கொடுக்கும்.

ஜீவாத்ம புத்தி மேலான மறுபிறவியைக் கொடுக்கும். மேலான பிறவியாகிய மனிதப் பிறவியைப் பெற்று, இப்பிறவியில் பக்தி செய்தால், சிவாத்மபுத்தியைப் பெறலாம்.

பக்தியை வெளிப்படுத்துவதற்கு முதல்படியாக கரணங்களை இறைவனுக்கு ஸமர்ப்பணம் பண்ண வேண்டும். பகவான் கொடுத்த கரணங்களை விஷயங்களை அனுபவிப்பதற்கு மட்டும் பயன்படுத்தாமல், இறைவனுக்காக பயன்படுத்த வேண்டும்.

சிவதாஸாத்மபுத்தியுடன் மனம், வாக்கு, காயம் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து, சிவாத்ம ஞானத்தைப் பெற்று, பிறவித் தளைகளிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मनस्ते पादाब्जे निवसतु वचःस्तोत्र-फणितौ
करौचाभ्यर्चयां श्रुतिरपि कथाकर्णेन-विधौ।
तव ध्याने बुद्धि-र्नयन-युगलं मूर्ति-विभवे
परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः।।

மநஸ்தே பாதாப்ஜே நிவஸது வச: ஸ்தோத்ர-பணிதௌ
கரௌசாம்யர்சயாம் ஶ்ருதிரபி கதாகர்ணேந-விதௌ।
தவ த்யாநே புத்திர்-நயந-யுகலம் மூர்த்தி-விபவே
பரக்ராந்தாந் கைர்வா பரமஶிவ ஜாநே பரமத:।।

(ஶிவாநந்தலஹரீ : 7)

என் மனம் இறைவனின் திருவடித் தாமரைகளில் நிலைத்திருக்கட்டும். என்னுடைய சொற்கள் உன்னுடைய பொருள்சேர்ந்த புகழ்மொழிகளையே பேசட்டும். கரங்கள் இரண்டும் உன்னை அர்ச்சிக்கட்டும். செவிகள் உன் புகழைக் கேட்பதிலேயே ஆழ்ந்திருக்கட்டும். என் கண்கள் இரண்டும் உனது வடிவத்திலேயே ஆழ்ந்திருக்கட்டும். பிற நூல்களால் பயன் என்ன?

தலையே நீ வணங்காய் - தலைமாத்து கண்டாய்
நெஞ்சே நீ நினையாய் - நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்
வாயே வாழ்த்து கண்டாய் - மதயானை உரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்(து) ஆடும்பி ரான்தன்னை
வாயே வாழ்
நெஞ்சே நீ நினையாய்.
கைகாள் கூப்பித் தொழீர் - கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

(திருநாவுக்கரசர் தேவாரம் 4.9)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

14

பிறருக்குத் துன்பம் தராததாக பொய்கலவாததாக அன்புநிறைந்ததாக நமக்கும் பிறருக்கும் நன்மை பயப்பதாக உடைய சொற்களை மொழிதலே மேலான அறம் எனப்படும்.

வாக்கு

இறைவன் மனித உடலில் வாழ்கின்ற உயிருக்கு வாக்கு என்ற கருவியை அருளியுள்ளார். அதனைப் பயன்படுத்தி, எல்லோரிடத்திலும் பண்பட்ட சொற்களையே பேச நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஒருவர் எதை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசிவிட முடியாது. சரியான நேரத்தில் சரியான நபரிடம் சரியான சொற்களைக் கூறுதல் மிகப் பெரிய அறமாகும். அதற்கு மிகுந்த இறையருள் தேவை.

சொற்களைக் கையாளும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பேசும்போது, நான்கு விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்று பெரியோர் கூறுகின்றனர்.

1. நம்முடைய பேச்சு பிறருடைய மனதைத் துன்புறுத்துவதாக இருக்கக் கூடாது.
2. நம்முடைய பேச்சில் பொய் கலந்திருக்கக் கூடாது.
3. அன்போடு பேச வேண்டும்.
4. நமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் சொற்களையே பேச வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறருடைய குறையைச் சுட்டிக் காட்டும்போதுகூட, முதலில் அவர்களுடைய நிறையைக் கூறிவிட்டு, பிறகு குறையை மென்மையாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

''நமக்குப் பிடித்தவற்றை மட்டும் இனிக்க இனிக்கப் பேசுபவர்கள் எளிதில் கிடைத்துவிடுவார்கள். ஆனால் நமக்குப் பிடிக்காவிட்டாலும், நன்மை பயப்பதைக் கூறுபவர்களும், அதனைக் கேட்பவர்களும் எளிதில் கிடைக்க மாட்டார்கள்'' என்பது விதுர நீதி.

நல்ல சொற்கள் விலை மதிக்க முடியாதவை. வேதம், கீதை, திருக்குறள் முதலான சாஸ்த்ரங்கள் முழுவதிலும் உள்ள சொற்கள் நம் வாழ்க்கையைப் பண்படுத்துகின்றன.

உலகில் பொதுவாக ஒருவர் அணிகலன்களை அணிந்துகொண்டால், பிறருக்குப் பொறாமை ஏற்படுகிறது. அதனை அணிபவருக்கும் கர்வம் உண்டாகிறது. சொல்லாகிய அணிகலனால் பொறாமையோ கர்வமோ உண்டாவதில்லை.

நல்ல சொல் உள்ளத்தைப் பண்படுத்துகிறது. நல்ல சொற்களின் பெருமை எழுத்தில் அடங்காதது.

ஸத்பிஸ்து லீலயா ப்ரோக்தம் ஶிலா லிகிதமக்ஷரம்।
அஸத்பி: ஶபதே நாபி ஜலதே லிகிதமக்ஷரம்।।

மஹான்கள் விளையாட்டாகக் கூறும் சொற்கள்கூட, கல்மேல் எழுத்தைப் போன்றவை. ஒழுக்கமில்லாதவர்கள் சபித்தால்கூட, அந்தச் சொற்கள் நீர்மேல் எழுத்தைப் போன்றவை.

மேலும், ''அறிவாளிகளுடைய சொற்களுக்குப் பின்னால் பொருள் ஓடிவருகிறது'' என்றார் காளிதாஸர்.

சொற்செல்வத்தின் பெருமையை உணர்ந்து, சொற்களை முறையாகப் பயன்படுத்தி, சொல்லரிய நெறியைச் சொல்லால் உணர்ந்து, பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

करे श्लाघ्यस्त्यागः शिरसि गुरुपादप्रणयिता
मुखे सत्या वाणी विजयि भुजयोर्वीर्यमतुलम्।
हृदि स्वच्छा वृत्तिः श्रुतमधिगतं च श्रवणयोः
विनाप्यैश्वर्येण प्रकृतिमहतां मण्डनमिदम्।।

கரே ஶ்லாக்யஸ்த்யாக: ஶிரஸி குருபாதப்ரணயிதா
முகே ஸத்யா வாணீ விஜயி புஜயோர்வீர்யமதுலம்।
ஹ்ருதி ஸ்வச்சா வ்ருத்தி: ஶ்ருதமதிகதம் ச ஶ்ரவணயோ:
விநாப்யைஶ்வர்யேண ப்ரக்ருதிமஹதாம் மண்டநமிதம்।।
(பர்த்ருஹரி நீதிசதகம் : 65)

கைகளுக்கு மேலான ஈகை; தலைக்கு குருவின் திருவடியில் வீழ்ந்து வணங்குதல்; வாய்க்கு உண்மையான சொற்கள்; வெற்றி மிகுந்த தோள்களுக்கு ஒப்பற்ற வீரம்; உள்ளத்தில் தூய எண்ணங்கள்; செவிகளுக்கு வேதக் கல்வி இவையே உலகியல் வாழ்வில் செல்வமில்லாதவிடத்தும், பெரியோர்களிடத்துள்ள இயற்கையான செல்வங்கள்.

பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம் மற்று ஒவ்வார் - மின்னுமணி
பூணும் பிற உறுப்புப் பொன்னே அது புனையாக்
காணும் கண் ஒக்குமோ காண். (நன்னெறி : 40)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

15

உடற்பற்றை நீக்கி, இந்த உலகில் இறைவனின் திருவடித் தாமரைகளை இடையறாது வழிபடுபவன் எதைக் குறித்தும் அச்சப்பட மாட்டான்.

அச்சம் தவிர்

அனைத்து உடல்களிலும் வாழ்கின்ற உயிர்களுக்கு, உண்ணுதல், உறங்குதல், இனப்பெருக்கம் செய்தல், அச்சப்படுதல் ஆகிய நான்கும் இயல்பாக இருக்கின்றன.

இயல்பான அச்சம், சாஸ்த்ரங்கள் மறுபிறவியைக் குறித்து ஏற்படுத்தும் அச்சம், வாழ்க்கை அனுபவங்களால் ஏற்படும் அச்சம், கற்பனையால் விளையும் அச்சம் எனப் பலவித அச்ச உணர்வுகள் மனிதனின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்றன. இன்றைய நாள் நன்றாகவே போனாலும், நாளையைக் குறித்த பயம் இருக்கிறது.

இயல்பான பயம் என்பது எல்லோருக்கும் இருக்கிறது. அது தவிர, தண்ணீரைக் கண்டு அஞ்சுதல், நெருப்பைக் கண்டு அஞ்சுதல், குறிப்பிட்ட சில மனிதர்களை, சூழ்நிலைகளைக் கண்டு அஞ்சுதல் என்ற வகை அச்சம் இருக்கிறது.

தனித்தன்மையால் நம்மையும் அறியாமல் ஒரு பயம் இருக்கிறது. அந்தப் பயத்தை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. நமக்கு எவையெல்லாம் அச்சத்தைத் தருகின்றன என்று கண்மூடி அமர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவாளி பயப்பட வேண்டியதற்குப் பயப்படுவான். பாபம் செய்ய அஞ்சுவான் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

கண்காணிக்கும் கருவிக்கு அஞ்சி நடக்கும் பலர், இறைவனைக் குறித்து அஞ்சுவதில்லை. பாபம் செய்ய பயப்படுவதில்லை. சிலர் அறம் செய்யவே பயப்படுகிறார்கள்.

பலருக்கு முதுமைக்காலம் மிகுந்த அச்சத்தைத் தருகிறது. வயதான காலத்தில் தன்னை யார் கவனித்துக் கொள்வார்கள், தன்னுடைய பணம் என்னவாகும் என்றெல்லாம் பயப்படுகிறார்கள். எல்லோருக்கும் நோய் மிகுந்த அச்சத்தைத் தருகிறது.

சாஸ்த்ரம் பாபம் செய்பவருக்கு பல்வகையான பயங்களை உள்ளத்தில் விதைக்கிறது. அது நியாயமான பயம்.

இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களுக்குப் பயப்பட ஒன்றுமில்லை. வேத சாஸ்த்ரங்களில் அடிக்கடி இந்தக் கருத்து வலியுறுத்திக் கூறப்படுகிறது.

பயக்ருத் பயநாஶந:। என்று இரண்டு நாமங்கள் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் உள்ளன. அச்சத்தை உண்டுபண்ணுபவரும் அவரே, அச்சத்தைப் போக்குபவரும் அவரே. கடவுளுக்குப் பயந்து, அதாவது அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் காற்று வீசுகிறது, சூரியன் உதிக்கிறான் என்கிறது வேதம்.

இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்திருந்து, பயத்தை வென்று, பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

தன் அடியவர்களை ஒருபொழுதும் கைவிடாதவன் அச்யுதன். அச்யுதனின் திருவடிகளைப் பற்றினால் அனைத்து அச்சங்களும் அகலும். எப்பொழுதும் பயமில்லை. எதனைக் கண்டும் பயமில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मन्येऽकुतश्चिद्भयमच्युतस्य पादाम्बुजोपासनमत्र नित्यम्।
उद्विग्नबुद्धेरसदात्मभावाद् विश्वात्मना यत्र निवर्तते भीः।।

மந்யே஽குதஶ்சித்பயமச்யுதஸ்ய
பாதாம்புஜோபாஸநமத்ர நித்யம்।
உத்விக்நபுத்தேரஸதாத்மபாவாத்
விஶ்வாத்மநா யத்ர நிவர்த்ததே பீ:।।

(ஸ்ரீமத்பாகவதம் - நவயோகீ ஸம்வாதம் 11-2-33)

இவ்வுலக வாழ்க்கையில், தானல்லாத உடலைத் தான் என்று எண்ணுகின்ற காரணத்தால், எப்பொழுது பார்த்தாலும் ஏதேனும் ஒன்றைக் குறித்து மனம் கவலையில் ஆழ்கிறது. உடல்பற்றை நீக்கி, இந்த உலகில் இறைவனின் தாமரைத் திருவடிகளை இடையறாது வழிபடுபவன், எதைக் குறித்தும் பயப்பட மாட்டான்.

பலபல காமத்தராகிப் பதைத்தெழு வார்மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாயமலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை.

(திருநாவுக்கரசர் தேவாரம் 4-2-5)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

16

பணத்தினால்
வரும் இன்பம்,
இருமை உலகப்
பொருட்களால் வரும்
இன்பம் நிலையற்றவை.
துன்பம் கலவாத,
நிலையான தடைப்படாத
இன்பமே நம் இயல்பு
என்கிறது
சாஸ்த்ரம்.

நிலையான இன்பம்

பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை உணர வேண்டுமானால், உலக இன்பங்களில் உள்ள குறைபாடுகளை உணர வேண்டும். இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் இன்பங்கள், துன்பம் கலந்தவை, நிறைவைத் தராதவை, நம்மை அடிமைப்படுத்தும் இயல்புடையவை.

இவ்வுலக வாழ்வில் மட்டுமல்ல, புண்ணியங்களைச் செய்து ஸ்வர்க்க லோகத்திற்குச் சென்றாலும் புலனின்பத்தின் இயல்பு அத்தகையதே ஆகும். புண்ணியத்திற்கேற்ப அந்த உலகங்களில் இருக்கலாம், புண்ணியம் தீர்ந்தபிறகு, மீண்டும் பூலோகத்திற்கு வந்தாக வேண்டும்.

நாம் உலகில் அனுபவிக்கும் இன்பங்களில் உள்ள குறைபாடுகளையும் அதன் நிலையற்ற தன்மையையும் உணர்ந்துகொள்வதுதான் விவேகம்.

நாக்குக்குச் சுவையாக உண்கிறோம். இதுபோல அனைத்து இந்த்ரியங்களையும் திருப்திபடுத்துகிறோம். இதிலேயே வாழ்நாள் கழிந்துவிடுகிறது.

விசேஷேண ஸிநோதி பத்நாதி இதி விஷய:।

நன்றாக நம்மைக் கட்டிப்போடுவதுதான் விஷயம் எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புலனின்ப நாட்டத்திலிருந்து விடுபட வேண்டுமானால், புலனின்பத்தில் பற்றற்ற மக்களோடு பழக வேண்டும்.

பொருளின்ப நாட்டமே மனிதனுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கிறது. கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கும் பணம், ஒருவனது உயிருக்கே ஆபத்தாகிவிடுகிறது.

சிறுகச் சிறுகச் செய்த புண்ணியங்கள் ஒருநாள் விவேகத்தைக் கொடுக்கும். ஜன்மாந்தரங்களில் செய்த புண்ணியத்தின் பலனாக விவேகம் தோன்றும் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். சிறுநெருப்புப் பொறி போன்று உள்ளத்தில் இருக்கும் அந்த விவேகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

அதற்கு மறுபடியும் பூஜை, ஜபம், தியானம் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். அவ்வாறு செய்தால் மனத்தூய்மையும், மனப்பக்குவமும் ஏற்படும். பிறகு புலனின்பங்களில் பற்றற்ற தன்மை ஏற்படும்.

அவ்வாறு விவேக வைராக்யத்தை ஸம்பாதித்தால் மட்டும் போதாது. ஒரு ஸத்குருநாதரைச் சென்று அடைய வேண்டும். விஷய ஸுகங்களில் உள்ள தீவிர இச்சையை விட்டுவிட்டு, குருநாதரை, சரணடைய வேண்டும். குருவிடம் சென்று மெய்யறிவைக் கேட்டுப் பெற வேண்டும். அவ்வாறு நிலையான அறிவை விரும்புபவனுக்கு ஜிஜ்ஞாஸு என்று பெயர்.

பணத்தினால் வரும் இன்பம், இருமை உலகப் பொருட்களால் வரும் இன்பம் நிலையற்றவை. நிலையற்ற இன்பத்தை அடைய முடியும். ஆனால் நிலையான இன்பத்தை அறியத்தான் முடியும் என்கிறது சாஸ்த்ரம். துன்பம் கலவாத, தடைப்படாத இன்பமே நம் இயல்பு என்கிறது சாஸ்த்ரம்.

பொருளின்ப நாட்டத்தை விடுத்து, அறச்செயல்களில் ஆழ்ந்து ஈடுபட்டு, குருநாதரின் திருவடி நிழலில் சரணடைந்து, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तस्माद् गुरुं प्रपद्येत जिज्ञासुः श्रेय उत्तमम्।
शाब्दे परे च निष्णातं ब्रह्मण्युपशमाश्रयम्।।

தஸ்மாத் குரும் ப்ரபத்யேத ஜிஜ்ஞாஸு: ஶ்ரேய உத்தமம்।
ஶாப்தே பரே ச நிஷ்ணாதம் ப்ரஹ்மண்யுபஶமாஶ்ரயம்।।

(ஸ்ரீமத்பாகவதம் - 11-3-21)

எனவே, உயர்ந்த நன்மையாகிய இன்பத்தை அறிய விரும்புபவன், வேதாந்த சாஸ்த்ரத்தை விளக்கிக் கூறுபவரும், மெய்ப்பொருளில் ஒடுங்கியிருப்பவருமான குருநாதரை சரணடைய வேண்டும்.

மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்குஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

- தாயுமானவர்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

17

ஒருவரை
விரும்புவதிலோ
வெறுப்பதிலோ
தவறில்லை. ஆனால்,
அது மிகத் தீவிரமாக,
ஆழ்மன அமைதியைக்
குலைக்கும் விதத்தில்
இருப்பதுதான்
மாபெரும் தவறு.

விருப்பு வெறுப்பு

உலகில் உயிர்கள் அனைத்தும் தத்தமது இயல்புப்படி வாழ்கின்றன. மனிதர்கள் அனைவரும் ஒரே விதத்தில் இருப்பதில்லை. ஒவ்வொருவரும் அவரவரின் கர்மவினைகள், சூழ்நிலைக்கேற்ப உலகில் செயல்புரிகின்றனர்.

எவ்வாறு செயல்புரிந்தாலும், குறைவற்ற பேரின்பத்தை உணர்வதே, உலகில் வாழும் அனைத்து மனிதர்களின் குறிக்கோள். அப்பேரின்பத்தை உணர வேண்டுமானால், அதற்குத் தெளிந்த மெய்யறிவைப் பெற வேண்டும். மெய்யறிவைப் பெறுவதற்கு, உள்ளமானது உரிய தகுதியையும், தூய்மையையும் பெற்றிருக்க வேண்டும்.

அறியாமை, விருப்பு, வெறுப்பு, ஐயம், திரிபு முதலியவை மனித மனத்தில் உள்ள மாசுகள். மனத்துக்கண் மாசிலனாக இருந்தால்தான் மெய்யறிவைப் பெற முடியும்.

விருப்பு வெறுப்புக்களைக் கையாளுவதே, மனித குலத்தின் மாபெரும் சவாலாகும். நடைமுறை வாழ்வில், அறத்தை அடியொற்றி, நமக்கு விருப்பமானவர்களிடம் ஒருவிதமாகவும், விருப்பமில்லாதவர்களிடம் ஒருவிதமாகவும் நடந்துகொள்கிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''விருப்பும் வெறுப்பும், மனிதனின் நிம்மதியைப் பறிக்கும் வழிப்பறிக்கொள்ளைக்காரர்கள்'' என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கீதையில் கூறியருளியிருக்கிறார்.

ஒருவரை விரும்புவதிலோ வெறுப்பதிலோ தவறில்லை. ஆனால், அது மிகத் தீவிரமாக, ஆழ்மன அமைதியைக் குலைக்கும் விதத்தில் இருப்பதுதான் மாபெரும் தவறு.

விருப்போ வெறுப்போ அதிகமாக தலைதூக்கும் மனதில் அமைதிக்கு இடமில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மனிதர்களை மூன்றுவிதமாகப் பிரிப்பதுண்டு. மனிதர்களை விமர்சிப்பவர்கள் கீழ்த்தரமானவர்கள். நிகழ்வுகளை விமர்சிப்பவர்கள், நடுத்தரமானவர்கள். சிந்தனைகளை, எண்ணங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்பவர்களே மேன்மக்கள்.

மஹாத்மா காந்தியடிகள், ஆங்கிலேயரை வெறுக்கவில்லை, அடிமைப்படுத்தும் அவர்களுடைய கொள்கையைத்தான் வெறுத்தார்.

தன்னைச் சேர்ந்தவர்களிடம் உள்ள தீய பண்புகளைச் சுட்டிக் காட்டுவதற்கும், தன்னைச் சேராத பிறரிடத்து உள்ள நற்பண்புகளைப் புகழ்வதற்கும் மிகுந்த பக்குவமும், பெருந்தன்மையும், நடுநிலைமையும் வேண்டும்.

நடுநிலைமை என்ற அரிய பண்பைக் கடைப்பிடித்து, விருப்பு வெறுப்புகளை அறிவுபூர்வமாகக் கையாண்டு, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

द्वेष्योऽपि संमतः शिष्टस्तस्यार्तस्य यथौषधम्।
त्याज्यो दुष्टः प्रियोऽप्यासीदङ्गुलीवोरगक्षता॥

த்வேஷ்யோऽபி ஸம்மத: ஶிஷ்டஸ்தஸ்யார்தஸ்ய யதௌஷதம்।
த்யாஜ்யோ துஷ்ட: ப்ரியோऽப்யாஸீதங்குலீவோரகக்ஷதா॥

(ரகு வம்ஶம் : 1:28)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோயுற்றவன், மருந்து கசப்பாக இருந்தபோதிலும் அதனை ஏற்பதுபோல, (திலீப மஹாராஜா) பகைவர்களிடத்தும் நற்பண்பு பொருந்தியவனை ஏற்றுக்கொண்டார். நம்முடைய விரலே ஆயினும், பாம்பு அதனைத் தீண்டி அதில் விஷமேறிவிட்டால் அதனை வெட்டிவிடுவதைப்போல, தன்னைச் சார்ந்தவர் தீய குணம் மிக்கவராக இருந்தால், அவரை விலக்கிவிடுவார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. (திருக்குறள் : 118)

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

18

இறைவனே
உலகின்
நியதி வடிவமாக
இருக்கிறார் என்பதை
உணர்ந்துகொண்டு,
நியதிக்கு உட்பட்டு
நடக்க ஒவ்வொருவரும்
கடமைப்பட்டு
இருக்கிறார்கள்.

நியதி

உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை, ஒழுக்கங்களை பெரியோர்கள் வேதநெறிப்படி வகுத்துக் கொடுத்திருக்கின்றனர். இறைவனே உலகின் நியதி வடிவமாக இருக்கிறார் என்பதை உணர்ந்துகொண்டு, நியதிக்கு உட்பட்டு நடக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகில் மக்கள் அமைதியாக வாழ்வதற்கென்றே சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டம் ஒழுங்கின் நோக்கம், மக்களைத் துன்புறுத்துவதல்ல.

மனம் போனபடி வாழ்தலும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதும், சமூகத்தின் அமைதிக்குக் கேட்டை விளைவிக்கும்.

சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளவற்றை, சிறிதளவுகூட பிசகாமல் அப்படியே கடைப்பிடித்து, மக்களையும் அந்நெறியில் செலுத்துவது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

குரு கர்மைவ தஸ்மாத்த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்॥

(ஸ்ரீமத்பகவத்கீதை 4-15)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''உனது முன்னோர்களால் முன்பு செய்யப்பட்டதைப் போல, உனக்குரிய கடமையைச் செய்வாயாக'' என்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

காலம் மாற மாற, வாழ்க்கை நெறிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பலர் எண்ணுகின்றனர். சிலர் பழைய ஸம்ப்ரதாயத்தை விடவே மாட்டார்கள். அவர்கள் பிடிவாதமாக இருப்பதுபோல நமக்குத் தோன்றும். ஆனால் அவர்களுக்கு அதிக பிரச்சனை தோன்றுவதில்லை.

சுதந்திரமாக இருப்பதனால், ஒருவர் நிம்மதியாக இருப்பதாகவும் சொல்லிவிட முடியாது.

நாம் காலத்திற்குத் தகுந்தாற்போல், நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். அதனைச் சிந்தித்துத்தான் செய்ய வேண்டும். இல்லையென்றால், பலவற்றை நாம் இழந்துவிட நேரிடும்.

எது உயர்ந்தது? மரபுசார்ந்த சிந்தனையா? சுயசிந்தனையா? என்ற கேள்வி எழுகிறது. மரபு சார்ந்த சுயசிந்தனையே உயர்ந்தது.

தேரோட்டி சரியான பாதையில் தேரைச் செலுத்துவதைப் போல, தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், சரியான பாதையில் மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டும்.

தவறு செய்த பிறகு, தண்டனை கொடுப்பதைக் காட்டிலும், மக்கள் தவறு செய்யாமல் இருப்பதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

சமூகத்தை மக்களின் விருப்பு வெறுப்போ, ஆட்சியாளரின் விருப்போ வழிநடத்தக் கூடாது. செங்கோல் வடிவிலான அறமே வழிநடத்த வேண்டும்.

சிறிதளவுகூட பிசகாமல், அறத்தை முழுமையாகக் கடைப்பிடித்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, பிறவிப் பயன்பெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

रेखामात्रमपि क्षुण्णादा मनोर्वर्त्मनः परम्।
न व्यतीयुः प्रजास्तस्य नियन्तुर्नेमिवृत्तयः।।

ரேகாமாத்ரமபி க்ஷுண்ணாதா மநோர்வர்த்மந: பரம்।
ந வ்யதீயு: ப்ரஜாஸ்தஸ்ய நியந்துர்நேமிவ்ருத்தய:।।

(ரகு வம்ஶம் 1-17)

நூலளவுகூட பிசகாமல் தேரை அதற்குரிய பாதையில் செலுத்தும் தேரோட்டியைப் போல, (திலீப சக்ரவர்த்தியின் ஆட்சியில் அவரால் வழிநடத்தப்பட்டு) மநுவின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களை சிறிதளவுகூட பிசகாமல் மக்கள் கடைப்பிடித்தார்கள்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (திருக்குறள் : 544)

குடிகளை அன்போடு அரவணைத்து, செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

19

வாழ்க்கையின் குறிக்கோளும் அதனை அடைவதற்குரிய நெறியும் புத்தியாகிய தேரோட்டிக்கு நன்கு தெரிந்திருந்தால்தான் பயணம் செம்மையாக நடைபெறும்.

புத்தி →

உண்ணுதல், உறங்குதல், அச்சப்படுதல், இனப்பெருக்கம் செய்தல் - இந்நான்கு செயல்களும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாக இருக்கின்றன. மனிதனை விலங்கினத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவனது புத்தி சக்தி அல்லது அறிவாற்றல். புத்தி சக்தியைக் கொண்டே, மனிதன் தனது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்கிறான்.

உடலே தேர். பொறிகள் குதிரைகள். புலன்கள் பாதைகள். மனம் கடிவாளக் கயிறு. உயிரே தேரில் பயணம் செய்பவர். புத்தியே தேரோட்டி என்கிறது கடோபநிஷத்.

வாழ்க்கையின் குறிக்கோளும் அதனை அடைவதற்குரிய நெறியும் புத்தியாகிய தேரோட்டிக்கு நன்கு தெரிந்திருந்தால்தான் பயணம் செம்மையாக நடைபெறும்.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் புத்தியை மூன்றுவிதமாகப் பிரித்துக் கூறியிருக்கிறார். செயலைக் குறித்தும் செயலின்மையைக் குறித்தும், செய்யத் தக்கவை செய்யத் தகாதவை குறித்தும், எது பயத்தைத் தரும், தராது என்பது குறித்தும், பந்தம் மோக்ஷம் பற்றியும் தெளிவாக அறிந்திருப்பதே ஸாத்விக புத்தி. தர்ம அதர்மங்களையும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யத் தகுந்தவற்றையும், செய்யத் தகாதவற்றையும் மாற்றிப் புரிந்துகொள்வது ராஜஸ புத்தி. அறியாமையால் சூழப்பட்டு, அதர்மத்தைத் தர்மமாகவும் அனைத்தையும் தவறாகவும் புரிந்துகொள்ளும் புத்தி தாமஸ புத்தி.

அறிதல் நிகழ்வதற்கு, ஸாத்விக புத்தி தேவை. அதற்கு இறையருளும், குருவருளும், சாஸ்த்ரங்களின் அருளும், தனது மனதின் அருளும் மிகவும் இன்றியமையாதவை.

இவை அனைத்தும் இருந்தால், கற்றல் எளிதாக நிகழ்ந்துவிடும். திசைகளின் தலைவனான சூரிய தேவன் காற்றைவிட வேகமாக ஓடக்கூடிய குதிரைகளால் திசைகளைக் கடப்பதுபோல, ரகு தனது நுண்ணிய புத்தியால் தனது புத்தியிலுள்ள அனைத்து குணங்களையும் பயன்படுத்தி, நான்கு கடல்களுக்கு ஒப்பான நான்கு வித்தைகளையும் கடந்தான் என்று காளிதாஸர் ரகுவம்ஸத்தில் குறிப்பிடுகிறார்.

புத்திக்கு ஏழு குணங்கள் இருக்கின்றன. முதலாவது புதிது புதிதாக விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல்.

இரண்டாவது, மிகுந்த பொறுமையோடு, மன ஒருமுகப்பாட்டோடு கேட்டல்.

மூன்றாவது, கேட்டதை உள்வாங்கிக் கொள்ளும் க்ரஹண சக்தி.

நான்காவது, அதனை உள்ளத்தில் தக்க வைத்துக்கொண்டு மறக்காமல் இருக்கும் தாரணா சக்தி. (க்ரஹண சக்தி, தாரணா சக்தி இரண்டும் சேர்ந்ததுதான் மேதாசக்தி எனப்படும்.)

ஐந்தாவது, ஊஹாபோஹ: எனப்படும் சுயமாகச் சிந்திக்கின்ற ஆற்றல்.

ஆறாவது, அர்த்த விஜ்ஞாநம் - சாஸ்த்ரத்தின் அருளோடு, பதத்தின் சரியான பொருளைக் கண்டறிந்து, தகுந்த ஆதாரங்களோடு அந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருளறிதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழாவது, மெய்ப்பொருளை அறிதல்.

ஸாத்விக புத்தியைப் பெற்று, புத்திசக்தியை முறையாகப் பயன்படுத்தி, தெளிந்த அறிவைப் பெற்றுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

शुश्रूषा श्रवणं चैव ग्रहणं धारणं तथा।
ऊहापोहोर्थविज्ञानं तत्त्वज्ञानं च धीगुणाः।।

ஶுஶ்ரூஷா ஶ்ரவணம் சைவ க்ரஹணம் தாரணம் ததா।
ஊஹாபோஹார்த்தவிஜ்ஞானம் தத்த்வஜ்ஞானம் ச தீகுணா:।।
(மஹாபாரதம் : ஆரண்ய பர்வம் 3-2-19 (15691)

கேட்கும் ஆவல், கேட்டல், உள்வாங்கிக்கொள்ளுதல், தக்க வைத்துக்கொள்ளுதல், சுயமாகச் சிந்தித்தல், சரியான பொருளைப் புரிந்துகொள்ளுதல், மெய்ப்பொருள் தத்துவத்தை உணர்தல் ஆகிய ஏழும் புத்தியின் குணங்கள்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (திருக்குறள் : 392)

இலக்கணத்தையும் இலக்கியத்தையும் வழுவறக் கற்கின்றவனுடைய வாழ்க்கை உயிரோட்டமுள்ளதாக இருக்கும். மனித உடலில் வாழ்கின்ற உயிருக்கு அவ்விரண்டுமே கண்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

20

பொருளைப் பெறுவதிலும், பாதுகாப்பதிலும், இன்பத்தைத் துய்ப்பதிலும் நமது எண்ணங்களையும் நேரத்தையும் அதிகமாகச் செலவிடுதல் கூடாது.

பொருளும் இன்பமும்

இடைத்தற்கரிய மனிதப் பிறவியின் குறிக்கோள்களை அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்காகப் பெரியோர்கள் வகுத்துக் கூறியுள்ளனர்.

தர்மார்த்தகாமமோக்ஷ புருஷார்த்தங்களுள், ஆன்மிக ஸாதகன் ஈச்வர ஞானத்துடனும், ஈச்வர பக்தியுடனும், குரு சாஸ்த்ரத்தினிடத்தில் ச்ரத்தையுடனும், தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அறத்திலிருந்து பெறப்படுவதுதான் உண்மையான இன்பம். பொருளை அடைவதிலேயே உடல் வாழ்க்கையை வீணாக்கிவிடக் கூடாது. பொருளும் இன்பமும் நாம் வசதியாக வாழ்வதற்காக மட்டும் அல்ல. பொருளும் இன்பமும் அறத்தைக் கடைப்பிடிப்பதற்குத்தான் பயன்பட வேண்டும்.

வசதியாக வாழ்வதினால் மட்டும், துன்பங்களைத் தவிர்க்கவோ துயரமற்ற இன்பத்தை உணரவோ இயலாது. பொருளீட்டுவதிலும், இன்பம் துய்ப்பதிலும் அதிகக் காலத்தை செலவிடுதல் மனித உடலை வீணாக்குவதாகும். நல்லதோர் வீணையைச் செய்து, நலங்கெடப் புழுதியில் எறிவதற்கு ஒப்பாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருளையும் இன்பத்தையும் சாஸ்த்ரங்கள் மறுக்கவில்லை. ஆனால், பொருளைப் பெறுவதிலும், பொருளைப் பாதுகாப்பதிலும் நமது எண்ணங்களையும் நேரத்தையும் அதிகமாகச் செலவிடுதல் கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றன. அர்த்த புருஷார்த்தமும், காம புருஷார்த்தமும் லௌகிக த்ருஷ்ட புருஷார்த்தங்கள். நாஸ்திகனும் அதற்காகவே உழைக்கிறான். ஆஸ்திகனும் அவ்வாறே உழைத்தால், அவன் ஆஸ்திக வேடமிட்ட நாஸ்திகனேயாவான்.

நாஸ்திகன் வேதங்களையும் சாஸ்த்ரங்களையும், குருமார்களின் வாக்கியங்களையும், இறைவனையும் ஏற்றுக்கொள்வதில்லை. பொருளையும் இன்பத்தையும் அடைவதற்கு முயற்சித்தாலே போதுமானது என்று கருதுகிறான். பொருளும் இன்பமும் மனிதனுக்கு முழுமையான அமைதியைத் தராது என்பதை நாஸ்திகன் உணர்வதில்லை. ஆஸ்திகனும் அறியாமையினால், பொருளையும் இன்பத்தையும் நாடுவானேயானால், அவன் ஆத்திகப் போலி எனப்படுவான்.

உண்மையான ஆஸ்திகன் ஆன்மிக ஸாதகனாவான். அவன் ஈச்வர பக்தியுடன், தர்மத்தைக் கடைப்பிடிப்பதற்கே முக்கியத்துவம் தருவான். நாம் உண்மையான ஆஸ்திகர்களாக விளங்க வேண்டும். வாழ்க்கையில் ஈட்டப்படும் பொருளும், குடும்ப அமைப்பும் அறத்தை வளர்க்க வேண்டும். நமது பண்பாட்டுச் சடங்குகளை முணுமுணுக்காமல் மகிழ்ச்சியுடன் கடைப்பிடிக்க வேண்டும். உறவுகளை மதிக்க வேண்டும்.

உறவுகளுக்குச் செய்ய வேண்டிய பொறுப்பான கடமைகளை மகிழ்ச்சியுடன் இறைவழிபாட்டுணர்வுடன் செய்ய வேண்டும். அனைத்தையும் தெய்வமாகப் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நலம் பயக்கும் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் வாயிலாக அறத்தைக் கடைப்பிடித்து, அறவழியில் பொருளீட்டி, அறவழியில் இன்பம் துய்த்து, உள்ளத்தூய்மை பெற்று, மெய்யறிவைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெற்று, பேரின்பமாகிய வீட்டின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

यत्सुखं सेवमानोऽपि धर्मार्थाभ्यां न हीयते।
कामं तदुपसेवेत न मूढव्रतमाचरेत्॥

யத்ஸுகம் ஸேவமானோऽபி தர்மார்த்தாப்யாம் ந ஹீயதே।
காமம் ததுபஸேவேத ந மூடவ்ரதமாசரேத்॥

(ஸ்ரீமஹாபாரதம் உத்யோகபர்வம் - விதுர நீதி : 301)

இன்பம்தான் கிடைக்கிறதே, தர்மம் எதற்கு என்று நினைக்கும் மூடர்களைப் போல எண்ணி, தர்மத்தை விட்டுவிடக் கூடாது. அனைத்து இன்பங்களும் இருந்தாலும், தர்மார்த்தங்களை கைவிடக் கூடாது. அதனை விடாமல் தொடர்ந்து கடைப்பிடித்தால், இன்பமும் தொடர்ந்து கிடைக்கும்.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (திருக்குறள் : 39)

நற்செயல்களால் ஏற்படும் இன்பம்தான் உண்மையான, நிலையான இன்பமாகும். பொருள், பால், பதவி ஆகிய அனைத்திலிருந்தும் ஏற்படுகின்ற இன்பங்கள் எல்லாம் துன்பமேயாகும். பெரியோர்களால் அவை பாராட்டப்படுவதாகவும் இல்லை.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

21

வைராக்யம்

இவ்வுலக, அவ்வுலக விஷய இன்பங்களில் வேட்கையின்றி, தனது பொறிகளையும் மனதையும் முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது வைராக்யம் எனப்படும்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் எண்ணங்களே தீர்மானிக்கின்றன. எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும் என்பர். உள்ளத்தில் தரமான, அளவான எண்ணங்கள், சரியான திசையில் பயணிக்க வேண்டும்.

விழிப்பு நிலையிலும் கனவு நிலையிலும் நாம் எண்ணங்களோடு நம்மை இணைத்துக் கொண்டிருக்கிறோம். நாம் எண்ணங்களை ஆள வேண்டுமே தவிர, எண்ணங்கள் நம்மை ஆளக்கூடாது. எண்ணங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன, எனவே அவை நிலையற்றவை. நிலையற்றவையாக இருப்பதால், எண்ணங்கள் உண்மையல்ல.

உலகில் நல்ல எண்ணங்களை எண்ணி, நல்ல சொற்களைப் பேசி, நல்ல செயல்களைச் செய்வதற்கிடையில், கெட்ட எண்ணங்களையும், சொற்களையும், செயல்களையும் நாம் நம்மோடு இணைத்துக்கொள்ளக்கூடாது.

பெரும்பாலும், நாம் எண்ணங்கள் மயமாகிவிடுகிறோம். எண்ணங்கள் வேறு, நாம் வேறு என்று கூட நம்மால் பகுத்தறிய முடிவதில்லை. எண்ணங்களைப் புறப்பொருளாகப் பார்க்கக்கூடிய ஆற்றல் நம்மிடம் இல்லை. நீண்ட கால பயிற்சிக்குப் பிறகே அதனைப் பெற முடிகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எண்ணங்களை ஒடுக்குகின்ற முயற்சியே பயிற்சியாகும்.

நீண்ட காலம், இடைவிடாமல், மரியாதையோடு, ஆர்வத்தோடு, கவனத்துடன், பொறுப்புணர்வுடன், முக்தியில் ஆசையுடன் செய்ய வேண்டும்.

புலனின்பங்களில் பற்றற்றதன்மை வைராக்யம் எனப்படும். பயிற்சி, பற்றற்ற தன்மை - இந்த இரண்டினால்தான் மனதை வெற்றிகொள்ள முடியும்.

உடலின் ஆரோக்யத்திற்கும் வலிமைக்கும் உணவு தேவை. ஆனால் சுவையான உணவு தேவையில்லை. சுவைக்கு அடிமையாகிவிடக் கூடாது. சுவையை வெறுக்க வேண்டியதுமில்லை. விட்ட புலனின்பத்தை மீண்டும் நாடுவது, நாயின் செய்கைக்கு ஒப்பானது.

பற்றற்ற தன்மை எனப்படும் வைராக்யத்தில் நான்கு படிநிலைகள் இருக்கின்றன. முதலாவது (யதமாந:) வாழ்க்கையின் தத்துவக் கேள்விகளுக்கு விடை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலோடு வாழ்க்கையில் எது நிலைத்தது, எது உண்மை என்பதை அறிந்துகொள்ள நல்லாரிணக்கத்தை நாடுதல்.

இரண்டாவது (வ்யதிரேக:) அகத்தாய்வு செய்து, தனக்கு எவ்வளவு வைராக்யம் உள்ளது என்பதை சோதனை செய்து பார்த்துக்கொள்ளுதல்.

மூன்றாவது, (ஏகேந்த்ரிய:) பொருளியல் நாட்டமின்றி, ஆன்மிக வாழ்க்கையில் சோர்ந்து போகாமல், புலனின்ப நாட்டமின்றி, உற்சாகத்தோடு இருத்தல். நான்காவது, (வஶீகார:) முற்றிலும் ஆசையற்ற நிலை.

முயற்சியோடு கூடிய பயிற்சியினால், புலனின்பங்களில் பற்றற்ற தன்மையை அடைந்து, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसञ्ज्ञा वैराग्यम्।

த்ருஷ்டாநுஶ்ரவிகவிஷயவித்ருஷ்ணஸ்ய வஶீகாரஸம்ஜ்ஞா வைராக்யம்।

(பதஞ்ஜலி யோக ஸூத்ரம்)

இவ்வுலக, அவ்வுலக விஷய இன்பங்களில் வேட்கையின்றி, தனது பொறிகளையும் மனதையும் முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது வைராக்யம் எனப்படும்.

உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து. (திருக்குறள் : 24)

திட்பம் மிக்க அறிவு எனும் அங்குசத்தினால், மனதைச் சார்ந்து இயங்குகின்ற ஐம்பொறிகளாகிய ஐந்து யானைகளையும் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துபவன் உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற பேரின்பத்திற்கு சிறந்த காரணமாய் விளங்குகிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

22

உள்ளத் தெளிவைப் பெற இன்பமாக இருப்பவர்களிடத்தில் அன்பு பாராட்டி, அவர்களது இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து பிறரது மகிழ்ச்சியை தன்னுடைய மகிழ்ச்சியாகக் கருதுதல் வேண்டும்.

உள்ளத் தெளிவு

புண்ய க்ஷேத்ரங்களுக்குச் சென்று, செய்ய வேண்டிய புண்ணிய காரியங்களைச் செய்யாமல் இருத்தல் க்ஷேத்ரபாபம் எனப்படும். இந்த உடலே ஒரு க்ஷேத்ரமாகும். பெறுதற்கரிய மனித உடலைப் பெற்றும், இந்த உடலைக் கொண்டு செய்ய வேண்டிய அறச்செயல்களைச் செய்யாமல் இருத்தல் பாபமாகும். பாபத்தினால் துன்பம் விளையும்.

மனிதன் கனவிலும் நனவிலும் யாண்டும் இன்பத்தையே நாடுகிறான். இன்பத்தில் உள்ள இச்சைக்கு விருப்பு என்று பெயர். அமைதியான தெளிந்த உள்ளத்தில்தான் இன்பத்தை உணர முடியும்.

மனம் விருப்பு வெறுப்பினாலும், புண்ய பாபத்தினாலும் அழுக்கடைந்து கிடக்கிறது. மன அழுக்குகள் நீங்கினால்தான் சித்தம் ப்ரஸாதம் எனப்படும் உள்ளத்தெளிவு ஏற்படும்.

மழைக்காலத்தில் நதியிலும், குளத்திலும் தண்ணீர் கலங்கியிருப்பதைப்போன்று, உள்ளத்தெளிவற்ற மனம் கலங்கியிருக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நல்ல குணங்களால்தான் உள்ளத்தெளிவை அடைய முடியும். விருப்பு வெறுப்புக்கள் மனதில் நிறைந்திருக்கின்றன. அவையே சித்தத்தை களங்கமடையச் செய்கின்றன.

விருப்பு வெறுப்பினால் புண்ய பாபம், புண்ய பாபத்தினால் இன்ப துன்பம், இன்ப துன்பத்தினால் விருப்பு வெறுப்பு என இந்தச் சுழற்சி தொடர்ந்துகொண்டே இருக்கிறது. மனம் இதிலிருந்து விடுபடுவதில்லை. பெரியோர்கள் நல்ல விஷயங்களைக் கூறினாலும் ஏற்றுக்கொள்ள அது தயாராக இருப்பதில்லை.

மனித மனம் இயல்பாகவே இன்பத்தில் அதிகமாகப் பற்று வைக்கிறது. கொஞ்சம் துன்பம் வந்தால் அதனால் தாங்க முடிவதில்லை. பற்றினால், ஆசைப்பட்டது கிடைக்கும் வரை அலைபாய்ந்துகொண்டே இருக்கிறது, அமைதியற்று துன்புறுகிறது.

உள்ளத்தெளிவைப் பெற வேண்டுமென்றால், இன்பத்தை நாடாமல், பிறர் அனுபவிக்கும் இன்பத்தையே தன்னுடைய இன்பமாகக் கருதுதல் வேண்டும். இன்பமாக இருப்பவர்களிடத்தில் அன்பு பாராட்டி, அவர்களது இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து பிறரது மகிழ்ச்சியை தன்னுடைய மகிழ்ச்சியாகக் கருதுதல் வேண்டும்.

எல்லோருடைய இன்பத்தையும் கண்டு மகிழ்வதால், உள்ளத்தில் பற்றும் ஆசையும் நீங்குகின்றன. பிறரைப் பொறுத்துக்கொள்கின்ற ஆற்றல் வருகிறது. செயற்கையாக இவ்வாறு பிறரது இன்பத்தைக் கண்டு மகிழ்ந்தால், இயற்கையாக அது மாறும். பிறருடைய நல்ல குணத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஏற்படும். பிறருடைய நற்பண்பில் குறை காண்பது குறையும். பிறரிடமிருப்பவை தன்னிடம் இல்லையே என்று எண்ணும் பொறாமை விலகும்.

இத்தகைய பேரன்பு எனும் பண்பினால் இன்ப நாட்டத்தை வெற்றிகொண்டு, உள்ளத்தெளிவைப் பெற்று, வையத்துள் இன்புற்று வாழ மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मैत्रीकरुणामुदितोपेक्षाणां सुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम्।।

மைத்ரீகருணாமுதிதோபேக்ஷாணாம்
ஸுகதுக்க:புண்யாபுண்யவிஷயாணாம்
பாவநாதஶ்சித்தப்ரஸாதநம்।।

(ஸ்ரீபதஞ்ஜலி யோகஸூத்ரம் : 33)

பிறரது இன்பத்தில் மகிழ்ச்சி, துன்பத்தில் கருணை, அறச்செயல்களில் உவகை, அறத்திற்குப் புறம்பான செயல்களைப் பொருட்படுத்தாமை ஆகிய மனோபாவனைகள் உள்ளத்தெளிவை உண்டாக்கும்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே. (தாயுமானவர்)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

23

எந்த கல்வியைக் கற்றால் துன்பமே இல்லாத இன்பத்தை நம்மால் எப்பொழுதும் உணர முடியுமோ, ஆழ்ந்த அமைதியோடு வாழ முடியுமோ, அந்த கல்வியைத்தான் கற்க வேண்டும்.

கற்பவை கற்க

உலகில் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. எல்லோராலும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள முடியாது. ஒன்றும் தெரியாதவர் என்று எவரும் உலகில் இருக்க முடியாது.

வாழ்க்கையில் எதனை அறிய வேண்டுமோ, அதை அறிய வேண்டும். மேலான மெய்ப்பொருளைப் பற்றிய மெய்யறிவைப் பெறுதலே மனித வாழ்வின் குறிக்கோள் ஆகும். அறிய வேண்டியதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் திருவள்ளுவர் கற்பவை கற்க என்கிறார்.

பரத்வாஜ மஹரிஷி தமது தபோபலத்தால் இந்த்ரனிடம் வேண்டி, வேதம் படிப்பதன் பொருட்டு, நானூறு வருடங்களுக்குத் தமது ஆயுளை நீட்டித்துக் கொண்டார். அதற்குப் பிறகும், அவர் வேதத்தில் கற்க வேண்டியவை மலை போன்றும், கற்றவை கையளவும் இருந்தன. வேதத்தின் பரம தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ளாமல், எத்தனை வருடங்கள் படித்தாலும் பயனில்லை.

எந்த அறிவைப் பெற்ற பிறகு, வேறு எதையும் அறிய வேண்டியதில்லையோ, எந்த அறிவு அனைத்து அறிவிற்கும் ஆதாரமாக இருக்கிறதோ, அந்த அறிவைப் பெறாமல்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாழ்க்கையில் வேறு எந்த அறிவைப் பெற்றாலும் பயனில்லை.

மெய்ப்பொருளைப் பற்றிய அறிவைப் பெற வேண்டும். எந்த அறிவைப் பெற்றால் துன்பமே இல்லாத இன்பத்தை நம்மால் எப்பொழுதும் உணர முடியுமோ, ஆழ்ந்த அமைதியோடு வாழ முடியுமோ, அந்த அறிவைத்தான் பெற வேண்டும்.

நான், உலகம், இறைவன் - இவற்றின் உண்மைத்தன்மையை உணராமல் உலகில் நிம்மதியாக வாழ முடியாது.

தன்னைப் பற்றிய அறிவைப் பெறாமல், வாழ்வில் வேறு எதைப் பற்றிய அறிவைப் பெற்றாலும், அது பயனற்றது.

இலக்கம் போடாமல் வெறும் பூஜ்ஜியங்களை மட்டும் போட்டுக் கொண்டே சென்றால், அவற்றுக்கு மதிப்பில்லை. முன்னால் இலக்கம் ஒன்றைப் போட்டால், பூஜ்ஜியங்களுக்கும் மதிப்பு வந்துவிடுகிறது.

வாழ்க்கை பூஜ்ஜியத்திற்கு நிகரானது. தன்னைப் பற்றிய தெளிந்த மெய்யறிவே இலக்கம் போன்றது. மெய்யறிவை அடைந்த பிறகு, மற்ற ஞானங்களுக்கு மதிப்பு வந்துவிடுகிறது.

மனிதனின் அனைத்துவிதமான துன்பங்களுக்கும் காரணம், அவனது உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் ஆசைகளும் பற்றுக்களுமே ஆகும். உடல் பற்று, உலகப் பற்று ஆகியவற்றில் உயிரானது சிக்கித் தவிக்கிறது.

அகப்பற்று, புறப்பற்று ஆகிய இரண்டினால் மீண்டும் பிறப்பும் இறப்பும் தொடர்கின்றன. பற்றுக்குக் காரணம் தன்னைப் பற்றிய அறியாமை. அறியாமையினால் பிறவிப்பிணி தொடர்கிறது. பிறவிப் பிணிக்குக் காரணமான அறியாமை நீங்குவதற்கு மெய்யறிவே மருந்து. நற்பண்புகள் அதற்குப் பத்தியமாக இருக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிய வேண்டியவற்றை அறிந்து, மெய்யறிவைப் பெற்றுப் பிறவிச்சுழலிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

अनन्तशास्त्रं बहुवेदितव्यं अल्पश्च कालः बहवश्च विघ्नाः।
यत्सारभूतं तदुपासितव्यं हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रम्।।

அநந்தஶாஸ்த்ரம் பஹுவேதிதவ்யம்
அல்பஶ்ச கால: பஹவஶ்ச விக்நா:।
யத்ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்
ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம்।।

அறிந்துகொள்ள வேண்டிய சாஸ்த்ர நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. காலம் குறைவாக இருக்கிறது. பலவிதமான இடையூறுகள் வேறு ஏற்படுகின்றன. ஹம்ஸபக்ஷியானது, பாலையும் நீரையும் பிரித்து உண்பதைப் போல, எது ஸாரமோ அதனைக்ரஹித்துக்கொள்ள வேண்டும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள்: 355)

எப்பொருள் எத்தகைய தன்மை உடையதாக இருப்பினும், அதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, அதனை மெய்ப்பொருளாக உணர்வதே அறிவாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



ஸ்ரீதக்ஷிணேச்வரம் ஸ்ரீபவதாரிணீ தக்ஷிண மஹாகாளீ
பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸர்
ஸ்ரீஸ்வாமீ விவேகாநந்தர் ஸ்ரீஸ்வாமீ சிவாநந்தர்
ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்தர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

24

உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடிப்பதில் தனிமனித நலனும், சமூக நலனும் அடங்கி இருக்கின்றன.

நற்பண்புகள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோர்களிடம் இயல்பாக அமைந்துள்ள நற்பண்புகளை அறிந்துக் கடைப்பிடிப்பதன் வாயிலாக ஒவ்வொருவரும் வாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் பெற முடியும். மெய்யறிவைப் பெற்றால்தான் நிலையான பேரின்பத்தை உணர முடியும். மெய்யறிவாகிய மருந்து நன்கு செயலாற்றுவதற்கு, பத்தியமாக நற்பண்புகள் தேவை. பெரியோர்களிடம் உள்ள பண்புகளுள் தலையாயது, தன்னிடம் இருப்பதை பிறருக்குக் கொடுப்பது. தன்னுடையது என்ற எண்ணத்தை நீக்குவதற்குப் பெயர் தானம். தானம் செய்த பிறகு, இதம் ந மம। இது என்னுடையதல்ல என்று கூறுவது வழக்கம். ஒன்றை வழங்கியபிறகு, நான் அதனை வழங்கினேன் என்ற எண்ணத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டிருந்தால், அது வழங்கியதாகவே ஆகாது. விளம்பரப்படுத்தாமல் வழங்குவது பெரியோர் இயல்பு. அனைத்து உயிர்களுக்குள்ளும் ஆத்மாவாக, நானாக இருப்பது நானே என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர். நீரில் அனைத்துத் தெய்வங்களும் உறைகின்றன. நீர் வார்த்து தானம் கொடுத்த பிறகு, தன்னுடையது என்று கூறுவது பாபம். தாம் பிறருக்கு வழங்கியதை மறந்துவிடுதலும், பிறர் தமக்கு வழங்கியதை நினைவில் வைத்திருத்தலும் பெரியோர் இயல்பு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இல்வாழ்க்கையின் நோக்கம் விருந்தோம்பல். குறைவற்ற உற்சாகத்துடன் அலுத்துக்கொள்ளாமல் விருந்தினரைப் போற்றும் உயர்ந்த பண்பும் சான்றோரின் இயல்பாகும்.

பிறருக்கு நலம் பயக்கும் அறச்செயல்களைச் செய்துவிட்டு மௌனமாக இருத்தல், தனக்கு நன்மை புரிந்தவர்களை அவையில் புகழ்தல், வாழ்க்கையில் தனக்கு உதவிய நல்ல உள்ளங்களை நன்றியோடு நினைவுகூர்தல் ஆகியவையும் பெரியோர்களால் கடைப்பிடிக்கப்படும் உயர்ந்த பண்புகளாகும்.

பெரியோர்கள் செல்வம் வந்த காலத்தில் கர்வமில்லாமல் பணிவோடு இருப்பார்கள். பிறரை நிந்திப்பதில் ஆர்வம் கொள்ளமாட்டார்கள்.

பிறரது குறைகளைக் காது கொடுத்துக் கேட்பதே பாபம் எனக்கருதி அதைப் பற்றி விமர்சனம் செய்யாமலிருப்பார்கள்.

வாழ்க்கைப் பாதை கத்திமுனை போன்றது. மிகுந்த விழிப்புணர்வுடன், கவனத்துடன் வாழவில்லையென்றால்; மனிதப் பிறவி வீணாகிவிடும்.

உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடிப்பதில் தனிமனித நலனும், சமூக நலனும் அடங்கியிருக்கின்றன.

பெரியோர்களுக்கு இயல்பாக உள்ள நற்பண்புகளை அறிந்து, அவற்றைக் கடைப்பிடித்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

प्रदानं प्रच्छन्नं गृहमुपगते संभ्रमविधिः
प्रियं कृत्वा मौनं सदसि कथनं चाप्युपकृतेः।
अनुत्सेको लक्ष्म्यां निरभिभवसाराः परकथाः
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम्।। ५७

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ப்ரதாநம் ப்ரச்சந்நம் க்ருஹமுபகதே ஸம்ப்ரமவிதி:
ப்ரியம் க்ருத்வா மௌநம் ஸதஸி கதநம் சாப்யுபக்ருதே:।
அநுத்ஸேகோ லக்ஷ்ம்யாம் நிரபிபவஸாரா: பரகதா:
ஸதாம் கேநோத்திஷ்டம் விஷமமஸிதாராவ்ரதமிதம்।।

(நீதி சதகம் : 57)

பிறர் அறியா வண்ணம் வழங்குதல், விருந்தினரை நன்கு போற்றுதல், நன்மை புரிந்து அமைதியாக இருத்தல், நன்றி மறவாமை, செல்வம் வந்தவிடத்து பணிவு, பிறரை இகழ்வதில் ஆர்வம் கொள்ளாமை முதலான கத்தி மீது நடப்பது போன்ற கடினமான வ்ரதங்களை சான்றோர்கள் எவரிடமிருந்து உபதேசிக்கப் பெற்றார்கள்?

ஏற்ற கைம் மாற்றாமை என்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன் – ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து. (நாலடியார் : 98)

குளிர்ந்த கடல் சூழ்ந்த நிலத்துக்குரியவனே! பயன் கருதாது, தன்னை நாடி வந்தவர்களுக்குத் தந்துதவுவதே நல்ல ஆண்மகனுக்குரிய இலக்கணமாகும். அப்படி இல்லாமல் இன்ன உதவியை இவர்க்குச் செய்தால், நாம் இவ்வளவு பயன் பெறலாம் என்றெண்ணி, பலனை எதிர்பார்த்துச் செய்கின்ற உதவி ஈகையாகாது. அது கொடுக்கல் வாங்கல் போன்றதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

25

இறை
வழிபாட்டினால்
மனம் தூய்மையும்
நல்ல நூல்களைக்
கற்பதால் அறிவு
வலிமையும்
அறிவு வலிமையினால்
மன வலிமையும்
கிடைக்கும்.

மன வலிமை

மனிதன் நாள்தோறும் உடல் அழுக்கு நீங்குவதற்காகக் குளிக்கிறான். உடல் வலிமை பெறுவதற்காக உணவு உட்கொள்கிறான். இதே போன்று, மனதை நாள்தோறும் நீராட்ட வேண்டும், மனதிற்கு வலிவூட்ட வேண்டும்.

இறைவழிபாட்டினால் மனம் தூய்மையடையும். சாஸ்திரங்களைக் கற்பதால் மனம் வலிமை பெறும். நல்ல நூல்களைக் கற்று, உள்ளத்தில் அக்கருத்துக்கள் ஆழமாகப் பதியும்போது, மனம் வலிமை பெறும்.

சிலருக்கு உடல் வலிமை இருக்கிறது, மன வலிமை இல்லை. மன வலிமை வேண்டுமென்றால், அறிவு வலிமை இருக்க வேண்டும். அறிவு வலிமை பெற நல்ல நூல்களை ஒருவர் கற்றே ஆக வேண்டும்.

கற்கவில்லையென்றால் மனிதனாகப் பிறந்ததற்கு அர்த்தமே இல்லை. மனிதனுக்குத்தான் கடவுள் அறிவைக் கொடுத்திருக்கிறார். பிற உயிரினங்களுக்கு அந்த வாய்ப்பானது கொடுக்கப்படவில்லை.

எதைக் கற்க வேண்டுமோ, அதனைக் கற்க வேண்டும். கற்பவை கற்க என்றார் திருவள்ளுவர். எதை உண்ணக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடாதோ, அதனை உண்டு சிலர் உடலைக் கெடுத்துக் கொள்வதைப் போல, கற்கக் கூடாதவற்றைக் கற்று, மனதைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.

கற்க வேண்டியவற்றைத் தெளிவாகக் கற்க வேண்டும். ஒருமுறை கற்றால் போதாது. பலமுறை அதனைத் திரும்பத் திரும்பக் கற்று, ஐயங்களை நீக்கிக் கொள்ள வேண்டும். கற்பதை ஒருநாளும் நிறுத்திவிடக் கூடாது.

அறிவுநூல்களை முறையாகக் கற்பதால் உள்ளத்தில் அறியாமை, ஐயம், தவறான எண்ணங்கள் யாவும் நீங்கும். தெளிவு பிறக்கும். உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் நாள்தோறும் ஓங்கும்.

இவ்வாறு கற்றுத் தெளிந்தால் மட்டும் போதாது. அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த அறிவு பயன் தரும்.

கேடில் விழுச்செல்வமான கல்வியின் பெருமையை ஒவ்வொரு மனிதனும் உணரக் கடமைப்பட்டிருக்கிறான்.

ஒருவர் இறந்தபிறகு, அவர் செய்த நல்வினை, தீவினை, கற்ற கல்வி ஆகிய மூன்று மட்டும்தான் கூட வரும் என்று அறநூல்கள் கூறுகின்றன.

அறிவைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஆற்றல் முறையான கல்விக்கு இருக்கிறது. முறையான கல்வியால் மனிதன் வாழ்வில் அடைய வேண்டிய அனைத்தையும் அடையலாம்.

கற்க வேண்டிய நூல்களை தெளிவாகக் கற்க! அறியாமை, ஐயம், திரிபு ஆகியன நீங்கி, தெளிந்த அறிவைப் பெறுக! அதன்படி ஒழுகுக!

இவ்வாறு தெளிந்த அறிவையும் உறுதியான உள்ளத்தையும் பெற்றுப் பேரின்பமடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अद्भिर्गात्राणि शुद्ध्यन्ति मनः सत्येन शुद्ध्यति।
विद्यातपोभ्यां भूतात्मा बुद्धिर्ज्ञानेन शुद्ध्यति।।

அத்பிர்காத்ராணி ஶுத்த்யந்தி மந: ஸத்யேந ஶுத்த்யதி।
வித்யாதபோப்யாம் பூதாத்மா புத்திர்ஜ்ஞாநேந ஶுத்த்யதி।।
(மநு ஸ்ம்ருதி 5-109)

உடல் நீராலும், மனம் உண்மை பேசுவதாலும், கல்வி தவத்தாலும், புத்தியானது அறிவாலும் தூய்மைபெறுகின்றன.

தாய்போல் இனிதோம்பும் தந்தைபோல் நன்காற்றும்
தூயமனைபோல் சுகம் அருளும் - ஆயநலம்
எல்லாம் அருளி இதம் அளிக்கும் கல்வியிது
எல்லார்க்கும் எவைதாம் வரா. (தர்ம தீபிகை)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

26

இறைவனே உலகமாக இருக்கிறார் என்பதை உணரும்போது, இயற்கையை சீரழிக்காமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கும்.

விச்வரூப உபாஸனை

இறைவன் எங்கு இருக்கிறார் என்ற கேள்விக்கு, ஸநாதந தர்மம் மிக அழகாக பதில் அளிக்கிறது. இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாதவராக இருக்கிறார்.

இறைவனே உலகமாகக் காட்சியளிக்கிறார் என்று வேதங்கள் கூறுகின்றன.

இறைவன் உலகமாகவே விளங்குகிறார். பஞ்சபூதங்கள், மலைகள், மரங்கள் செடிகொடிகள், நதிகள் அனைத்தும் இறைவனின் உடலாக விளங்குகின்றன.

''மூவுலகும் இறைவனுடைய திருவுடலாகும். பூமியே கால்கள், வானம் தொப்புள், வளியே மூச்சுக்காற்று, ஸூர்யனும் சந்த்ரனும் கண்கள், திசைகளே காதுகள், தலை ஸ்வர்கலோகம், நெருப்பே முகம், வயிறே கடல். அவருடைய உடலில் தேவர்கள், மனிதர்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன, கந்தர்வர்கள், தைத்யர்கள் ஆகிய அனைவரும் எழிலோடு வீற்றிருக்கின்றனர்'' என்கிறது விஷ்ணு ஸஹஸ்ரநாம தியாந சுலோகம்.

நாம் காண்கின்ற உலகம், கேள்விபடுகின்ற ஸ்வர்கம் போன்ற உலகங்கள் அனைத்தும் இறைவனின் சரீரம்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனே நம் உடலாகவும் உள்ளமாகவும் காட்சியளிக்கிறார்.

பஞ்சபூதங்கள், மலை, கடல், நதி, காடு, உயிரினங்கள் - என அனைத்தையும் இறைவனாக எண்ணுவதற்கு விச்வரூப உபாஸனை என்று பெயர்.

இறைவனை இவ்வாறு தியானிப்பதால் உள்ளம் பரந்து விரியும். படைப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் தியானிக்கும்போது, இயல்பாகவே சிறிய வட்டத்திற்குள் சுழன்றுகொண்டிருக்கும் மனித மனதின் சிந்தனைகள், படைப்பின் பிரம்மாண்டத்தை எண்ணி, வியப்பில் விரிவடையும்.

தன்னிலும் உலகிலும் தெய்விகத்தைத் தரிசிக்கும் உள்ளம் மெய்யறிவைப் பெறுவதற்கானத் தகுதிகளைப் பெறும். அதனால்தான் உபநிஷதங்களில் பலவிடங்களில் இதுபோன்ற விச்வரூப உபாஸனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

இன்றைய சூழலில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. காடுகள், மலைகள், நதிகள், கடல், காற்று என இயற்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் சீரழிக்காமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

விச்வரூப உபாஸனையில், இறைவனே உலகமாக இருக்கிறார் என்பதை உணரும்போது, இயற்கையை சீரழிக்காமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கும்.

நதிகளாகவும் கடலாகவும் மலைகளாகவும் காடுகளாகவும் உயிரினங்களாகவும், சக மனிதர்களாகவும் இறைவனே காட்சியளிக்கிறார் என்ற எண்ணம் மனிதனை உயர்த்தும். பிரபஞ்சமாக விளங்கும் இறைவனைப் போற்றி வணங்கி, பரந்த மனதைப் பெற்றுப் பேரின்படைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

खं वायुमग्निं सलिलं महीं च
ज्योतींषि सत्त्वानि दिशो द्रुमादीन्।
सरित्समुद्रांश्च हरेः शरीरं
यत्किञ्च भूतं प्रणमेदनन्यः।।

கம் வாயுமக்நிம் ஸலிலம் மஹீம் ச
ஜ்யோதீம்ஷி ஸத்தவாநி திஶோ த்ருமாதீந்।
ஸரித்ஸமுத்ராம்ஶ்ச ஹரே: ஶரீரம்
யத் கிஞ்ச பூதம் ப்ரணமேதநந்ய:।।

(ஸ்ரீமத்பாகவதம் உத்தவ கீதை 11-2-41)

வெளி, காற்று, நெருப்பு, நீர், நிலம், கோள்கள், நக்ஷத்திரங்கள், உயிரினங்கள், திசைகள், மரம் செடிகள், ஆறு, கடல் - இவை அனைத்துமே இறைவனின் வடிவங்கள்தாம். இறைவனே இவ்வாறு எல்லா உருவங்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அதனால், இவை அனைத்தையும் ஒன்றிய மனத்துடன் வணங்க வேண்டும்.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

(திருவாசகம் -திருச்சதகம்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

27

மனமெனும்
கூடாரத்தில்
இறைவன் எழுந்தருள
வேண்டுமென்றால்
மனதில்
தீய எண்ணங்கள்
நீங்கி நல்லெண்ணங்கள்
நிலைத்திருக்க
வேண்டும்.

இறைவன் கூடாரம்

முற்காலங்களில் அரசர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு யாத்திரை செல்லும்போது உறுதியான கூடாரங்கள் அமைத்து அதில் தங்குவார்கள்.

நம் மனம் ஒரு கூடாரம் போன்றது. மனமாகிய கூடாரத்தில் இறைவன் எழுந்தருள வேண்டுமென்றால், அதில் தூய எண்ணங்களும் நற்பண்புகளும் நிறைந்திருக்க வேண்டும்.

நம் மனமாகிய கூடாரத்திற்கு, மன உறுதியே ஆதாரமாக விளங்குகிறது. மன உறுதி என்பது மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது. சிலர் உலகியல் இன்பங்களை அனுபவித்துத் தீர்ப்பதற்கு மன உறுதியோடு இருப்பார்கள். வேறு சிலர் சோம்பலில் மூழ்கி, வாழ்க்கையையே வீணாக்குவதில் உறுதியோடு இருப்பார்கள்.

மனிதப் பிறவியின் மாண்பை உணர்ந்து, உலகியல் பற்றுக்களை அறவே நீக்கி, அருளியல் வாழ்வில் மேலோங்கி வளர்வதற்கு மிகுந்த மன உறுதி வேண்டும்.

வாழ்க்கையின் குறிக்கோளைத் தெளிவாக அறிந்து, அதில் நிலைத்திருத்தலாகிய மன உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடாரத்திற்கு கம்பங்கள் மட்டும் போதாது, கூடாரத்துணியை இழுத்துக் கட்டுவதற்கு உறுதியான கயிறுகள் வேண்டும். மனமாகிய கூடாரம், நற்பண்புகளாகிய கயிறுகளால் கட்டப்பட்டிருக்க வேண்டும். நற்பண்புகளாகிய கயிறுகளால் கட்டப்பட்ட மனக்கூடாரம் உறுதியாக இருக்கும். மேலான குறிக்கோளோடு கூடிய மனதிற்கு ஒத்துழைக்கும் வண்ணம், உடலும் உறுதியோடு இருக்க வேண்டும். நாள்தோறும் பஞ்சமஹா யஜ்ஞங்களைச் செய்து, மனதைப் பக்குவப்படுத்தி, தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். உள்ளத்தின் எண்ணங்களை மிகக் கவனமாகக் கவனித்துவர வேண்டும். அதற்குத் தகுந்தாற்போன்ற சூழ்நிலையைத்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். வீட்டிற்குள் விஷ ஜந்துக்கள் நுழைந்தால், அவற்றை வெளியேற்றுவதைப்போல, தீய எண்ணங்களை வெளியேற்ற வேண்டும்.

மனதில் சீரான, தூய்மையான எண்ண ஓட்டங்கள் இருக்க வேண்டும். பேராசை, பெருங்கோபம், பொருட்பற்று, பகுத்தறிவின்மை, செருக்கு, பொறாமை முதலிய தீய குணங்களை நீக்கி, உள்ளத்தில் நல்லெண்ணங்கள் நிலைத்திருக்கும்படி செய்ய வேண்டும். தூய உள்ளமே இறைவன் வாழும் இல்லமாகும். தூய மனம், மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதிகளை அடையும்.

அத்தகைய மனத்தூய்மையைப் பெற்று, மெய்யறிவே வடிவான இறைவன் உள்ளத்தில் உணர்வாக ஒளிர்ந்துகொண்டிருப்பதை குருமுகமாக, மெய்யறிவு நூல்களின் வாயிலாக அறிந்து, பேரானந்தத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

धृतिस्तम्भाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम्।
स्मरारे मच्चेतःस्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिव गणैः सेवित विभो।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

த்ருதிஸ்தம்பாதாரம் த்ருடகுணநிபத்தம் ஸகமநாம்
விசித்ராம் பத்மாட்யாம் ப்ரதிதிவஸஸந்மார்ககடிதாம்।
ஸ்மராரே மச்சேத:ஸ்புடபடகுடீம் ப்ராப்ய விஶதாம்
ஜய ஸ்வாமிந் ஶக்த்யா ஸஹ ஶிவ கணை: ஸேவித விபோ॥

(ஶிவாநந்த லஹரீ -21)

காமனை எரித்தவரே! எங்கும் நீக்கமற நிறைந்தவரே! அனைத்தையும் ஆள்பவரே! மங்கள வடிவினரே! கணங்களால் ஸேவிக்கப்படுவரே! மனவுறுதியாகிய கம்பத்தை ஆதாரமாக உடையதும், நற்குணங்களும், உறுதியான உடலுமாகிய கயிறுகளால் கட்டப்பட்டதும், பல்வேறு இடங்களுக்குச் செல்லக்கூடியதும், பல வண்ணங்களாகிய வாஸனைகளுடன் கூடியதும், தாமரை போன்ற சித்திரத்துடன் கூடியதும், தினந்தோறும் நல்வழியில் கொண்டு செல்லப்படுவதும், மாசற்றதுமான, என் மனமாகிய வெள்ளைத் துணியாலான குடிலில், அம்பிகையுடன் புகுந்து ஒளிர்வாயாக!

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம்
புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊன்ஆரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்து அன்றே வெறுத்திடவே. (திருவாசகம்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

28

நாம் செய்த கர்மங்கள் பலன்களைக் கொடுக்கும்போது, அது ஒவ்வொருவிதமாக இருக்கிறது. நூற்றுக்கு நூறு சதவிகிதம் இன்பத்தையோ துன்பத்தையோ அனுபவிக்கின்ற மனிதர் உலகில் எவரும் இல்லை.

கர்ம பலன்

உலகில் அனைவருமே துன்பமில்லாமல் இன்பமாக வாழ வேண்டும் என்பதற்காக பல்வேறுவிதமான செயல்களில் ஈடுபடுகிறோம்.

பெரும்பாலும் இப்பொழுது செய்கின்ற செயல்களுக்கு உடனே பலன் கிடைப்பதில்லை. பலன் கிடைக்கும்வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

நாம் இப்பொழுது நற்காரியங்களைச் செய்து கொண்டிருந்தாலும், எப்பொழுதோ செய்த தீவினைகளின் பலன்களை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது செய்கின்ற நல்வினைகளுக்கு எப்பொழுது பலன் ஏற்படுமோ என்று ஏங்குகிறோம்.

நாம் செய்த கர்மங்கள் பலன்களைக் கொடுக்கும்போது, அது ஒவ்வொருவிதமாக இருக்கிறது. நூற்றுக்கு நூறு சதவிகிதம் இன்பத்தையோ துன்பத்தையோ அனுபவிக்கின்ற மனிதர் உலகில் எவரும் இல்லை. ஆனால் வாழ்க்கையில் பலருக்குத் துன்பம்தான் அதிகமாக இருப்பதுபோலத் தோன்றுகிறது. வாழ்வில் இன்பங்கள் வந்தாலும், அவை இன்பமாகவே தெரிவதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துன்பத்திற்குக் காரணம் உடலைத் தான் என்று எண்ணும் எண்ணம் என மெய்யறிவு நூல்கள் கூறுகின்றன. அந்த எண்ணம் தோன்றுவதற்குக் காரணம் மாயை அல்லது அறியாமை. மாயையிலிருந்து விடுபட வேண்டுமென்றால், அதற்கு முதலில் தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சிலர், தங்களது உடலில் நோய் இருப்பதே தெரியாமல் இருப்பார்கள். சில அறிகுறிகளை உணர்ந்து, மருத்துவரிடம் செல்லும்போதுதான் அவர்களுக்கு அந்த நோய் இருப்பதே தெரியும். நோய் இருப்பதே தெரியாமல் இருப்பது ஒன்று, தெரிந்து கொள்வது மற்றொன்று. பிறகு நோயிலிருந்து விடுபட வேண்டும் என்று விழைந்து, அதற்குரிய வழிகள் என்ன என்பதைக் கண்டறிகிறார்கள்.

மருத்துவர் பல்வேறு பரிசோதனைகளின் மூலம் நம் உடல்நிலையை ஆராய்ச்சி செய்வதுபோல, முதலில் வாழ்க்கையில் நமது பிரச்சனைகளை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும்.

தவறு செய்தால் உடனே தண்டனை கிடைக்கும் என்றால், எவரும் தவறு செய்ய மாட்டார்கள். நல்லது செய்தால் உடனே பலன் கிடைக்கும் என்றால், அதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.

நல்வினைக்கும் தீவினைக்கும், இந்தப் பிரபஞ்ச நியதியானது உடனே பலன்க்ளைக் கொடுப்பதில்லை. இது மாயையின் வெளிப்பாடு. இவ்விதம் உள்ள உலக வாழ்க்கையின் இந்தத் தன்மையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆராய்ந்து பார்த்தால், வாழ்வில் நம்மிடம் உள்ள வசதிகள் பிறரிடம் இருப்பதில்லை. ஆனால் வசதிகள் இல்லாமலும் சிலர் இன்பமாக வாழ்கிறார்கள்.

பிறப்பு, இறப்பு, வாழ்க்கை ஆகியவற்றின் அனுபவங்களையும், அவற்றின் உண்மைத்தன்மையையும் ஆராய்ந்து பார்த்துத் தெளிந்து, பரம்பொருளைச் சார்ந்திருந்து, பிறவாப் பெருநிலையில் இன்புற்றிருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कर्माण्यारभमाणानां दुःखहत्यै सुखाय च।
पश्येत् पाकविपर्यासं मिथुनीचारिणां नृणाम्।।

கர்மாண்யாரபமாணாநாம் து:க்கஹத்யை ஸுகாய ச।
பஶ்யேத் பாகவிபர்யாஸம் மிதுநீசாரிணாம் ந்ருணாம்।।

(ஸ்ரீமத் பாகவதம்-உத்தவ கீதை-11-3-18)

உலக வாழ்வில் ஈடுபட்டுள்ள மனிதன், துன்பத்திலிருந்து விடுபடவும் இன்பத்தை அனுபவிக்கவும் பல்வேறு விதமான செயல்களைத் தொடங்குகிறான். ஆனால் அவன் விரும்பும் பலன்களைக் காட்டிலும் மாறுபட்ட பலன்களையே பெறுகிறான். (இதனை மனிதன் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறான்).

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (திருக்குறள் : 337)

அறிவில்லாதவர் ஒருவேளை கூட, வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை. ஆனால் வீணில் எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப் பல எண்ணங்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

29

உயிர் செய்த நல்வினை, தீவினைகளின் பலன்களாகிய புண்ணிய பாபங்கள் விதைக்கப்பட்டு, அதன் பயன்கள் அனுபவிக்கப்படுகின்ற நிலம் என்ற க்ஷேத்ரமாக இந்த உடல் இருக்கிறது.

க்ஷேத்ரம்

மனித உடல் கிடைத்தற்கரியது. மனிதப் பிறவியின் மாண்பை உள்ளவாறு உணர்ந்துகொள்வது மிக முக்கியம். மனித உடலானது பொருளீட்டி, உலக இன்பங்களை அனுபவிப்பதற்காக மட்டும் கொடுக்கப்படவில்லை. அதற்கு மேலான ஒரு பயன் இருக்கிறது.

அறிவிற் சிறந்த பெரியோர் நம் உடலுக்கு க்ஷேத்ரம் என்று பெயரிட்டுள்ளார்கள். க்ஷேத்ரம் என்றால் நிலம் என்று பொருள். நம் உடலே நன்னிலமாக விளங்குகிறது.

க்ஷத த்ராணாத் க்ஷேத்ரம்। அழிவிலிருந்து பாதுகாப்பதால் நம் உடலுக்கு க்ஷேத்ரம் என்று பெயர். அதாவது, பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்கு மனித உடல் கருவியாக இருக்கிறது. உயிரானது, உடலிலிருந்து விடுபடுவதற்காகக் கொடுக்கப்பட்ட உடலே மனித உடலாகும்.

மனித உடல் மட்டுமே, உலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, மோக்ஷத்தை உணர்வதற்கு உகந்ததாக இருக்கிறது. பிற சரீரங்கள் மோக்ஷத்திற்கு அநுகூலமாக இருப்பதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனித உடலில் வாழும்போழுதே, உயிரானது பிற உடல்களில் சிக்கிக் கொள்ளாமல், பிறவிச் சுழலிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

தான் உடல் அல்ல, உயிர் என்பதை முதலில் புரிந்துகொள்வதே ஆன்மிகக் கல்வியின் அரிச்சுவடியாகும். உண்மையில் பிறவாத இறவாத உயிருக்கு பிறந்து, இறந்து, தேய்ந்து மடிகின்ற உடல் கிடைத்திருக்கிறது.

தன்னை வெறும் உடலாகக் கருதிக்கொள்பவன் பொருளியல்வாதியாகத்தான் இருக்க முடியும். மதம் சார்ந்த சடங்குகளைக் கடைப்பிடிப்பதற்கும், சமூக ஒழுக்கங்களைப் பாதுகாக்கவும் ஒருவன் தன்னை உயிராக உணர்ந்துகொள்வது இன்றியமையாதது.

தன்னை உயிராகக் கருதிக்கொள்பவனுக்காகத்தான் உண்மையான பக்தி இருக்கும். அற நூல்கள் எடுத்துக் கூறும் கண்ணுக்குத் தெரியாத விஷயங்களான தர்மம், ஞானம், மோக்ஷத்தில் ருசி வர வேண்டுமானால், தன்னை உடலுக்கு வேறான உயிராகப் புரிந்துகொள்ள வேண்டும்.

க்ஷயாத் க்ஷரணாத் க்ஷேத்ரம்। உடலானது தேய்ந்து, அழிந்து போவதால், இதற்கு க்ஷேத்ரம் என்று பெயர். நம்மைச் சார்ந்துள்ள உடல், உறவுகள், செல்வம், வாழ்க்கை அனைத்தும் தேய்கின்றன. வாழ்வில் அனைத்தும் வந்து, வளர்ந்து, தேய்ந்து, அழிந்து, மீண்டும் தோன்றக் கூடிய இயல்பு படைத்தவை. இதனைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது.

க்ஷேத்ரவத்வா க்ஷேத்ரம்। உயிர் செய்த நல்வினை, தீவினைகளின் பலன்களாகிய புண்ணிய பாபங்கள் விதைக்கப்பட்டு, அதன் பயன்கள் அனுபவிக்கப்படுகின்ற நிலம் க்ஷேத்ரம் எனப்படும். அதாவது இன்ப துன்பங்களை நுகரும் இருப்பிடமாக இந்த உடல் இருக்கிறது.

மனிதப் பிறவியின் மாண்பை அறிந்து, உடலுக்கு வேறாகத் தன்னை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, பிறவாப் பெருநிலையை, இப்பிறவியிலேயே உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः।।

இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே।
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:।।

(ஶ்ரீமத் பகவத்கீதை 13-2)

குந்தியின் மைந்தனே! இந்த உடல் க்ஷேத்ரம் எனப்படும். இந்த உடலில் இருந்துகொண்டு, இதனை எவன் அறிகிறானோ, அவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.

(திருமந்திரம் : 2355)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

30

அபயம்

யான் - எனது என்ற செருக்கை நீக்கி, சாஸ்திரம் கூறியிருக்கும் விஷயங்களில் ஐயமின்றி, அவற்றை உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு அபயம் என்று பெயர்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன. தான் யார், தனக்கு என்ன வேண்டும், அதனை அடைவதற்குரிய வழிமுறை என்ன - இதுபற்றி மெய்யறிவு நூல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

அதனை அறிந்துகொள்ளும் மனிதன், 'நான் உயிர்', 'எனக்கு இன்பம் வேண்டும்', அறத்தால், அன்பால், பண்புகளால், மெய்யறிவால்தான் இன்பத்தை அடைய முடியும்; பணம், பதவி, உறவுகள், பொருள்களால் அடைய முடியாது' என்ற உண்மையைப் புரிந்துகொள்கிறான்.

வாழ்க்கையின் குறிக்கோளும் வாழும் முறையும் சீராக இருக்க வேண்டும். முறையின்றி ஆசைப்படுபவனிடம் செல்வம் சேராது. ஆசையில்லாதவனிடம் செல்வம் சேர்ந்து, அவனுக்கு ஸேவை செய்யும்.

தெய்விக குணங்கள் என்ற அகச்செல்வம் இருந்தால்தான், ஆனந்தம் என்ற குறிக்கோளை நாம் அடைய முடியும். அதற்கு மாறாக, அஸுர குணங்கள் நம் உள்ளத்தில் மேலோங்கி இருந்தால், துன்பம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஸுரன் என்பவன் புராண காலத்தில் வாழ்ந்த ஓர் கதாபாத்திரம் அல்ல. பிறரைத் துன்புறுத்துவதிலேயே ஈடுபட்டவன், வெறுப்பே வடிவெடுத்தவன், எதிர்மறை சிந்தனையாளன், புலனின்ப நாட்டம் மிக்கவன், கடவுள், மதச்சடங்குகள், தத்துவம் - இவை எதுவுமே தேவையில்லை, புலனின்பமே நாட்டம் மட்டுமே போதும் என்று எண்ணுபவன் அஸுரன்.

இவற்றுக்கு மாறாக, தெய்விகப் பண்புகளாகிய அகச்செல்வம் மனிதனின் உள்ளத்தைப் பண்படுத்தி, தனக்குள் புதைந்திருக்கும் தெய்விகத் தன்மையை உணர்த்தி, பேரின்பத்தில் நிலைத்திருக்க துணைபுரிகின்றன.

தெய்விகப் பண்புகளில் முதன்மையானது அபயம் - அச்சமின்மை. பயம் என்பது மனிதனுக்கு இயல்பாகவே இருக்கிறது. பயம் இரண்டு வகைப்படும். ஒன்று இயல்பாக ஏற்படும் பயம், மற்றொன்று மனிதன் கற்பித்துக்கொள்ளும் செயற்கையான பயம்.

பலவிதமான பயங்கள் மனிதனின் உள்ளத்தை அலைக்கழித்து, அமைதியை சீர்குலைக்கின்றன. பலருக்கு பணம், உறவுகள் நீங்கிவிடுமோ என்ற பயம், வர வேண்டிய பணம் வர வேண்டுமே என்ற பயம்.

'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ' என்ற பயம் நியாயமான பயம். 'தீயவை தீயினும் அஞ்சப் படும்' என்றார் திருவள்ளுவர். பாபம் செய்வதற்குப் பயப்பட வேண்டும். நற்பண்புகளில் நிலைபெற்று, உறுதியாக அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு ஒருபோதும் பயப்படக் கூடாது.

தன்னை உடல்-மனம்-புத்தியாக எண்ணிக்கொள்ளும் வரை, யான் - எனது என்ற செருக்கு இருக்கும் வரை பயம் என்பது இருக்கத்தான் செய்யும். சாஸ்திரம் கூறியிருக்கும் விஷயங்களில் ஐயமின்றி, அவற்றை உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு அபயம் என்று பெயர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மிக வாழ்வில் உறுதியாக இருக்கும் தன்மையாகிய அபயத்தை வளர்த்துக்கொண்டு, அகச்செல்வங்களைக் குறைவில்லாமல் பெற்று, ஆனந்தமாக வாழ மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

तावद् भयेषु भेतव्यं यावद्भयमनागतम्।
आगतं तु भयं दृष्ट्वा प्रहर्तव्यमशङ्कया।।

தாவத் பயேஷு பேதவ்யம் யாவத்பயமநாகதம்।
ஆகதம் து பயம் த்ருஷ்ட்வா ப்ரஹர்த்தவ்யமஶங்கயா।।

(சாணக்ய நீதி)

பயம் தோன்றுவது இயல்பு. தோன்றிய பயத்தைக் கண்டு பயப்படாமல், அதனை வளரவொட்டாமல் அடியோடு நீக்குதல் சாலச்சிறந்தது.

இச்சகத் துள்ளோரெல்லாம் எதிர்த்துநின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

(மஹாகவி பாரதியார்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

31

உண்மையான பாதுகாப்பு இறைவன், தர்மம் என்பதை உணர்ந்து, வேதத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு, வேதத்தில் கூறியுள்ளவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

வேதநெறி

இறைவன் உயிருக்கு, உடல், மனம், வாக்கு ஆகிய மூன்று கரணங்களை அருளியிருக்கிறார். அவற்றைப் பயன்படுத்தி அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது மனித உடலில் வாழ்கின்ற உயிரின் தலையாய கடமையாகும்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று மனதால் எண்ணுவதும், அருள்நூல்களை ஓதி, இனிய சொற்களைப் பேசுவதும், உடலால் தொண்டு செய்வதும் அறச்செயல்களாகும்.

உலகில் மனிதன் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிகளை உணர்த்துவதற்காக இறைவன் வேதங்களை அருளியிருக்கிறார். அவற்றின் வாயிலாக, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற அறிவையும் கொடுத்திருக்கிறார்.

வேதநெறிப்படி வாழ்கின்ற தேசத்தில் வறுமை குறையும். நம் தேசத்தில் வறுமை அதிகரிக்கக் காரணம், வேதம் காட்டும் வாழ்க்கை நெறியிலிருந்து விலகி, பொருளியல் வாழ்க்கையில் மக்கள் செல்வதே ஆகும்.

உலகில் வறுமை பெருகுவதற்குக் காரணம், பாதுகாப்பின்மை. உண்மையான பாதுகாப்பு இறைவன், தர்மம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பதை உணர்ந்து, வேதத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு, வேதத்தில் கூறியுள்ளவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நாள்தோறும் செய்ய வேண்டியவை, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, மாதத்திற்கு ஒருமுறை, வருடத்திற்கு ஒருமுறை செய்ய வேண்டியவை என்று வகைப்படுத்தப்பட்டவை நித்ய கர்மங்கள். வாழ்வின் குறிப்பிட்ட நிகழ்வுகளின்போது, திருமணம், வளைகாப்பு, குழந்தை பிறப்பு போன்றவற்றின்போது செய்வது நைமித்திக கர்மம் எனப்படும்.

நித்ய நைமித்திக கர்மங்களை விடாமல் செய்ய வேண்டும். இவற்றைத் தவிர பலனை விரும்பிச் செய்யும் காம்ய கர்மங்கள் இருக்கின்றன. நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்யாமல், காம்ய கர்மங்கள் முழுமையான பலனைக் கொடுக்காது. ருத்ர ஜபம் செய்தல், யாத்திரை மேற்கொள்ளுதல் போன்றவை ப்ராயச்சித்த கர்மங்களில் அடங்கும்.

இவற்றைப் பற்றிக் கூறும் தர்ம சாஸ்திரங்களின் ஸாரத்தையாவது அறிந்துகொள்ள வேண்டும். அவற்றின் அர்த்தத்தை அறிந்து, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையென்றால், அந்தக் கர்மங்களில் முழுமையான ச்ரத்தை ஏற்படாது. அவற்றைத் தெரிந்துகொண்டால்தான் அடுத்தத் தலைமுறையை வேதநெறிப்படி வழிநடத்த முடியும்.

அடுத்தத் தலைமுறைக்கு தர்மம், ஈச்வர பக்தி, நற்பண்புகள் ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டியதே பெற்றோரின் தலையாய கடமை. பணத்தை ஸம்பாதித்துக் கொடுப்பது பெற்றோர் கடமையல்ல.

வேதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் பொருளை அறிந்து, அவற்றைக் கடைப்பிடித்து, அடுத்தத் தலைமுறைக்கும் அதனைக் கற்றுக்கொடுத்து வாழ்வாங்கு வாழ மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

यथा खरश्चन्दनभारवाही भारस्य वेत्ता न तु चन्दनस्य।
तथैव लोका बहुशास्त्रयुक्ताः धर्मेण हीनाः पशुभिः समानाः।।

யதா கரஶ்சந்தநபாரவாஹீ பாரஸ்ய வேத்தா நது சந்தநஸ்ய।
ததைவ லோகா பஹுஶாஸ்த்ரயுக்தா:
தர்மேண ஹீநா: பஶுபி: ஸமாநா:।।
(ஸமயோசிதபத்யரத்நமாலிகா)

சந்தனத்தைச் சுமக்கும் கழுதையானது, அதன் பாரத்தை மட்டும் அறியும், சந்தனத்தின் பெருமையை அறியாது. அதுபோன்று, பல நூல்களைக் கற்றிருந்தாலும் அதில் கூறப்பட்டுள்ள அறங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்காதவர் விலங்குகளுக்கு சமமானவர்களே ஆவர்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். (திருக்குறள் : 410)

அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு ஒப்பிடுகையில், அவற்றைக் கற்றுக் கடைப்பிடிக்காதவர் விலங்குகளுக்கு ஒப்பாவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

32

அனைத்துச் செயல்களையும் இறைவழிபாட்டு உணர்வோடு செய்தல், உயிர்களிடத்தில் கருணையோடு இருத்தல் போன்றவை முக்கியமான தெய்வீகக் குணங்களாகும்.

தெய்விகக் குணங்கள்

உலகில் இன்பமாக வாழ்வதற்கு நற்பண்புகள் இன்றியமையாதவை.

நற்பண்புகள் இல்லாமல் ஞானத்தைப் பெற முடியாது. ஞானத்தைப் பெறாமல் நற்பண்புகள் நிறைவுபெறாது.

உடல்நோய் தீருவதற்கு மருந்தும் முக்கியம், பத்தியமும் முக்கியம். அவை இரண்டும் சேர்ந்துதான் நோயை நீக்குகின்றன. அதுபோல, பிறவிநோய் நீங்க வேண்டுமென்றால், அதற்கு தன்னை மெய்ப்பொருளாக உணரும் மெய்யறிவாகிய மருந்தும், நற்பண்புகளாகிய பத்தியமும் வேண்டும்.

கர்மயோகத்தை முறையாகச் செய்பவன்தான் ஞானயோகத்திற்குரிய தகுதியைப் பெறுகிறான். கர்மயோகம் செய்யாமல் ஞானயோகத்திற்குள் நுழைய முடியாது, அப்படியே மேற்கொண்டாலும் அது பயன் அளிக்காது. நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் கர்மயோகத்தில் முக்கியமான அம்சமாகும்.

நற்பண்புகளாகிய தெய்விகக் குணங்களைக் கடைப்பிடித்தல், ஆன்மிக வாழ்விற்கு நலம் பயக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவழிபாடு செய்தல், அனைத்துச் செயல்களையும் இறைவழிபாட்டுணர்வோடு செய்தல், அனைத்து உடல்களுக்குள் உள்ள உயிர்களிடத்தில் கருணையோடிருத்தல், புலனின்பப் பொருட்களால் கவரப்படாமல் இருத்தல் எனப் பல முக்கியமான தெய்விக குணங்கள் இருக்கின்றன.

உலகம் கவர்ச்சிகரமானது. மனதை அலைக்கழிக்கக்கூடிய ஆற்றல் மிக்கது. அவற்றால் கவரப்படாமல் இருத்தல் ஓர் உயர்ந்த தெய்விக குணமாகும்.

மனிதனிடம் அறியும் ஆற்றல், ஆசைப்படும் ஆற்றல், செயலாற்றும் ஆற்றல் என மூன்றுவிதமான ஆற்றல்கள் இருக்கின்றன. உலகப்பொருட்களைப் பார்த்து, அவற்றைப் பற்றி அறிந்தவுடன் ஆசை பிறக்கிறது, ஆசை செயல்வடிவம் பெறுகிறது.

இவ்வாறு மனிதன், ஞானசக்தி, இச்சாசக்தி, க்ரியாசக்தி ஆகிய மூன்று சக்திகளையும் தவறாகப் பயன்படுத்துகிறான். மனிதனின் துன்பத்திற்குக் காரணம், தன்னிடம் உள்ள அறியும் ஆற்றல், ஆசைப்படும் ஆற்றல், செயல்புரியும் ஆற்றல் ஆகிய மூன்று ஆற்றல்களையும் தவறாகப் பயன்படுத்துவதே ஆகும்.

புலனின்பப் பொருட்கள் எதிரில் எத்தனை இருந்தாலும், அதில் தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு நகர்ந்துவிட வேண்டும். எல்லாவற்றிலும் மனதை அலையவிடக் கூடாது.

பணம், பெண், பொன் அனைத்தும் மனிதனின் ஆசையைத் தூண்டும். அவற்றால் மனம் பாதிப்படையாமல் இருப்பதற்கு மனதிற்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

படிப்பிற்கும் தியானத்திற்கும் இடையூறாக உள்ள விஷயங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்.

புலனடக்கப் பயிற்சியை மேற்கொண்டு, ஆசைகளை நெறிப்படுத்தி, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

आपूर्यमाणमचलप्रतिष्ठं समुद्रमापः प्रविशन्ति यद्वत्।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे स
शान्तिमाप्नोति न कामकामी।।

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப:
ப்ரவிஶந்தி யத்வத்।
தத்வத்காமா யம் ப்ரவிஶந்தி ஸர்வே ஸ
ஶாந்திமாப்நோதி ந காமகாமீ।।

(ஸ்ரீமத்பகவத்கீதை 2-70)

அசைவற்ற கடலில் ஆறுகள் சென்று அடங்குவதுபோல், எவரிடத்தில் ஆசைகள் அனைத்தும் சென்று ஒடுங்குகின்றனவோ, அவனே அமைதியடைகிறான். ஆசையுள்ளவன் அமைதி அடைவதில்லை.

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அஃது உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (திருக்குறள் : 368)

ஆசை இல்லாதவர்க்குத் துன்பம் இல்லை. ஆசை இருந்தால், எல்லாத் துன்பங்களும் ஒழியாமல் மேலும் மேலும் வரும்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

33

இறைவன் நமக்களித்த பொறுப்புக்களை மகிழ்ச்சியோடு செய்து இறைவனையே எண்ணிக் கொண்டிருப்பதுதான் உண்மையான ஆனந்தத்தைத் தரும்.

உண்மையான ஆநந்தம்

நம் முன்னோர் வேதநெறிப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கைமுறைகளை வகுத்து அருளியுள்ளனர். தனிமனிதனின் வாழ்க்கையை மாணவப்பருவம், இல்லறம், துறவறத்திற்குத் தயார்செய்துகொள்ளும் வாநப்ரஸ்தம், துறவறம் என நான்கு ஆச்ரமங்களாக நெறிப்படுத்தி வைத்தனர்.

ஆச்ரமம் என்றால் குழப்பமில்லாத வாழ்க்கைமுறை என்று பெயர். நான்கு வாழ்க்கைமுறையில் இருப்பவர்களுக்கும் மோக்ஷமே முடிவான குறிக்கோளாகும். பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை குறிக்கோளாகக் கொண்டே அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் உள்ளன.

வாழ்க்கைமுறை எதுவாக இருப்பினும், இறைசிந்தனையே மிக முக்கியமானது. எவன் தனது உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணித்துவிடுகிறானோ, எவனுடைய உள்ளத்தில் ஈச்வர சிந்தனை மேலோங்கி இருக்கிறதோ, எவனுடைய உள்ளத் தாமரையானது இறைவனுக்குச் சொந்தமாகிவிடுகிறதோ, அவன் இறைவனுக்குச் சொந்தமாகிவிடுகிறான்.

தமிழில் உடையவர் என்று ஒரு சொல் உண்டு. இறைவனை இவர் உடையவர், இறைவன் இவரை உடையவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இது என்னுடையது, அது உன்னுடையது என்று கூறி, பொருட்களின்மீது உரிமை கொண்டாடுகிறோம். ஆனால் அனைத்துமே இறைவனுடையவை.

இறைவன் எண்ணற்ற கல்யாண குணங்களை உடையவர், அத்தகைய இறைவனை நாம் உடையவனாகக் கொண்டால், நமக்கும் அவை வரும்.

எப்பொழுதும் இறை நாமமும் அதன் பொருளும் உள்ளத்தில் நிறைந்திருந்தால், அங்கு இறைசிந்தனையே மேலோங்கியிருக்கும்.

அத்தகையவனுடைய பிறவித்துன்பத்தை இறைவன் தாங்கிக்கொள்கிறார், அழித்துவிடுகிறார். ஏனென்றால் மனம் முழுவதும் இறைசிந்தனையால் நிரம்பியிருப்பவன், துன்பத்தை மதிக்க மாட்டான்.

ஆனந்தமான இறைவனின் ஸ்வரூபமே அவனது உள்ளத்தில் மேலோங்கி இருந்தால், பிற எண்ணங்கள் அவனைப் பாதிப்பதில்லை.

ஜீவாத்மாவின் உள்ளமானது பரமாத்ம சிந்தனையில் ஊறியிருந்தால், உலகியல் இன்ப துன்பங்களை ஏற்படுத்தும் எண்ணங்களுக்கு இடமில்லை.

வர்ணாச்ரம தர்மங்கள் இறைவனை மையமாகக்கொண்டே இயங்குகின்றன.

எந்த வாழ்க்கைமுறையில் இருந்தாலும், இறைவன் நமக்கு அளித்திருக்கும் பொறுப்புக்களை மகிழ்ச்சியோடு செய்துகொண்டு இறைவனையே எண்ணிக் கொண்டிருப்பதுதான் உண்மையான ஆனந்தத்தைத் தரும்.

எந்த வாழ்க்கைமுறையில் இருந்தாலும், அறிவும் அறமும் இன்பமும் அன்பும் வடிவமான ஆண்டவனை உள்ளத்தில் இருத்தி, மேலான இன்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

वटुर्वा गेही वा यदिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीय-स्त्वं शंभो भवसि भवभारं च वहसि।।

வடுர்வா கேஹீ வா யதிரபி ஜடீ வா ததிதரோ
நரோ வா ய: கஶ்சித்பவது பவ கிம் தேந பவதி।
யதீயம் ஹ்ருத்பத்மம் யதி பவததீநம் பஶுபதே
ததீயஸ்த்வம் ஶம்போ பவஸி பவபாரம் ச வஹஸி।।

(ஶிவாநந்தலஹரீ : 11)

ஒரு மனிதன் ப்ரஹ்மசாரியாகவோ இல்லறத்தானகவோ வாநப்ரஸ்தனாகவோ, சடை தரித்தத் துறவியாகவோ, வேறு யாராகவோ இருக்கட்டும். ஓ சிவபெருமானே! அதனால் என்ன உண்டாகும்? பசுபதியே! எவனுடைய உள்ளத்தாமரையானது உம்முடைய வசப்பட்டிருக்குமோ, அவனுக்கு நீர் வசப்பட்டவராகிவிடுகிறீர். சம்புவே! அவனுடைய பிறவிச் சுமையையும் நீர் தாங்குகிறீர்.

சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவானிறையென அறிந்து நெஞ்சமே
தேட்டம் ஒன்றற அருட் செயலினிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே

- தாயுமானவர்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

34

மெய்,
வாய், கண்,
மூக்கு, செவி ஆகிய
ஐந்தும் இயல்பாகவே
புறநோக்குடையவையாக
இருக்கின்றன.
அவற்றை நெறிப்படுத்தி,
தன் கட்டுப்பாட்டில்
வைத்துக்கொள்ள
வேண்டும்.

புலனடக்கம்

திருக்கோயிலில் சென்று இறைவனின் திருவுருவைத் தரிசனம் செய்ய முற்படுகையில், கூட்டமாகப் பலர் முன்நின்று, மறைத்துவிடுவதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். அதுபோல, இந்த்ரியங்கள் நம் உள்ளத்துக்குள் பேருணர்வாக வீற்றிருக்கும் இறைவனைத் தரிசிக்க ஒட்டாமல் செய்கின்றன. இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்காதவனின் தாளைத் தரிசிக்க முடிவதில்லை.

இறைவன் உயிருக்கு உடல், மனம், புத்தி, இந்த்ரியங்கள் ஆகியவற்றை அருளியிருக்கிறார். அறிவுக் கருவிகள் எனப்படும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் இயல்பாகவே புறநோக்குடையவையாக இருக்கின்றன. அகத்தை நெறிப்படுத்தி, ஆன்மிக வாழ்வில் முன்னேறுவதற்கு அத்தகைய இந்த்ரியங்கள் தடையாக இருக்கின்றன. உலகியல் சிந்தனைகள் நம் அறிவைச் சிதறடிக்கின்றன. இந்த்ரியங்கள் அவற்றின்பால் செல்கின்றன. அவற்றை நெறிப்படுத்தி, தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு புத்திக்கு இருக்கிறது.

எந்த இந்த்ரியங்களை நாம் எதிரியாக எண்ணுகிறோமோ, அவையே நமக்கு உற்ற நண்பனாகவும் இருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட இந்த்ரியங்கள் நமக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நண்பனாக இருக்கின்றன. நெறிப்படுத்தப்படாத இந்த்ரியங்களே நமக்குப் பகைவன். கடோபநிஷதத்தில் யமதர்மராஜா பின்வருமாறு உபதேசம் செய்திருக்கிறார்:

''யார் அறிவற்றவனாகவும், நெறிப்படுத்தப்படாத மனதுடன் கூடியவனாகவும் இருக்கிறானோ, அவனுடைய இந்த்ரியங்கள் தேரோட்டியின் மோசமான குதிரைகள் போல் கட்டுப்படாமல் இருக்கின்றன. யார் அறிவுடையவனாகவும், என்றும் நெறிப்படுத்தப்பட்ட மனதுடன் கூடியவனாகவும் இருக்கிறானோ, அவனுடைய இந்த்ரியங்கள் தேரோட்டியின் நல்ல குதிரைகள் போல் கட்டுப்பட்டு இருக்கின்றன.''

இளமையிலேயே புலனடக்கம் பழகுதல் மிக முக்கியம். புலனடக்கம் பயின்று, மனதை ஒருமுகப்படுத்தி, இறைவனை ஆழ்ந்து எண்ணுவதற்கு, இறையருளோடு கூடிய முயற்சி இன்றியமையாதது. அதற்கு இறைவன் மீது பேரன்பு, அறத்தை இடையறாது கடைப்பிடித்தல், நல்லாரிணக்கம் ஆகியவை மிக முக்கியம். வீடு பற்றி எரியும்போது, கிணறு வெட்டக் கிளம்புவதுபோல, வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் புலனடக்கம் பழகுதல் பயனற்றது.

திருக்கோயில் இறைதரிசனம் போன்று, மனக்கோயிலில் பரம்பொருளை உணர, இந்த்ரியங்களை நெறிப்படுத்தி, பண்படுத்தி, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்படைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमल-पादाब्ज-युगलम्।
कथं पश्येयं मां स्थगयति नमस्संभ्रम-जुषां
निलिंपानां श्रेणि-र्निज-कनक-माणिक्य-मकुटैः।।

பலாத்வா புண்யாநாம் மயி கருணயா வா த்வயி விபோ
ப்ரஸந்நேSபி ஸ்வாமிந் பவதமல-பாதாப்ஜ-யுகலம்।
கதம் பஶ்யேயம் மாம் ஸ்தகயதி நமஸ்ஸம்ப்ரம-ஜுஷாம்
நிலிம்பாநாம் ஶ்ரேணிர்-நிஜ-கநக-மாணிக்ய-மகுடை:।।

(ஸ்ரீஶிவாநந்தலஹரீ : 17)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவா! எங்கும் நிறைந்தவரே! நற்செயல்களின் பயனாலோ, என்னிடத்தில் இரக்கத்தாலோ நீர் என் முன் தோன்றியிருந்துங்கூட, உம்முடைய தூய்மையான திருவடிகளிரண்டையும் எப்படி நன் தரிசிக்கப் போகிறேன்? உம்மை வணங்குவதில் ஆர்வம் கொண்ட தேவர்களின் கூட்டம், அவர்கள் அணிந்துள்ள மாணிக்கமிழைத்த பொற்கிரீடங்களால் என்னைத் தடுத்துவிடுகிறது.

(தேவர்களாக உருவகப்படுத்தப்படும் இந்த்ரியங்கள், மெய்ப்பொருளை உணர விடாமல் தடுக்கின்றன என்பது இதன் உள்ளார்ந்த பொருள்).

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. (திருக்குறள் : 25)

ஐம்பொறிகள் வழியாகச் செல்லும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியவனது வல்லமைக்கு, பரந்த வானுலகத்தில் உள்ள தேவர்களின் தலைவனான தேவேந்த்ரனே பொருத்தமான சான்று. (பொறிகளை வென்ற கௌதம முனிவரிடமிருந்து, தேவர்களின் தலைவனான இந்திரன் பெற்ற சாபம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

35

நனவு,
கனவு, உறக்கம்
ஆகிய மூன்றைப்
போலவே
பிறப்பு, வாழ்வு, இறப்பு
ஆகிய மூன்றும்
உண்மையில்லை என்று
புரிந்துகொள்வதுதான்
முப்புரங்களை
எரித்தல்.

முப்புரம் எரித்தல்

மனிதப் பிறவியின் குறிக்கோள் மெய்ப்பொருள் தத்துவத்தை உள்ளவாறு அறிந்து, பேரின்பத்தில் நிலைத்திருப்பதே ஆகும். மெய்ப்பொருள் தத்துவத்தை உள்ளவாறு உணர்வதற்கு, அறவாழ்க்கை வாழ வேண்டும். மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதிகளைப் பெறுவதற்கு இறைவன் மீது பேரன்பு செலுத்த வேண்டும். இறைவன் மீது பேரன்பு செலுத்துவதற்கு, இறைவனின் இலக்கணங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். இறைவனைப் பற்றிய அறிவை வேதத்தின் வாயிலாகப் பெறுகிறோம். வேதங்கள் ஐயா! என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியர் இறைவன். முழுமுதற்பொருளாக விளங்குபவர் இறைவன்.

நாம் ஒவ்வொருவரும், தன்மீதுதான் நிபந்தனைகள் அற்ற அன்பு கொண்டவர்களாக இருக்கிறோம். நான் என்ற சொல்லுக்குப் பொருளாக, நம் உள்ளத்தில் உறைபவர் இறைவன். தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே என்கிறார் திருமூலர். தனது ஸ்வரூபத்தை ஆழ்ந்து எண்ணுவதற்குப் பெயர் பக்தி என்றார் ஆதிசங்கரர். சிவபெருமானுக்குக் கூறப்படும் இலக்கணங்களில் ஒன்று, அவர் முப்புரங்களை எரித்தவர் என்பதாகும். தாரகாஸுரன் என்ற அஸுரனின் மகன்களான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுந்மாலி ஆகிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூவரும் இரும்பு கோட்டை, வெள்ளிக் கோட்டை, தங்கக் கோட்டைகளை வைத்திருந்தனர். பறக்கும் ஆற்றல் கொண்ட அந்தக் கோட்டைகளைக் கொண்டு தேவர்களுக்கு கடுந்துன்பத்தைக் கொடுத்தனர். சிவபெருமான் அம்மூன்று கோட்டைகளையும் ஒரே அம்பினால் எரித்தார் என்கிறது கந்தப் புராணம்.

முப்புரங்களை எரித்ததற்குத் தத்துவப் பொருள் ஒன்று உண்டு. இம்மூன்று கோட்டைகளும், நனவு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளைக் குறிக்கின்றன. அந்த மூன்றும் மெய்ப்பொருளாகிய என் மீது கற்பிக்கப்பட்டிருக்கின்றன. நானன்றி அந்த மூன்று நிலைகளுக்கும் இருப்பில்லை. நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்றைப் போலவே, பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய மூன்றும் உண்மையில்லை என்று புரிந்துகொள்வதுதான் முப்புரங்களை எரித்தல். இறைவன் முக்கண்ணராக விளங்குகிறார். ஸூர்யன், சந்த்ரன், அக்நி ஆகிய மூன்றும் அவரது கண்கள். ச்ருதி, யுக்தி, அநுபவம் ஆகிய மூன்று ப்ரமாணங்கள் அவ்வாறு மூன்று கண்களாக உருவகப்படுத்தப்படுகின்றன.

அறிவைத் தரும் கருவிகளின் தன்மையை அறிந்து, அக்கருவிகளை நல்வழியில் பயன்படுத்துதலே முக்கண்ணனைப் போற்றுதலாகும்.

இறைவன் நம் விருப்பு வெறுப்புகளாகிய பாம்புகளை அணிகலன்களாக அணிந்திருக்கிறார். துள்ளும் மனமாகிய மானைக் கையில் ஏந்தியிருக்கிறார். நம்மையும் ஓர் பொருளாக்கி, நம் மீது அருள் பொழியும் கருணைக்கடலாக விளங்குகிறார்.

இறைவனின் இலக்கணங்களை அறிந்து, அவரை வழிபடும் முறைகளை அறிந்து, அவரை வழிபட்டு, மெய்யறிவைப் பெற்று, மெய்ப்பொருள் தத்துவத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिनयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम्।
महादेवं देवं मयि सदयभावं पशुपतिं
चिदालंबं सांबं शिवमतिविडंबं हृदि भजे।।

த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹரமாத்யம் த்ரிநயநம்
ஜடாபாரோதாரம் சலதுரகஹாரம் ம்ருகதரம்।
மஹாதேவம் தேவம் மயி ஸதயபாவம் பஶுபதிம்
சிதாலம்பம் ஸாம்பம் ஶிவமதிவிடம்பம் ஹ்ருதி பஜே।।

(சிவாநந்தலஹரீ : 3)

மூன்று வேதங்களால் அறியப்படுபவரும், முப்புரங்களை எரித்தவரும், முக்கண்ணரும், சடைமுடி தாங்கியவரும், பாம்புகளை அணிகலன்களாக அணிந்தவரும், மான் ஏந்திய கரத்தினரும், தேவர்களின் தலைவரும், ஒளிபொருந்தியவரும், என் மீது கருணை கொண்டவரும், உயிர்களின் தலைவரும், அறிவுக்குப் பற்றுக்கோடாக இருப்பவரும், அம்பிகையோடு கூடியவரும், அலகிலா விளையாட்டுடன் கூடிய நடிப்புத் திறன் மிக்கவருமான சிவபெருமானை என் உள்ளத்தில் ஆழ்ந்து எண்ணுகிறேன்.

அப்பணி செஞ்சடை ஆதிபுரா தனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. (திருமந்திரம் : 343)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

36

ஸாத்விக இன்பம் பயிற்சியால் வளர்வது, தன்னைப் பற்றிய அறிவால் ஏற்படும் தெளிவால் விளையக் கூடியது. ஆன்மிக வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடியது.

ஸாத்விக இன்பம்

இறைவன் மனித உடலில் வாழ்கின்ற உயிருக்கு, மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கருவிகளை அருளியிருக்கிறார். அந்த மூன்று கருவிகளையும் இறைவழிபாட்டிற்குப் பயன்படுத்தி, உயிர் தன்னை உய்வித்துக்கொள்ள வேண்டும்.

உடல், உலகப்பொருட்கள், பணம், உறவுகள், வீடு அனைத்தும் தாற்காலிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உயிரானது இவற்றையெல்லாம் அறவழியில் பயன்படுத்தித் தன்னைத் தான் உய்வித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றுள்ள பலர், பொருள் ஈட்டுவதற்கும், இன்பம் துய்ப்பதற்கும் மட்டும் அதனைப் பயன்படுத்துகின்றனர். மனிதப் பிறவியின் நோக்கம் அறத்தைக் கடைப்பிடிப்பதும், ஆண்டவனை உணர்வதுமே ஆகும்.

இன்பத்தை நாடுவது உயிர்களின் இயல்பு. மனிதன் பலவிதமான புலனின்பங்களை நாடுகிறான். அதில் ஒரு கட்டுப்பாடு தேவை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வரைமுறையின்றி உணவை உட்கொள்பவர் ஆரம்பத்தில் இன்பமாக இருப்பதுபோல் தோன்றினாலும், முடிவில் நோய்வாய்ப்படுகிறார்.

அதுபோன்றே புலனின்பங்கள் அனைத்தும் ஆரம்பத்தில் இன்பமாகத் தோற்றமளிக்கின்றன, முடிவில் துன்பமாக வடிவெடுக்கின்றன.

அத்தகைய புலனின்பங்கள் அனைத்தும் ராஜஸ இன்பங்கள். மயக்கம், உறக்கம், சோம்பேறித்தனம், கவனக்குறைவு போன்றவற்றால் விளைவது தாமஸ இன்பம்.

இவை இரண்டிற்கும் நேர்மாறானது ஸாத்விக இன்பம். அது ஆரம்பத்தில் துன்பம் போன்று தென்படும்.

அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சி செய்வது கடினமாகத்தான் தோன்றும். சிறிது நேரம் உட்கார்ந்து ஜபம் செய்வது, தியானம் செய்வது போன்றவை ஆரம்பத்தில் துன்பமாகத்தான் இருக்கும்.

முடிவில் அவற்றின் பயன் இன்பமாக இருக்கும். எந்த இன்பம் துன்பத்திற்கு முடிவை உண்டுபண்ணுகிறதோ, அந்த இன்பம் ஸாத்விக இன்பம்.

ஸாத்விக இன்பம் பயிற்சியினால் வளர்வது, தன்னைப் பற்றிய அறிவால் ஏற்படும் தெளிவால் விளையக்கூடியது. ஆன்மிக வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் இன்பம் ஸாத்விக இன்பம்.

ஒருவர் வாழ்க்கையில் உண்மையான ஆனந்தத்தை, நிம்மதியை உணர வேண்டுமானால், ஸாத்விகமான செயல்களில், அறச்செயல்களில் ஈடுபட வேண்டும்.

தாமஸ இன்பத்திலும் ராஜஸ இன்பத்திலும் உள்ள நாட்டத்தைக் குறைத்து, ஸாத்விக இன்பத்தை நாடி, பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति।
यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम्।
तत्सुखं सात्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम्।।

அப்யாஸாத்ரமதே யத்ர துக்காந்தம் ச நிகச்சதி।।
யத்ததக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம்।
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்மபுத்திப்ரஸாதஜம்।।
(ஸ்ரீமத்பகவத்கீதை 18-36, 37)

பயிற்சியினால் வளர்வது, துன்பத்திற்கு முடிவை உண்டுபண்ணுவது, தொடக்கத்தில் விஷம் போன்று துன்பமாக இருப்பது, முடிவில் அமுதம் போன்று இன்பம் அளிக்கக்கூடியது, தன்னைப் பற்றிய மெய்யறிவால் ஏற்படும் தெளிவிலிருந்து விளைவது ஸாத்விக இன்பம் எனப்படும்.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (திருக்குறள் : 39)

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



புதுக்கோட்டை, ஸ்ரீபுவநேச்வரீ அவதூத வித்யாபீடம்

ஜகந்மாதா ஸ்ரீபுவநேச்வரீ
ஸ்ரீஸ்ரீ இராமக்ருஷ்ண ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத மஹாஸ்வாமிகள்
ஸ்ரீஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத மஹாஸ்வாமிகள்
ஸ்ரீஸ்ரீ ஸ்வயம்ப்ரகாச ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத மஹாஸ்வாமிகள்
ஸ்ரீஸ்ரீ ஸத்குரு சாந்தாநந்த ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத மஹாஸ்வாமிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

37

பொருள் ஈட்டவோ, புலனின்பத்திற்கோ, அறத்தைக் கடைப்பிடிப்பதற்கோ கூட இந்த மனித உடல் தரப்படவில்லை. மோக்ஷம் ஒன்றே இதன் குறிக்கோள்.

குறிக்கோள்

வாழ்வில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பது பற்றி வேதங்கள், வேதங்களை ஒட்டியெழுந்த ஸ்ம்ருதிகள், அறத்தைக் கடைப்பிடித்து வாழ்கின்ற பெரியோர்கள் ஆகியோரிடமிருந்து தெரிந்துகொள்கிறோம்.

குழந்தைகள் பெற்றோர்களின் வாழ்விலிருந்துதான் அறத்தைப் பற்றிய அறிவைப் பெறுகிறார்கள். காலையிலிருந்து இரவு வரை அவர்களது வாழ்க்கைமுறையைப் பார்த்துத்தான் கற்றுக் கொள்கிறார்கள்.

அறத்தைக் கடைப்பிடிப்பதற்கு அறத்தைப் பற்றிய அறிவு தேவை. அதர்மத்தைச் செய்யாமல் இருப்பதற்காக, அதைப் பற்றிய அறிவும் தேவை. அந்த அறிவைப் பெறுவதற்கு வேதம்தான் ப்ரமாணமாக விளங்குகிறது.

கர்மம் என்றால் செயல். அதனை மோக்ஷ ஸாதனமாகப் பயன்படுத்தும் மனோபாவனைக்குக் கர்மயோகம் என்று பெயர். எவனொருவன் கர்மயோகத்தோடு தன்னை இணைத்துக்கொள்கிறானோ, அவன் ஞானத்தைப் பெறுவதன் வாயிலாக, புண்ணிய பாபங்களை வெற்றிகொள்கிறான். பந்தத்திற்குக் காரணமான கர்மத்தை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பந்தத்திலிருந்து விடுபடுவதற்குப் பயன்படுத்தும் திறமையே கர்மயோகமாகும்.

வேதத்தில் பல்வேறு வகையான கர்மபலன்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி விரிவாகக் கூறி, மேலும் மேலும் கர்மங்களைச் செய்யத் தூண்டுவது வேதங்களின் நோக்கமல்ல.

கர்மத்திலிருந்து விடுபடுவதற்காகவே கர்மம் உபதேசிக்கப்பட்டுள்ளது. மருந்தைத் தேனில் குழைத்துப் புகட்டுவதைப் போல, மனதைப் பக்குவப்படுத்தக்கூடிய கர்மங்களை, கர்மபலன்களாகிய தேனில் குழைத்து வேதம் கொடுக்கிறது.

பிறக்கும்போதே மனிதன் அஜ்ஞானியாகப் பிறக்கிறான், புலனடக்கம் இல்லாதவனாகப் பிறக்கிறான். அவன் வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்களைச் செய்யவில்லையென்றால், தவறான செயல்களில் ஈடுபட்டு, மீண்டும் மீண்டும் தனக்குத் துன்பத்தை விளைவித்துக்கொள்வான்.

நம் வாழ்க்கையின் குறிக்கோளைத் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். பொருள் ஈட்டுவதற்காகவோ, புலனின்பங்களை அனுபவிப்பதற்காகவோ, அறத்தைக் கடைப்பிடிப்பதற்கோ கூட இந்த மனித உடல் தரப்படவில்லை. மோக்ஷம் ஒன்றே இதன் குறிக்கோள்.

மோக்ஷத்தை அடைய வேண்டுமானால், மெய்ப்பொருளைப் பற்றிய மெய்யறிவை, இங்கேயே இப்பொழுதே பெற வேண்டும். அதற்கு குருமுகமாக மெய்யறிவைப் பெற வேண்டும்.

மெய்யறிவைப் பெறுவதற்கு, நன்கு பக்குவப்பட்ட, தூய்மையான மனம் வேண்டும். அத்தகைய மனத்தூய்மையையும் பக்குவத்தையும் அருளவல்லது கர்மயோகம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செயலிலும், செயலின் பலனிலும் பற்றின்றி, இறைவழிபாட்டுணர்வுடன் செயலாற்றி, கர்மயோகம் பயின்று, மோக்ஷத்தை உணர நல்வாழ்த்துக்கள்!

वेदोक्तमेव कुर्वाणो निःसङ्गोऽर्पितमीश्वरे।
नैष्कर्म्यं लभते सिद्धिं रोचनार्था फलश्रुतिः।।

வேதோக்தமேவ குர்வாணோ நிஸ்ஸங்கோऽர்பிதமீஸ்வரே।
நைஷ்கர்ம்யம் லபதே ஸித்திம் ரோசநார்த்தா பலஸ்ருதி:।।
(ஸ்ரீமத்பாகவதம் : நவயோகீ ஸம்வாதம் - 11.3.46)

சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளை மட்டும் பதட்டமின்றி, செயலிலும் செயலின் பலனிலும் பற்றின்றி செய்து, இறைவனுக்கு அர்ப்பணம் செய்பவன், மனப்பக்குவத்தைப் பெற்று, மோக்ஷத்தை அடைகிறான். இந்நெறியில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவே, கர்மபலன்கள் புகழ்ந்து கூறப்படுகின்றன.

வேதத்தை விட்ட அறமில்லை - வேதத்தில்
ஓதத் தகும் அறம் எலாம் உள - தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. (திருமந்திரம் : 51)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

38

நல்லாரோடு பழகவேண்டும். பண்படுவதற்கு வாழ்க்கையைக் குறித்த பகுத்தறிவு வேண்டும். நான் பண்பட்டவனாக விளங்க வேண்டும் என்ற சுய பரிந்துரை மிக முக்கியம்.

பண்படுதல்

உலகில் பண்படாதவர்கள், பண்பட விரும்பாதவர்கள், பண்பட விரும்புபவர்கள், பண்பாட்டில் ஓங்கியவர்கள் எனப் பலவிதமான மனிதர்கள் இருக்கிறார்கள்.

பண்படாத இயல்புக்கு ப்ரக்ருதி என்று பெயர். பண்பட்ட இயல்புக்கு ஸம்ஸ்க்ருதி என்று பெயர். ஒருகாலத்தில் பண்படாத பூமி, பண்பட்ட பிறகு, அழகிய சோலையாகக் காட்சியளிக்கிறது.

நிறைய பணம் ஸம்பாதித்து வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிப் புறச்சூழல்களை பண்படுத்திக்கொள்ளவே பலர் முனைகிறார்கள். வாழ்க்கையில் வசதிகள் பெருகப் பெருக, வாழ்வில் சிக்கல்கள், விருப்பு வெறுப்புகள், துன்பங்கள் அதிகரிக்கின்றன.

வாழ்வில் இன்பம் பெருக வேண்டுமென்றால் உள்ளத்தை இடையறாது பண்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். தன்னைத் தான் சீர்திருத்திக்கொள்கின்ற பயிற்சிக்குத்தான் ஆன்மிகம் என்று பெயர்.

மனம் பண்பட்டுவிட்டால், புறத்தில் எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், அகத்தில் அமைதியை உணரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனதைப் பண்படுத்தத் தனியாக முயல்வது கடினம். நல்லாரிணக்கத்தின் வாயிலாகத்தான் நம்மைப் பண்படுத்திக்கொள்ள முடியும்.

நாம் பிறக்கும்போதே பண்பட்டவர்களாக இருப்பதில்லை. நாள்தோறும் நம்மைப் பண்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு எளிய வழி, பண்பட்டவர்களோடு பழகுதல். தனியே முயற்சித்துப் பண்படுதலைக் காட்டிலும், இது மிகச் சிறந்தது.

பண்படுவதற்கு வாழ்க்கையைக் குறித்த பகுத்தறிவு வேண்டும். நான் பண்பட்டவனாக விளங்க வேண்டும் என்ற சுய பரிந்துரை முக்கியம். மன அமைதியைக் கொடுக்கின்ற நல்லவர்களோடு பழக எனக்கு அருள்புரிவாயாக என்று இறைவனிடம் உள்ளம் உருகி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

மன அமைதிக்குத் தேவையானவை அனைத்தையும் அருள வல்லது நல்லாரிணக்கம். பல பெரியோர்களிடம் பல்வேறு ஸத்விஷயங்களை, பலமுறை கேட்க வேண்டும்.

நல்லாரோடு பழகி, நற்பண்புகளைக் கடைப்பிடித்து, அகத்தைப் பண்படுத்திப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं
मानोन्नतिं दिशति पापमपाकरोति।
चेतः प्रसादयति दिक्षु तनोति कीर्तिं
सत्सङ्गतिः कथय किं न करोति पुंसाम्॥

ஜாட்யம் தியோ ஹரதி ஸிஞ்சதி வாசி ஸத்யம்
மானோந்நதிம் திஶதி பாபமபாகரோதி।
சேத: ப்ரஸாதயதி திக்ஷு தநோதி கீர்த்திம்
ஸத்ஸங்கதி: கதய கிம் ந கரோதி பும்ஸாம்॥

நல்லாரிணக்கம் சிந்திக்கும் ஆற்றலை நாள்தோறும் வளர்க்கும். நமது பேச்சில் வாய்மையாகிய அமுதத்தைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொழியும். நமது பெருமையை உயர்த்தும் வழியைக் காட்டும். அறியாமையால் முன்பு செய்த தவறான பழக்கவழக்கங்களை அழித்துவிடும். உள்ளத்தில் தெளிவையும் மலர்ச்சியையும் மலரச் செய்யும். எல்லாத் திசைகளிலும் நற்புகழைப் பரப்பும். மனிதர்களுக்கு நல்லாரிணக்கம் எதைத்தான் தராது?

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (திருக்குறள்: 443)

பெரியாரைப் போற்றி தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

39

துன்பம் வரும் போது முன் நிற்பவன், துன்பத்தை நீக்குவதற்குரிய முயற்சியில் இறங்குபவன் சிவபெருமானின் சொரூபமே. இறைவனின் அவதாரமே பிறர்துயர் தீர்த்தல் பொருட்டுதான்.

துன்பமில்லா வாழ்வு

நாம் யாண்டும் இன்பத்தையே விரும்புகிறோம். இறைவன் துன்பமில்லா இன்ப வடிவினன். துன்பமில்லாத இறைவனைச் சார்ந்திருந்தால்தான் நாமும் துன்பத்தைக் கடக்க முடியும்.

நமக்குள் இருக்கும் சக்தியை வெளிக்கொணருவதற்கான வழிமுறைகளில் ஒன்றுதான் இறைவழிபாடு. மனம், வாக்கு, காயம் எனப்படும் முக்கரணங்களையும் இறைவழிபாட்டிற்குத்தான் பயன்படுத்த வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்திலும் இறைவனின் தொடர்பு இருக்க வேண்டும்.

பாற்கடலைக் கடைந்தபோது வந்த ஹாலஹால விஷத்தை, உயிர்களுக்கு வருகின்ற துன்பத்தை நீக்க வேண்டும் என்ற எண்ணமுடையவரான சிவபெருமான் விழுங்கினார். சமூகத்தை நேருகின்ற துன்பத்தைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணமே சிவம்.

துன்பத்தைத் தாங்கும் ஆற்றலாக சிவபெருமான் விளங்குகிறார். அவரை வழிபடும்போது, துன்பத்தைத் தாங்கும் ஆற்றலை வழிபடுகிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறர் துன்பப்படாமல் இருப்பதற்குரிய உதவிகளை நாம் நிச்சயமாகச் செய்ய வேண்டும். இன்பம் வரும்போது எல்லோரும் பங்கு போட்டுக்கொள்ள சேருவார்கள். துன்பம் வரும் வேளையில் அனைவரும் ஓடிவிடுவர்.

துன்பம் வரும்போது முன்நிற்பவன், துன்பத்தை நீக்குவதற்குரிய முயற்சியில் இறங்குபவன் சிவபெருமானின் சொரூபமே. இன்பத்தை அனுபவிக்கின்ற சக்தி நம்மிடம் இருக்கிறது, துன்பத்தைத் தாங்குகின்ற சக்தியும் நம்மிடத்தில் இருக்கிறது. இன்பத்தை அனுபவிக்கின்ற அதே வேளையில், துன்பத்தை அனுபவிக்கத் தயாராகவும் இருக்க வேண்டும்.

வெயில் இல்லையென்றால், நிழலின் அருமை தெரியாததுபோல, துன்பத்தை அனுபவிக்கவில்லை யென்றால், இன்பத்தின் மதிப்பு தெரியாது. இறைவனின் அவதாரமே பிறர்துயர் தீர்த்தல் பொருட்டுதான். இறைவனின் செய்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக உன்னதமான பாடம் - பிறர் துயர் தீர்க்க முயல வேண்டும் என்பதே. வாழ்க்கையில் துன்பம் என்பது மருந்துபோன்றது. நமக்கு அது நிறைய பக்குவத்தைக் கொடுக்கிறது. பாறாங்கல் அறுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, உளிகளால் செதுக்கப்பட்டுத்தான் தெய்வத் திருவுருவங்கள் வெளிவருகின்றன.

வாழ்க்கையில் வரும் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். பிறர் துயரங்களைத் தீர்க்க உதவ வேண்டும். கடவுளைச் சார்ந்திருந்து, கடமையைச் செய்து, கடவுளை நம் ஸ்வரூபமாகவே உணரும் மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

नालं वा परमोपकारक-मिदं त्वेकं पशूनां पते
पश्यन् कुक्षिगतान् चराचरगणान् बाह्यस्थितान् रक्षितुम्।
सर्वामर्त्य-पलायनौषध-मतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्ण-मेव त्वया।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**நாலம் வா பரமோபகாரக-மிதம் த்வேகம் பஶூநாம் பதே
பஶ்யந் குக்ஷிகதாந் சராசரகணாந் பாஹ்யஸ்திதாந் ரக்ஷிதும்।
ஸர்வாமர்த்ய-பலாயநௌஷத-மதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் கரலம் கலே ந கிலிதம் நோத்கீர்ண-மேவ த்வயா॥**

(சிவாநந்தலஹரீ : 31)

உயிர்களின் தலைவரே! உமது வயிற்றை அடைந்திருக்கும் அசையும் பிராணிகளையும், அசையாத மரம் செடிகொடிகளையும், அவ்வாறே வெளியிலுள்ளவர்களையும் காப்பாற்றுவதற்கு நோக்கமுடையவராய், மிகுந்த தீயைக் கக்குவதும், அச்சத்தை விளைவிப்பதும், எல்லா தேவர்களையும் ஓடச் செய்வதும், மூலிகைப்பொருளும் ஆகிய விஷமானது, விழுங்கப்படாமலும், உமிழப்படாமலும், உமது கழுத்தில் உம்மால் நிறுத்திவைக்கப்பட்டது. சிறந்த உபகாரமாகிய இந்த ஒன்றே உமது பெருமைக்குப் போதாதா?

**மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.** (திருக்குறள் : 244)

உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு, தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

40

குழப்பமில்லாத தெளிவான வாழ்க்கைமுறையுடன் உணவு, உறக்கம், உழைப்பு, ஓய்வு அனைத்தும் அளவாக இருத்தலே ஆச்ரமம் எனப்படும்.

ஆச்ரமம்

பாரதப் பண்பாட்டில், மனிதனின் வாழ்க்கைநிலைகள் நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. ப்ரஹ்மசர்ய ஆச்ரமம், க்ருஹஸ்த ஆச்ரமம், வாநப்ரஸ்த ஆச்ரமம், ஸந்நியாஸ ஆச்ரமம் என்பவையே அவை.

ஆச்ரமம் என்ற சொல்லுக்குக் குழப்பமில்லாத தெளிவான வாழ்க்கைமுறை என்று பெயர். காலையிலிருந்து இரவு வரை, அறத்தைக் கடைப்பிடித்து, முறையான வாழ்க்கை வாழ்தலே ஆச்ரமம் எனப்படும்.

உணவு, உறக்கம், உழைப்பு, ஓய்வு அனைத்தும் அளவாக இருத்தலே ஆச்ரம வாழ்க்கைமுறை.

குடும்பத்தில் கணவனுக்குரிய தர்மங்கள் இருக்கின்றன. மனைவிக்குரிய தர்மங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் சமூகக் கடமைகள் இருக்கின்றன. ஆட்சியாளருக்குரிய தர்மங்கள் இருக்கின்றன.

ஒவ்வொருவரும் தர்மத்தை அறிந்து, அதனைக் கடைப்பிடித்தால், சமூகத்தில் அமைதி நிலவும் என்பதில் ஐயமில்லை. நம் கவனமெல்லாம் தர்மத்தில் இருந்தால், துன்பம் நம்மைத் துன்புறுத்தாது. துன்பத்தைப் புறக்கணித்தல் எளிதாகிவிடும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறத்தைக் கடைப்பிடித்து, ஆண்டனை அறிந்துகொள்ளுதலே நம் குறிக்கோள். தன்னுடைய விருப்பு வெறுப்புக்கும், பிறரது விருப்பு வெறுப்புக்கும் அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதால் துன்பமே அதிகரிக்கும்.

தனிமனித நிலையில் தொடங்கி, சர்வதேச நிலை வரை விருப்பு வெறுப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. விருப்பு வெறுப்பற்ற சீரான வாழ்க்கைமுறைக்குத்தான் தர்மம் என்று பெயர்.

விருப்பு வெறுப்பற்றவனாய், அறநெறிப்படி கூர்மையாகச் சிந்தித்து, நன்கு செயலாற்றக் கூடியவனுக்கு முனிவன் என்று பெயர். தன்னை மிகுந்த கட்டுப்பாடோடு வைத்துக்கொண்டு, ராஜ்ஜியத்தை ஆளுகின்ற அரசன், முனிவனாகப் போற்றப்படுகிறான்.

அந்தணனின் அருளையும், வணகரின் பொருளையும், தனது ஆண்மையையும் இணைத்துச் சமூகத்திற்கு வழங்குபவனே அரசன் என்பார் ஸ்ரீஸ்வாமீ சித்பவானந்தர்.

கட்டுப்பாடு மிக்கவர், ஆழ்ந்த சிந்தனையாளர், கூர்ந்து கவனித்துக் கேட்பவர், தெளிவாகப் பேசுபவர் முனிவர் எனப்படுவார். கட்டுப்பாடு இல்லாதவனுக்குத்தான் களைப்பு அதிகமாகும். கட்டுப்பாடு மிக்கவனுக்கு களைப்பில்லை. உடலைக் காப்பாற்றுவதே தர்மம் செய்வதன் பொருட்டுதான்.

கட்டுப்பாடு மிக்க ஆச்ரம வாழ்க்கைமுறையைக் கடைப்பிடித்து, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

तमातिथ्यक्रियाशान्तरथक्षोभपरिश्रमम्।
पप्रच्छ कुशलं राज्ये राज्याश्रममुनिं मुनिः॥

தமாதித்யக்ரியாஶாந்தரதக்ஷோபபரிஶ்ரமம்
பப்ரச்ச குஶலம் ராஜ்யே ராஜ்யாஶ்ரமமுநிம் முநி:॥

(ரகு வம்ஶம் 1-58)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேரின் அசைவினால் ஏற்பட்ட உடல்வேதனை அனைத்தும், தகுந்த உபசாரத்தினால் நீங்கப்பெற்ற, ராஜ்ஜியமாகிய ஆச்ரமத்தை நடத்துகின்ற, கட்டுப்பாடு மிகுந்த அரசனான திலீப சக்ரவர்த்தியை, வசிஷ்ட முனிவர் குசலம் விசாரித்தார்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (திருக்குறள்: 26)

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துகின்ற அரிய செயலைச் செய்கின்றவர்களே உயர்ந்தோர் என்று அறிஞர்களால் போற்றப்படுவர். மக்கள் செய்வதற்கு அரிய இந்தச் செயலை ஆர்வத்துடன் மேற்கொள்ளாதவர்கள் அறிஞர்களால் உயர்ந்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

41

உடலுக்கு வேறாகத் தன்னை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, பிறவாப் பெருநிலையை இம்மனிதப் பிறவியில்தான் பெற இயலும்.

மனிதப் பிறவி

மனித உடல் கிடைத்தற்கரியது. மனிதப் பிறவியின் மாண்பை உள்ளவாறு உணர்ந்துகொள்வது மிக முக்கியம். மனித உடலானது பொருளீட்டி, உலக இன்பங்களை அனுபவிப்பதற்காக மட்டும் கொடுக்கப்படவில்லை. அதற்கு மேலான ஒரு பயன் இருக்கிறது.

அறிவிற் சிறந்த பெரியோர் நம் உடலுக்கு க்ஷேத்ரம் என்று பெயரிட்டுள்ளார்கள். க்ஷேத்ரம் என்றால் நிலம் என்று பொருள். நம் உடலே நன்னிலமாக விளங்குகிறது.

க்ஷத த்ராணாத் க்ஷேத்ரம்। அழிவிலிருந்து பாதுகாப்பதால் நம் உடலுக்கு க்ஷேத்ரம் என்று பெயர். அதாவது, பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்கு மனித உடல் கருவியாக இருக்கிறது. உயிரானது, உடலிலிருந்து விடுபடுவதற்காகக் கொடுக்கப்பட்ட உடலே மனித உடலாகும்.

மனித உடல் மட்டுமே, உலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, மோக்ஷத்தை உணர்வதற்கு உகந்ததாக இருக்கிறது. பிற சரீரங்கள் மோக்ஷத்திற்கு அநுகூலமாக இருப்பதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனித உடலில் வாழும்போழுதே, உயிரானது பிற உடல்களில் சிக்கிக் கொள்ளாமல், பிறவிச் சுழலிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

தான் உடல் அல்ல, உயிர் என்பதை முதலில் புரிந்துகொள்வதே ஆன்மிகக் கல்வியின் அரிச்சுவடியாகும். உண்மையில் பிறவாத இறவாத உயிருக்கு பிறந்து, இறந்து, தேய்ந்து மடிகின்ற உடல் கிடைத்திருக்கிறது.

தன்னை வெறும் உடலாகக் கருதிக்கொள்பவன் பொருளியல்வாதியாகத்தான் இருக்க முடியும். மதம் சார்ந்த சடங்குகளைக் கடைப்பிடிப்பதற்கும், சமூக ஒழுக்கங்களைப் பாதுகாக்கவும் ஒருவன் தன்னை உயிராக உணர்ந்துகொள்வது இன்றியமையாதது.

தன்னை உயிராகக் கருதிக்கொள்பவனுக்காகத்தான் உண்மையான பக்தி இருக்கும். அற நூல்கள் எடுத்துக் கூறும் கண்ணுக்குத் தெரியாத விஷயங்களான தர்மம், ஞானம், மோக்ஷத்தில் ருசி வர வேண்டுமானால், தன்னை உடலுக்கு வேறான உயிராகப் புரிந்துகொள்ள வேண்டும்.

க்ஷயாத் க்ஷரணாத் க்ஷேத்ரம்। உடலானது தேய்ந்து, அழிந்து போவதால், இதற்கு க்ஷேத்ரம் என்று பெயர். நம்மைச் சார்ந்துள்ள உடல், உறவுகள், செல்வம், வாழ்க்கை அனைத்தும் தேய்கின்றன. வாழ்வில் அனைத்தும் வந்து, வளர்ந்து, தேய்ந்து, அழிந்து, மீண்டும் தோன்றக் கூடிய இயல்பு படைத்தவை. இதனைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது.

க்ஷேத்ரவத்வா க்ஷேத்ரம்। உயிர் செய்த நல்வினை, தீவினைகளின் பலன்களாகிய புண்ணிய பாபங்கள் விதைக்கப்பட்டு, அதன் பயன்கள் அனுபவிக்கப்படுகின்ற நிலம் க்ஷேத்ரம் எனப்படும். அதாவது இன்ப துன்பங்களை நுகரும் இருப்பிடமாக இந்த உடல் இருக்கிறது.

மனிதப் பிறவியின் மாண்பை அறிந்து, உடலுக்கு வேறாகத் தன்னை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, பிறவாப் பெருநிலையை, இப்பிறவியிலேயே உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः।।

இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே।
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:।।

(ஸ்ரீமத் பகவத்கீதை 13-2)

குந்தியின் மைந்தனே! இந்த உடல் க்ஷேத்ரம் எனப்படும். இந்த உடலுக்குள் இருந்துகொண்டு, இதனை எவன் அறிகிறானோ, அவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.

(திருமந்திரம் : 2355)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

42

வஞ்சனை, தீமை, அவநம்பிக்கை முதலிய தீய குணங்களை நீக்கி, இறைவன் மீது பேரன்பைப் பெருக்கி, உள்ளத் தூய்மையை வளர்த்து, குருவிடமிருந்து உரிய மந்த்ரத்தை உபதேசம் பெறவேண்டும்.

மந்த்ரோபதேசம்

நம் முன்னோர் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கைநெறிகளை வேதங்களின் வாயிலாக அருளிச் செய்திருக்கிறார்கள். அவற்றை அறிந்துக் கடைப்பிடித்தால், பேரின்பத்தை உணரலாம்.

பாரத ஸநாதந தர்மத்தின் சாஸ்த்ரங்கள், குருவிற்கு ஓர் உயர்ந்த இடத்தை அளித்துள்ளன. குருவருளின் துணைகொண்டே சாஸ்த்ரங்களை, உயர்ந்த கருத்துக்களை ஒருவர் புரிந்துகொள்ள முடியும்.

உபநிஷதங்கள் குரு சிஷ்ய உரையாடல் வடிவில் அமைந்துள்ளன. குருவானவர் கருணையே வடிவெடுத்தவர். அவர் சீடனின் தகுதியை அறிந்தே உபதேசத்தை வழங்குவார். பக்குவம் மிகுந்த, தகுதி வாய்ந்த சீடனுக்குக் கூறும் உபதேசமே உரிய பலனை அளிக்கும்.

சாஸ்த்ரங்களில் பல்வேறு மந்த்ரங்கள் உள்ளன. அவற்றை குருமுகமாக உபதேசம் பெற்று, ஜபித்தால் அவை பலன் அளித்தே தீரும். தன்னை ஜபிப்பவனைக் காப்பாற்றக்கூடியது மந்த்ரம்.

மந்த்ரங்களையும், ஆத்ம வித்தையையும் பெறுவதற்கு சீடனுக்கு சில தகுதிகள் தேவை. தகுதியில்லாத சீடனால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெறப்படும் வித்தையானது, வெறும் தகவல் சேகரிப்பாகவே இருக்கும்.

மாம்பழம் என ஒன்று இருக்கிறது என்று அறிந்துகொள்வதால் மட்டும் என்ன பயன்? மாம்பழத்தையே பார்த்திராத, சுவைத்திராத மாணவன் ஒருவன் மாம்பழம் என்ற ஒன்று இருக்கிறது, அது இனிப்பாக இருக்கும் என்பதை அறிந்துகொள்வதைப் போன்றது அது.

தகுதிகளைப் பெற வேண்டுமானால், நியமங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். உணவுத் தூய்மை, உள்ளத் தூய்மை மிக முக்கியம்.

தூய்மையுடன் மந்த்ரங்களை கூறினால்தான் பலிக்கும், உடனடியாகப் பலன் கொடுக்கும்.

சீடனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான மற்றதொரு தகுதி, ச்ரத்தை. ஆதிசங்கரர் அவதரிப்பதற்கு முன்னால், குழந்தைப்பேறு தனக்கு இன்னும் கிட்டவில்லையே என்று அவரது தந்தையார் சிவகுரு வருந்தினார்.

தாயார் ஆர்யாம்பாள், 'நம்மிடம் ச்ரத்தை குறைவாக இருக்கிறது, மேலும் ச்ரத்தையோடு தவத்தை மேற்கொள்வோம்' என்று அவரை உற்சாகப்படுத்தினார். இருவரும் சேர்ந்து ச்ரத்தையுடன் தவமியற்றி, ஆதிசங்கரரை அருள்மகவாகப் பெற்றார்கள்.

வஞ்சனை, தீமை, அவநம்பிக்கை முதலிய தீய குணங்கள் மிகுந்தவனுக்கு ஒருபோதும் மந்த்ரங்களை உபதேசிக்கக் கூடாது என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

உள்ளத்தில் இறைவன் மீது பேரன்பைப் பெருக்கி, உள்ளத் தூய்மையை வளர்த்து, குருநாதரிடமிருந்து உரிய மந்த்ரங்களை உபதேசம் பெற்று, மெய்யறிவைப் பெற்றுப் பேரின்பமடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

उपासकाय शुद्धाय देयं नामसहस्रकम्।
यानि नामसहस्राणि सद्यः सिद्धिप्रदानि वै।।

உபாஸகாய ஶுத்தாய தேயம் நாமஸஹஸ்ரகம்।
யாநி நாமஸஹஸ்ராணி ஸத்ய: ஸித்திப்ரதாநி வை।।

(ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் பூர்வ பாகம்)

தூய்மையும் தகுதியும் மிக்க உபாஸகனுக்கே, உடனடியாக பலனை அருளக்கூடிய, இந்த அம்பிகையின் ஆயிரம் திருநாமங்களை உபதேசித்தல் வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல். (திருக்குறள்: 517)

ஒரு மனிதனின் உள்ளார்ந்த தகுதியைக் கண்டுணர்ந்து, ஆராய்ந்து அவனுக்கு உரிய செயலைக் கொடுத்து, அதனைச் செய்து முடிக்க வேண்டும்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

43

குறிக்கோளை அடைய ஆன்மிக வாழ்வு மிக முக்கியம். எண்ணம், சொல், செயல் ஆகியமூன்றையும் ஒரே நேர்க்கோட்டில் வைப்பதற்குரிய பயிற்சியே ஆன்மிகம் எனப்படும்.

நேர்கோடு

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றதன் பயன், பெறுதற்கரிய பிரானடி பேணுதலே ஆகும். மெய்ப்பொருளை உணர்ந்து, பிறவித்தளைகளிலிருந்து விடுபடுதலே மனித உடலில் வாழ்கின்ற உயிரின் குறிக்கோள்.

அக்குறிக்கோளை அடைய ஆன்மிக வாழ்வு மிக முக்கியம். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒரே நேர்கோட்டில் வைப்பதற்குரிய பயிற்சியே ஆன்மிகம் எனப்படும். ஆன்மநலம் பெற அறிவுநலம், மனநலம், சொல்நலம், செயல்நலம், உடல்நலம், உறவுநலம், பொருள்நலம் ஆகிய அனைத்தும் மிக முக்கியம்.

ஆன்மநலம் பெற, உடல், மூச்சுக்காற்று, மனம், அறிவு ஆகியவற்றை ஆளக் கற்றுக்கொள்ள வேண்டும். உடல்நலம் பெற உணவு, உடற்பயிற்சி, உழைப்பு, உறக்கம் ஆகிய நான்கையும் உடலுக்கு முறையாக வழங்க வேண்டும்.

முறையான மூச்சுப்பயிற்சியைப் பழகுவது மிக முக்கியம். 'மனமாகிய பறவையைப் பிடிக்க உதவுவது ப்ராணாயாமம்' என்பார் ஸ்ரீரமண மஹரிஷி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழுக்கு நீங்குவதன்பொருட்டு உடலைக் குளிப்பாட்டுகிறோம். அதுபோன்று ப்ரார்த்தனைகளால் உள்ளத்தை நீராட்ட வேண்டும்.

மனத்துக்கண் மாசிலன் ஆவதற்கு கடமைகளில் விருப்பு வெறுப்பின்றி, அவற்றின் பலன்களிலும் விருப்புவெறுப்பின்றி, இறைவழிபாட்டுணர்வுடன் கர்மயோக வாழ்க்கைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உள்ளத்தில் சரியான குறிக்கோளை நோக்கிய, தரமான அளவான எண்ணங்கள் இடம்பெற வேண்டும். தனக்கும் சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய எண்ணங்கள் மனதில் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றித் தோன்றும் முதல் எண்ணம் நம் கட்டுபாட்டில் இல்லை. ஆனால் அதனைத் தொடர்ந்து எழும் அடுத்தடுத்த எண்ணங்களை நம்மால் கட்டுப்படுத்த முடியும்.

உடலை நன்கு குளிப்பாட்டினால் மட்டும் போதாது, ஆற்றலைப் பெறுவதற்காக அதற்கு உணவளிக்க வேண்டும். அதுபோல, மனதிற்கு சரியான உணவைக் கொடுத்துப் பழக வேண்டும். கீதை, திருக்குறள் போன்ற அறநூல்கள், மெய்யறிவுநூல்கள் உள்ளத்திற்கு சிறந்த உணவாகின்றன.

அறிவும் மனமும் நலம் பெற்றால், சொற்களும் நலம் பெறும். அவ்வப்போது மௌனமாகவும் இருந்து பழக வேண்டும்.

'தீய சொற்களை விட்டு நல்ல சொற்களைப் பேசுவது மௌனத்தின் முதல்படி. நல்ல சொற்களையும் அளவோடு பேசுதல் மௌனத்தின் இரண்டாவது படி. நல்ல சொற்களை அளவாகப் பேசுவதையும் விட்டுவிடுதல் மௌனத்தின் மூன்றாவது படி' என்பார் ஸ்ரீமத் ஸ்வாமீ சித்பவானந்தர்.

தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றைக் கைக்கொண்டு, மெய்யறிவைப் பெற்று, நன்மை தீமை இரண்டையும் கடந்த பேரின்பத்தை தன் ஸ்வரூபமாகவே உணர்ந்து மௌனத்தில் நிலைபெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

त्यज धर्ममधर्मञ्च उभे सत्याऽनृते त्यज।
उभे सत्याऽनृते त्यक्त्वा येन त्यजति तं त्यज।।

த்யஜ தர்மமதர்மஞ்ச உபே ஸத்யாऽந்ருதே த்யஜ।
உபே ஸத்யாऽந்ருதே த்யக்தவா யேந த்யஜதி தம் த்யஜ।।

(மஹாபாரதம்)

தர்மத்தினால் அதர்மத்தை வெற்றிகொள்வாயாக! உண்மையினால் பொய்யை வெற்றிக்கொள்வாயாக! பிறகு, எதனால் இவற்றை வெற்றிகொண்டாயோ, அதையும் விட்டுவிடுவாயாக!

சித்தம் மௌனம் செயல்வாக்கு எல்லாம் மௌனம்
சுத்தமௌனம் என்பால் தோன்றின் பராபரமே

(தாயுமானவர்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

44

இந்த்ரியங்கள், மனம், புத்தி இவற்றை ஆளக் கற்றுக்கொள்ள வேண்டும். இறைவனை வழிபட வழிபட, தன்னை ஆளும் ஸமர்த்தைப் பெறலாம்.

தன்னை ஆளுதல்

மனித உடல் கிடைத்தற்கரியது, எப்பொழுது வேண்டுமானாலும் மறையக்கூடியது. கிடைத்தற்கரிய, நிலையற்ற உடலைப் பெற்றுள்ள நாம், உயர்ந்த குறிக்கோளாகிய மோக்ஷத்தை உணர இதனைப் பயன்படுத்துவதே அறிவுடைமையாகும்.

பலர் பொருளின்ப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்களது பெரும்பாலான நேரத்தை பொருளையும் இன்பத்தையும் நாடுவதிலேயே செலவழிக்கிறார்கள். தன்னைக் கட்டுகிற பயிற்சியாகிய அறத்திற்கு நேரம் கொடுப்பதில்லை.

தனது இந்த்ரியங்கள், மனம், புத்தி - இவற்றை ஆளக் கற்றுக்கொண்டால்தான் மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதியைப் பெற முடியும். மெய்யறிவைப் பெற்றால், பேரின்பத்தை உணரலாம்.

தனக்கு வேறாகத் தன் உடல், மனம், புத்தியைப் பார்க்கின்ற சக்திக்கு ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி என்று பெயர்.

இறைவனை வழிபட வழிபட, தன்னை ஆளும் ஸமர்த்தைப் பெறலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றலது
பின்னை ஒருபற்றும் உண்டோ பேசாய் பராபரமே

என்றார் தாயுமானவர்.

இறைவனின் இலக்கணங்களை அறிந்து, இறைவனை வழிபட்டால், தன்னைப் பற்றிய தெளிந்த மெய்யறிவைப் பெறலாம். உயிருக்கு உயிரான இறைவனின் தன்மையையும், உயிருக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பையும் உள்ளவாறு உணர்ந்துகொண்டால், உயிரின் உண்மையான தன்மையை உணர்ந்துகொள்ளலாம்.

உண்மையில் எவ்வித பற்றுதலும் இல்லாத உயிர், அறியாமையால் உடல் மனம் புத்தியோடு சேர்ந்து துன்பப்படுவதுபோல் தோன்றுகிறது. பிறவித்துயராகிய தீயில் வெந்து வாடுகின்ற அந்த உயிருக்கு, இறைவன் அருள்புரிகிறார்.

இறைவனைச் சார்ந்திருந்து உலகில் வாழ்ந்து, உலகியல் செயல்களையும், ஆன்மிக ஸாதனைகளையும் புரிந்துகொண்டு, பொறுப்புணர்வோடு தனது கடமைகளைச் செய்கின்ற மனிதனுக்கு இறைவன் அருள்புரிகிறார்.

இறையருளைச் சார்ந்திருந்து, அறச்செயல்களை நீண்ட காலம், இடைவிடாமல், மரியாதையோடு, ஆர்வத்தோடு, கவனத்துடன், பொறுப்புணர்வுடன், முக்தியில் ஆசையுடன் தொடர்ந்து செய்ய வேண்டும்.

தனக்கும் சமூகத்திற்கும் நலம் பயக்கின்ற அறச்செயல்களை ஒத்திப்போடாமல், நாள்தோறும் செய்து பழகி, மனிதப் பிறவியின் மாண்பை உணர்ந்து, பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

यावत्स्वस्थमिदं शरीरमरुजं यावज्जरा दूरतो
यावच्चेन्द्रियशक्तिरप्रतिहता यावत्क्षयो नायुषः।
आत्मश्रेयसि तावदेव विदुषा कार्यः प्रयत्नो महान्
सन्दीप्ते भवने तु कूपखननं प्रत्युद्यमः कीदृशः।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**யாவத்ஸ்வஸ்த்தமிதம் ஶரீரமருஜம் யாவஜ்ஜரா தூரதோ
யாவச்சேந்த்ரியஶக்திரப்ரதிஹதா யாவத்க்ஷயோ நாயுஷ:।
ஆத்மஶ்ரேயஸி தாவதேவ விதுஷா கார்ய: ப்ரயத்நோ மஹாந்
ஸந்தீப்தே பவநே து கூபகநநம் ப்ரத்யுத்யம: கீத்ருஶ:।।**

(வைராக்ய ஶதகம் : 75)

உடல் வலிமையுடன் நோயற்று இருக்கும்பொழுதுதே, முதுமை தொலைவில் இருக்கும்பொழுதே, பொறிகளில் ஆற்றல் குறையாதிருக்கும்பொழுதே, ஆயுட்காலம் அழிவதற்கு முன்னரே, அறிவாளி தனக்கு உண்மையிலேயே நன்மை பயக்கக்கூடிய மகத்தான செயல்களில் ஈடுபட வேண்டும். வீடு பற்றி எரியும்போது, கிணறு வெட்டும் முயற்சி பயனற்றது. அதுபோல, காலம் கடந்த முயற்சி பயனற்றதாகிவிடும்.

**அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.** (திருக்குறள் : 36)

வருங்காலத்தில் நன்கு அறிந்து பின்பற்றலாம் என்று கருதாமல், இப்பொழுதே (நிகழ்காலத்திலேயே) அறத்தை நன்கு அறிந்து கடைப்பிடிப்பாயாக. அவ்வாறு நன்கு அறிந்து கடைப்பிடிக்கப்படுமானால், உடல் அழியும் காலத்தில் உயிர் எனப்படும் ஜீவனுடன் அழியாத துணையாக அறம் வரும்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

45

இந்த்ரிய சக்தி, வாக் சக்தி, மனோ சக்தி, புத்தி சக்தி ஆகியவற்றைக் காட்டிலும் நுண்ணியதாக இருப்பவள் பராசக்தி. எல்லா ஆற்றல்களுக்கும் ஆதாரமான ஆற்றல் பராசக்தி.

ஆற்றல்

நம்மிடம் பலவிதமான ஆற்றல்கள் இருக்கின்றன. அறிவுக்கருவிகளிலும், செயற்கருவிகளிலும் ஆற்றல்கள் இருக்கின்றன. அவற்றின் துணையோடுதான் நாம் செயல்புரிகிறோம்.

பொருட்களிலும் ஆற்றல்கள் இருக்கின்றன. அவை இயங்கினால்தான் அவற்றின் ஆற்றலை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். பொருட்களுக்குப் பின்னால் உள்ள நுண்ணிய ஆற்றலைக் கவனித்துப் பழக வேண்டும்.

ஸ்தூலத்தைக் கவனிக்கும்போதே, அதற்குப் பின்னால் உள்ள ஸூக்ஷ்மத்தைக் கவனிக்க வேண்டும். அப்பொழுது தான், விதைக்குள் ஒளிந்திருக்கும் வ்ருக்ஷத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

இந்த்ரிய சக்தி, வாக் சக்தி, மனோ சக்தி, புத்தி சக்தி ஆகியவற்றைக் காட்டிலும் நுண்ணியதாக இருப்பவள் பராசக்தி. எல்லா ஆற்றல்களுக்கும் ஆதாரமான ஆற்றல் பராசக்தி. மிக நுண்ணிய அந்த சக்தியை பொறிகளைக் கொண்டு நுகர முடியாது, உணரத்தான் முடியும். எந்தக் கருவியைக் கொண்டும் பராசக்தியைக் காண முடியாது. கருவியாகவும், கருவியைப் பயன்படுத்துபவளாகவும் அவளே இருக்கிறாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆனால் நம் மனதிற்குப் பக்குவம் இல்லாத காரணத்தாலும், அனைத்தையும் வடிவமாகப் பார்த்துப் பழகிய காரணத்தினாலும், பராசக்தியை ஒரு வடிவத்தில் வழிபடுகிறோம். பெயர் வடிவமற்ற பரம்பொருளைச் சிந்திப்பது நம் மனதிற்குக் கடினமாகத் தோன்றுகிறது. சொல்லைக் கூறிய மாத்திரத்தில் அதன் வடிவத்தை உள்ளம் சிந்திக்கிறது. பெயர் வடிவங்களில்தான் மனம் ஈடுபடுகிறது. மனதில் எழும் உணர்ச்சிகள், புத்தியில் தோன்றும் அறிவு ஆகியவற்றை நாம் உணர்கிறோம். அவற்றுக்கு வடிவமில்லாதபோதும், அவை இருப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் வடிவமற்ற ஒன்றை நீண்ட நேரம் மனதால் எண்ண முடியாது. அதனால் வடிவமற்ற பரம்பொருளை உணர்த்துவதற்காக, நம் முன்னோர்களால் இறை வடிவங்கள் கற்பிக்கப்பட்டன.

கடவுள் கல்லிலோ மண்ணிலோ கட்டையிலோ இல்லை, பாவனையில்தான் இருக்கிறார். பாவனைக்கு உருவமில்லை. விநாயக சதுர்த்தீ வழிபாடு, வங்காள காளி பூஜை ஆகியவற்றில் வடிவத்தில் இறைவனை வழிபட்டு வடிவத்தை நீக்கிவிடுகிறோம். நாம் உண்மையில் வடிவமற்றவர்கள். நாள்தோறும் ஆழ்ந்த உறக்கத்தின்போது, வடிவமற்ற நிலைக்குச் சென்று மீண்டும் வடிவத்துடன் கூடிய விழிப்பு நிலைக்குத் திரும்புகிறோம்.

நமக்கே உண்மையில் வடிவமில்லை எனும்போது, பராசக்திக்கு வடிவமில்லை என்பதைச் சொல்லவா வேண்டும்?

வடிவத்தில் பராசக்தியை வழிபட்டு, உள்ளத்தைப் பண்படுத்தி, வடிவமற்ற பராசக்தியை உணர்ந்து, பேரின்பத்தில் நிலைத்திருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

सिन्धूरारुणविग्रहां त्रिनयनां माणिक्यमौलिस्फुरत्
तारानायकशेखरां स्मितमुखीमापीनवक्षोरुहाम्।
पाणिभ्यामलिपूर्णरत्नचषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थ रक्तचरणां ध्यायेत् परामम्बिकाम्।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸிந்தூராருணவிக்ரஹாம் த்ரிநயநாம்
மாணிக்யமௌலிஸ்புரத்
தாராநாயகஶேகராம் ஸ்மிதமுகீமாபீநவக்ஷோருஹாம்।
பாணிப்யாமலிபூர்ணரத்நசஷகம் ரக்தோத்பலம் பிப்ரதீம்
ஸௌம்யாம் ரத்நகடஸ்த்த ரக்தசரணாம் த்யாயேத்
பராமம்பிகாம்॥

(ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம த்யாந ஶ்லோகம்)

உதிக்கின்ற செங்கதிர் நிறத்தில் தோன்றுபவளும், (ஸூர்யன், சந்த்ரன், அக்நி மற்றும் ஶ்ருதி, யுக்தி, அனுபவம் ஆகிய) மூன்று கண்களை உடையவளும், மாணிக்கத்தால் இழைத்த கிரீடத்தை அணிந்தவளும், சந்த்ரனைத் தலையில் சூடியவளும், புன்முறுவல் பூத்தவளும், நிறைந்த ஞானத்தைக் குறிக்கும் ஸ்தனங்களை உடையவளும், இருகரங்களில் தேன் நிறைந்த ரத்னமயமான பாத்திரத்தையும், செந்தாமரை மலரையும் ஏந்தியவளும், அழகிய மனதிற்குகந்த வடிவமுடையவளும், அறிவு வடிவமான தனது சிவந்த திருவடியை, நிறைவைக் குறிக்கும் ரத்னமயமான குடத்தின் மீது வைத்திருப்பவளுமான அம்பிகையை த்யானம் செய்வோமாக!

ஓர்நாமம் ஒருருவம் இல்லார்க்கு - ஆயிரம்
நாமங்கள் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ

(மாணிக்கவாசகர்)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

46

மிருகங்களுக்குப் புரிந்துகொள்கிற சக்தியோ, பிறரைக் கெடுக்கின்ற சக்தியோ இல்லை. எனவே தர்ம சாஸ்த்ரம் அவற்றுக்கு இல்லை. மனித உடலில் வாழ்கின்ற உயிர்களுக்குத்தான் தர்ம சாஸ்த்ரம்.

தர்ம சாஸ்த்ரம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் வாழ்க்கையின் உறுதிப்பயன்களாகும். மனித உடலில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் இந்நான்கைப் பற்றிய அறிவையும் பெற்றாக வேண்டும்.

அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூல் பயனே என்பது நன்னூல் சூத்திரம்.

பணம் சம்பாதிப்பதற்கும், அதனைக் கொண்டு பொருட்களை அடைவதற்கும், அதனைக் காப்பாற்றுவதற்கும் அறிவு தேவை. அறவழியில் பொருளீட்டி, அதனைப் பாதுகாக்குகின்ற வழிமுறைகளை அர்த்த சாஸ்த்ரம் கற்றுத் தருகிறது. அதனை அறிந்து கடைப்பிடித்தல் வேண்டும். அனைத்துப் புலனின்ப நுகர்ச்சியும் காம சாஸ்த்ரத்தில் அடங்கும்.

அர்த்த காமங்கள் மிருகங்களுக்கும் இருக்கின்றன. எல்லா உடல்களிலும் இருக்கின்ற உயிர்களுக்கும் அவை இயல்பாக இருக்கிறது.

மனித உடலில் வாழ்கின்ற உயிருக்கு, பொருளும் இன்பமும் மட்டும் முழுமையான நிறைவை ஒருபொழுதும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தருவதில்லை. உலக இன்பங்கள் துன்பம் கலந்தவை, நிலையற்றவை, அடிமைப்படுத்துபவை.

உண்மையான இன்பத்தை உணர வேண்டுமானால், மனிதப் பிறவியின் பயனைப் பெற வேண்டுமானால், அறத்தைப் பற்றி அறிந்து அதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மிருகங்களுக்குப் புரிந்துகொள்கிற சக்தியோ, பிறரைக் கெடுக்கின்ற சக்தியோ இல்லை. எனவே தர்ம சாஸ்த்ரம் அவற்றுக்கு இல்லை. மனித உடலில் வாழ்கின்ற உயிர்களுக்குத்தான் தர்ம சாஸ்த்ரங்கள்.

மனித உடலில் வாழ்கின்ற உயிரை, புண்ணியத்தின் வாயிலாக இன்பத்திற்கு அழைத்துச் செல்வது எதுவோ, அதற்கு நீதி என்று பெயர். தனக்கும் சமூகத்திற்கும் நிரந்தரமான நன்மையைக் கொடுக்கின்ற எண்ணம், சொல், செயல் அனைத்தும் தர்மம் எனப்படும்.

வேதநெறிப்படி வாழ்கின்ற வாழ்க்கைமுறையைத்தான் நீதி, தர்மம் ஆகிய இரண்டு சொற்களும் குறிக்கின்றன.

சடங்குகள், வழிபாடுகள், பாவனைகள், பண்புகள் அனைத்தும் தர்மம் என்ற சொல்லால் குறிக்கப்படும். சடங்குகள், வழிபாடுகள், பாவனைகள் ஆகிய மூன்றும் விசேஷ தர்மங்கள் எனப்படும்.

நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் அனைத்தும் ஸாமான்ய தர்மத்தில் அடங்கும். ஸநாதந தர்மம் என்பது பெரும்பாலும் ஸாமான்ய தர்மத்தையே குறிக்கும். உலகம் முழுவதிலும் வாழ்கின்ற அனைத்து மனிதர்களுக்கும் அவை பொதுவானவை.

மனித குலம் இருக்கும் வரை அவை இருக்கும். அவற்றை அறிந்து கடைப்பிடித்தலே மனித உடலில் வாழ்கின்ற உயிரின் தலையாய குறிக்கோளாகும்.

நாம் செய்கின்ற அதர்மம், இப்பொழுது இன்பத்தை விளைவித்தாலும், பின்னால் துன்பத்தைத் தரும் என்ற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புரிந்துணர்வுடன், அதர்மத்தை விடுத்து, தர்மத்தைக் கடைப்பிடிக்க இடையறாது முயல வேண்டும். அறத்தைப் பற்றி அறிந்து, அதனைக் கடைப்பிடித்து, பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

यत्सुखं सेवमानोऽपि धर्मार्थाभ्यां न हीयते।
कामं तदुपसेवेत न मूढव्रतमाचरेत्॥

யத்ஸுகம் ஸேவமானோऽபி தர்மார்த்தாப்யாம் ந ஹீயதே।
காமம் ததுபஸேவேத ந மூடவ்ரதமாசரேத்॥

(விதுர நீதி : 309)

அனைத்து இன்பங்களும் இருந்தாலும், அறத்தை ஒருவன் கடைப்பிடிக்காமல் இருந்துவிடக் கூடாது. அது மடமையாகும். அறத்தை விடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், அது இன்பத்தை இடையறாது ஈண்டும்.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. (திருக்குறள்: 39)

நற்செயல்களால் ஏற்படும் இன்பம்தான் உண்மையான, நிலையான இன்பமாகும். பொருள், பால், பதவி ஆகிய அனைத்திலிருந்தும் ஏற்படுகின்ற இன்பங்கள் எல்லாம் துன்பமேயாகும். பெரியோர்களால் அவை பாராட்டுப்படுவதும் இல்லை.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

47

இறக்கும் வரையிலும் கற்றலை நிறுத்திவிடக் கூடாது. கற்பதிலிருந்தும் கற்பிப்பதிலிருந்தும் ஒருபொழுதும் விலகிவிடக் கூடாது.

கற்றது கைமண் அளவு

பிரபஞ்சம் மிகப் பெரிது. பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டது. கற்றல் என்பது எல்லாத் துறைகளிலும் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்று தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியால் அறிவைப் பெறுவதற்குரிய ஸாதனங்கள் பெருகியுள்ளன. ஆனால் பலர் மேலெழுந்தவாரியாக, நுனிப்புல் மேய்வதிலேயே நின்றுவிடுகிறார்கள்.

பலர், ஒரு நூலின் ஒரு சில கருத்துக்களை மட்டும் அறிந்துகொண்டு, அதனைப் பற்றி முழுமையாக அறிந்ததாக எண்ணிக் கொள்கிறார்கள்.

அறிவு என்பது முறையாகப் பெற வேண்டிய ஒன்று. கட்டிடம் கட்டிச் சொல்வது என்று கூறுவார்கள். முறையாகத் தெளிவாகக் கற்பது மிக முக்கியம்.

கீதை, திருக்குறள் போன்ற தர்ம சாஸ்த்ரமாகவும் மோக்ஷ சாஸ்த்ரமாகவும் விளங்கக் கூடிய நூல்களில் ஒரு சில கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்டுபடுவதுபோலத் தோன்றும். வெறும் ஒரு சில கருத்துக்களை மட்டும் கற்பதால் நூலின் முழுமையான கருத்தை உள்வாங்கிக் கொள்ள முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குருநாதரின் துணையோடு முறையாகக் கற்றால் மட்டுமே, முரண்பாடுகளை நீக்கி, ஆழமான பொருளை உணர்ந்துகொள்ள முடியும்.

நூற்கருத்துக்களைக் கற்க வேண்டும். அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். நூலறிவை, பட்டறிவு எனப்படும் அனுபவ அறிவோடு இணைத்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அது நுண்ணறிவாக மாறும். வாழ்க்கைக்குப் பயனளிக்கும்.

இறக்கும் வரையிலும் கற்றலை நிறுத்திவிடக் கூடாது. கற்பதிலிருந்தும் கற்பிப்பதிலிருந்தும் ஒருபொழுதும் விலகிவிடக்கூடாது என்று கட்டளையிடுகிறது வேதம்.

உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை மொழிகளின் வாயிலாக வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்பு மனித உடலில் வாழ்கின்ற உயிருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

நல்ல விஷயங்களை க்ரஹித்துக்கொள்ள செவிகளை எப்பொழுதும் திறந்து வைத்திருக்க வேண்டும். பலரிடமிருந்து பலமுறை கேட்க வேண்டும். பணிவோடு கேட்க வேண்டும்.

முறையாகக் கற்றவன், ஒவ்வொரு கோணத்திலும் கூறப்பட்டிருப்பதைச் சரியாகப் புரிந்துகொள்வான்.

குழந்தைகளுக்குக் கூறப்பட்டது பெரியோர்களுக்குப் பொருந்தாது.

பெரியோர்களுக்குக் கூறுவது குழந்தைகளுக்குப் பொருந்தாது.

இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருள் கொண்டு தெளிவைப் பெறுவான்.

நிரம்பக் கற்றவர்களும், கற்றது கைம்மண் அளவு, கல்லாதது மலையளவு, உலகளவு, கடலளவு என்று கூறுவார்கள்.

இடைறாது கற்று, உள்வாங்கி, அதன்படி நின்று, வாழ்வில் பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अज्ञः सुखमाराध्यः सुखतरमाराध्यते विशेषज्ञः।
ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रञ्जयति।। ३

அஜ்ஞ: ஸுகமாராத்ய: ஸுகதரமாராத்யதே விஶேஷஜ்ஞ:।
ஜ்ஞாநலவதுர்விதக்தம் ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி।।

(நீதி ஶதகம் : 3)

அறியாமையில் இருப்பவனுக்குக் கற்றுக் கொடுப்பது எளிது. கற்றறிந்தவனுக்கு கற்றுக்கொடுப்பது அதைவிட எளிது. ஆனால் சிறிதளவே அறிந்து, அதிகம் கற்றதாக எண்ணிக்கொண்டிருப்பவனை ப்ரஹ்மதேவராலும்கூட த்ருப்திப்படுத்த முடியாது. (அவனுக்குச் சொல்லி விளங்க வைப்பது கடினம் என்று பொருள்).

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் எனும் செருக்கு. (திருக்குறள் : 844)

புல்லறிவு என்று சொல்லப்படுவது யாதென்றால், தான் அறிவுடையவன் என்று ஒருவன் தன்னைத்தான் மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

48

இறைவழிபாடு, குருபக்தி, குரு வாக்கியத்தில் ச்ரத்தை, சாஸ்த்ரங்களைத் தெளிவாகக் கற்றல், நிலையாமையை உணர்தல், பரம்பொருளை ஆழ்ந்து தியானித்தல் வாயிலாக குறுகிய மனது விரிவடைகிறது.

பரந்த உள்ளம்

நமக்கு வேறாக, நமக்கு மேலாக ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்பதை, வயதாக வயதாக எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத அந்த சக்திதான் உலகைப் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைத்து, அருளிக் கொண்டிருக்கிறது.

இறைவன் எண்ணுதற்கு எட்டாத எழிலார். அவரே விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் அனைத்துமாக இருக்கிறார்.

உள்ளத்தில் இறையன்புடன், உலகில் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தாலும், வாழ்க்கைச் சூழல்களில் சில நேரங்களில் துன்பங்கள் தவிர்க்க முடியாததாகிவிடுகின்றன.

இறைவனின் உண்மையான இயல்பையும் இலக்கணங்களையும் உள்ளவாறு உணர்வோமேயானால், வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் நம்மைத் தாக்காமல் காத்துக்கொள்ள இயலும்.

கண்கள் வேற்றுமையான பிரபஞ்சத்தைப் பார்த்தாலும், குரு சாஸ்த்ர உபதேசத்தினால் பண்பட்ட உள்ளமானது, மெய்ப்பொருளை உணர்ந்து, இன்ப துன்பங்களைக் கடந்து, பேரின்பத்தை உணர்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் கால வடிவமாக இருக்கிறார். காலத்தை விழுங்குபவர் அவர். காலத்தையும் தேசத்தையும் நிறைந்து, காலத்தைக் கடந்த தத்துவமாக விளங்குகிறார்.

பிரம்மாண்டத்தின் தொடக்கம், நடுப்பகுதி, முடிவு ஆகியவற்றை எவராலும் கணக்கிட முடியாது. அவர் ஆதியும் அந்தமும் அற்றவர்.

பொதுவாக, நமது உள்ளம் ஓர் இறையுருவத்தையும் நாமத்தையுமே சிந்திக்கிறது. ஆரம்ப நிலையில் அது தவறல்ல. ஆனால் அதனோடு நின்றுவிடக் கூடாது. எண்ணற்ற பெயர் வடிவங்களில் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை எண்ண வேண்டும்.

தம்மால்கூட தம்முடைய மஹிமையை முழுவதுமாகக் கூறி முடிக்க முடியாது என்கிறார் பகவான். இறைமையின் மஹிமையை, எங்கும் பரந்து விரிந்திருக்கின்ற தன்மையை மன ஒருமுகப்பாட்டோடு தியானிக்க வேண்டும்.

குறுகிய மனதை விரிவுபடுத்துவதே மெய்யறிவு நூல்களின் நோக்கம். மனம் ஆகாசம் போன்று விரிந்து, கடல் போன்று பரந்து, மலை போன்று உயர்ந்திருக்க வேண்டும்.

சாஸ்த்ர குருவாக்கியத்தில் ச்ரத்தையோடு, பக்தி செய்பவனுக்குத்தான் மெய்ப்பொருள் விளங்கும்.

ஊனக்கண் கொண்டு காண்கின்ற அனைத்தையும், ஞானக்கண் கொண்டு ஆராய்ந்து பார்த்து, உண்மையை உள்ளவாறு அறிந்துகொள்ள வேண்டும்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரம்பொருளை ஆழ்ந்து தியானித்து உள்ளத்தைப் பண்படுத்தி, விரிவுபடுத்தி, உலகியல் இன்ப துன்பங்களிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தில் நிலைபெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम्।
हृदा मनीषा मनसाभिऽक्लृप्तो य एनं विदुरमृतास्ते भवन्ति।।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந
சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்।
ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தோ ய
ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி।।**

(மஹாநாராயண உபநிஷத் - 1.3.1)

இறைவன் புலன்களுக்குப் புலப்படாதவர். ஒருமுகப்பட்ட மனதுடன், உள்ளத்தில் உறைபவராக அவரை தியானிப்பவர்கள், இறைவனை உள்ளவாறு அறிந்து பிறவாப் பெருநிலையை அடைகிறார்கள்.

**விறகில் தீயினன் பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிசோதியான்
உறவுகோல்நட்டு உணர்வுக்கயிற்றினால்
முறுக வாங்கி கடைய முன்நிற்குமே.**

(திருநாவுக்கரசர் தேவாரம்)



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

49

அறிவுபூர்வமாக வாழ்தல், அறிவின் கட்டுப்பாட்டில் உணர்ச்சிகளை வைத்திருத்தல், எல்லா உடல்களிலும் வாழ்கின்ற உயிர்களை நேசித்து அன்பை வளர்த்தல் இதுவே ஆன்மிகம்.

ஆன்மிகக் கல்வி

மனித உடலில் வாழ்கின்ற உயிரின் சிறப்பு அறிவே ஆகும். அறிவு, அன்பு, அறம் - இம்மூன்றும் இல்லாத உயிர்வாழ்க்கை பயனற்றது. அறிவு, அன்பு, அறம் ஆகியவற்றின் ஆற்றலை உணர்ந்து, அதனை வெளிப்படுத்துவது மனித உடலில் வாழ்கின்ற உயிரின் தலையாய கடமையாகும்.

அறிவுபூர்வமாக வாழ்தல், அறிவின் கட்டுப்பாட்டில் உணர்ச்சிகளை வைத்திருத்தல், எல்லா உடல்களிலும் வாழ்கின்ற உயிர்களை நேசித்து அன்பை வளர்த்தல் - இதுவே ஆன்மிகம்.

மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தன்மையை வெளிக்கொணர்வதே கல்வியின் நோக்கம் என்றார் சுவாமி விவேகானந்தர். தற்போதுள்ள கல்வியின் நோக்கம், பெரும்பாலும் மனிதனின் பொருளாசையை வளர்ப்பதாகவே இருக்கிறது. அடிப்படை ஆன்மிகக் கல்வி இல்லாத உலகியல் கல்வி, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்காது.

உண்மையிலேயே நிம்மதியை விரும்புபவர்கள், வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் மரணம் வரை, அறிவு, அன்பு, அறம் ஆகிய மூன்றையும் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இடைவிடாத நிறைவுணர்வை உணர்வதே வாழ்க்கையின் குறிக்கோள். நாமே நிறைவுணர்வாக இருக்கிறோம். அதனை உணர்ந்தால், உள்ளத்தில் நிறைவுணர்வு ஏற்படும். மரணம் எப்பொழுது வரும் என்று தெரியாது. நிறைவாக உடலை உகுக்க வேண்டுமென்றால், நம்முடைய உண்மை இயல்பை உணர்ந்துகொள்ள வேண்டும்.

உணவு உடல்மயமாவது போன்று, நற்கருத்துக்கள் நம் வாழ்க்கைமயமாக வேண்டும். ஆஹார நியமத்திற்கும் ப்ராணாயாமத்திற்கும் தொடர்பு இருக்கிறது. ப்ராணாயாமத்திற்கும் மனதுக்கும் தொடர்பு இருக்கிறது. மனம் சரியாக இருந்தால்தான் புத்தி சரியாக இயங்கும். புத்தி சரியாக இயங்கினால்தான் உடலுக்குள் உயிர் அமைதியாக வாழும்.

புத்தியை சரிவர வளர்த்துக்கொள்ள அறிவுநூல்கள் துணைபுரிகின்றன. த்ருஶ்யதே அநேந பரமார்த்த தத்த்வம் இதி தர்ஶநம். நூலின் வாயிலாக வாழ்க்கையின் உள்ளார்ந்த தத்துவம் உணர்ந்துகொள்ளப்படுவதால் அவற்றுக்கு தர்சனம் என்று பெயர்.

உயர்ந்த தத்துவங்களை நினைவில் வைத்துக்கொள்ள உதவியாக, பெரியோர்கள் அவற்றை சிறு ஸூத்ரங்களாக வகுத்துள்ளனர். உடல், மூச்சுக்காற்று, மனம் ஆகியவற்றை நெறிப்படுத்த யோக ஸூத்ரம் என்ற நூல் உறுதுணைபுரிகிறது. மெய்ப்பொருள் தத்துவத்தை உணர்ந்துகொள்ள ப்ரஹ்ம ஸூத்ரம் உதவுகிறது.

நூலுக்கு ஸூத்ரம் என்று பெயர். பருத்தி, சணல் முதலானவற்றால் ஆன நூல் அளப்பதற்குப் பயன்படுகிறது. பொருளை கோணாமல் வரிசையாக வைப்பதற்கு நூல் பயன்படுகிறது. மனம் கோணாமல் இருப்பதற்கு சாஸ்த்ர நூல் தேவை.

சாஸ்த்ர நூல்களின் கருத்துக்களை உள்ளவாறு அறிந்து, வாழ்வில் கடைப்பிடித்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பேரின்பத்தை உணர மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अल्पाक्षरं असन्दिग्धं सारवत् विश्वतोमुखम्।
अस्तोभं अनवद्यं च सूत्रः सूत्रविदो विदुः।।

அல்பாக்ஷரம் அஸந்திக்தம் ஸாரவத் விஸ்வதோமுகம்।
அஸ்தோபம் அநவத்யம் ச ஸூத்ர: ஸூத்ரவிதோ விது:।।

(வாயு புராணம்)

குறைவான எழுத்துக்களுடன் கூடியது, ஐயத்திற்கு இடமின்றி இருப்பது, முழுமையாகக் கருத்தின் ஸாரத்துடன் கூடியது, நன்றாக விரித்துரைப்பதற்கு இடம் தரக் கூடியது, அசைச்சொற்கள் இல்லாதது ஸூத்ரம் எனப்படும். ஸூத்ரத்தை அறிந்தவர் அறிய வேண்டியதை அறிந்தவர் ஆவார்.

சில் வகை எழுத்து இல் பல்வகை பொருள்ஐ
செவ்வன் ஆடி இன் செறித்து இனிது விளக்கி
திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம்.

(பவநந்தி முனிவரின் நன்னூல்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



ஜகந்மாதா ஸ்ரீஸரஸ்வதீ

பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ சிவாநந்தர்
பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ சின்மயாநந்தர் பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ தயாநந்தர்
பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ பரமார்த்தாநந்தர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

50

ஆண்டவனைச் சார்ந்திருந்து, அறத்தைக் கடைப்பிடித்து, உலக இன்பங்களில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, தன்னில் தான் இன்புற்றிருத்தலே மெய்யுணர்தல்.

மெய்யுணர்தல்

ப்ரக்ருதியானது, உயிருக்கு பலவிதமான போகங்களை கொடுக்கிறது. அதனோடு கூடவே, அதில் பற்றற்ற தன்மையையும் தருகிறது. மெய்யறிவைப் பெறக்கூடிய சூழ்நிலையையும் அருள்கிறது.

உலகில் உயிர்கள் தம்முடைய இன்பத்தின் பொருட்டு பிற மனிதர்களையும், பொருட்களையும், சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கின்றன. அவ்வாறு உலகைச் சார்ந்து அனுபவிக்கும் இன்பங்களில் மூன்றுவித குறைபாடுகள் இருக்கின்றன. நிறைவைத் தராத தன்மை, அடிமைப்படுத்தும் தன்மை, துன்பம் கலந்த தன்மை ஆகிய மூன்றுமே அக்குறைபாடுகள்.

உலகில் எந்த மனிதரோ சூழ்நிலையோ பொருளோ முழுமையான இன்பத்தைத் தந்துவிட முடியாது.

வேத சாஸ்த்ரங்கள், குறைபாடுகளற்ற, அடிமைப்படுத்தாத, துன்பம் கலவாத பேரின்பம் ஒன்று இருக்கிறது என்றும் அதுவே நம்முடைய உண்மை இயல்பு என்றும் உபதேசிக்கின்றன.

அப்பேரின்பம் எதையும் சாராதது. அதுவே கைவல்யம் எனப்படும். கைவல்யம் என்ற சொல்லுக்கு எதையும் சார்ந்திராத தன்மை என்று பொருள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எதையும் சார்ந்திராமல், பேரின்பத்தைத் தன்னுடைய இயல்பாக உணர வேண்டுமானால், முதலில் அறத்தைக் கடைப்பிடித்து ஆண்டவனைத் தொழுது உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பக்குவப்பட்ட தூய உள்ளத்தோடு, தகுந்த குருநாதரை அணுகி, மெய்யறிவைப் பெற வேண்டும். பெற்ற மெய்யறிவில் உள்ள ஐயங்களை நீக்கிக்கொண்டு, அவ்வறிவை உறுதிசெய்துகொண்டு, பிறகு அதனை ஆழ்மனதிற்கு எடுத்துச் செல்லும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, தன்னுடைய உண்மை இயல்பைப் பற்றிய அறிவைப் பெற்று, அதனை த்யானிப்பவர்கள் க்ருதக்ருத்யர்கள் எனப்படுவார்கள்.

அதாவது, அவர்கள் மனிதப்பிறவியில் உண்மையிலேயே செய்ய வேண்டியதைச் செய்து முடித்துவிட்டார்கள் என்று பொருள்.

மனிதப் பிறவியின் மேலான குறிக்கோளான மோக்ஷத்தை உணர்ந்து, அவர்கள் பிறவித்தளைகளிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள்.

இவ்வாறு பற்றற்ற தன்மையையும் மெய்யறிவையும் பெற்ற பிறகு, ப்ரக்ருதியானது மெய்யறிவாளரிடம் எத்தகைய மாற்றத்தையும் உண்டுபண்ணுவதில்லை.

மெய்யறிவாளர் அறிபவன் என்ற தன்மையும் நீங்கி, அறிவாகவே இருக்கிறார். மெய்யறிவின் கோணத்தில் ப்ரக்ருதியின் குணங்கள் தத்தமது காரணத்தில் ஒடுங்கிவிடுகின்றன. அவர் தன்னில் தான் நிலைத்திருக்கிறார்.

ஆண்டவனைச் சார்ந்திருந்து, அறத்தைக் கடைப்பிடித்து, உலக இன்பங்களில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து, மெய்யறிவைப் பெற்று, தன்னில் தான் இன்புற்றிருக்க மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

पुरुषार्थशून्यानां गुणानां प्रतिप्रसवः
कैवल्यं, स्वरूपप्रतिष्ठा वा चितिशक्तेरिति।।

புருஷார்த்தஶூந்யாநாம் குணாநாம் ப்ரதிப்ரஸவ:
கைவல்யம், ஸ்வரூபப்ரதிஷ்டா வா சிதிஶக்தேரிதி।
(பதஞ்ஜலி யோகஸூத்ரம் : கைவல்ய பாதம் : 33)

குறிக்கோளற்றவையாய், குணங்கள் தத்தமது காரணங்களில் ஒடுங்குவது அல்லது மெய்யறிவைப் பெற்று, தன்னில் தான் நிலைத்திருப்பது கைவல்யம் எனப்படும்.

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.
(திருக்குறள் : 359)

எல்லாப் பொருளுக்கும் சார்பான மெய்ப்பொருளை உணர்ந்து, பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையா.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன் அட்டை உட்பக்கத் தொடர்ச்சி.....

திரு. கிருஷ்ணஸ்வாமி அவர்களின் இசை ஆர்வம், அவர் சகோதரர் திரு. சூரி மற்றும் அவர் தாயார் ஸ்ரீமதி சௌந்தரம் ஆகியோரின் வாயிலாக வளர்ந்தது. அவர்கள் பல வித்வான்களின் இசைக் கச்சேரிகளுக்கு அவரை அழைத்துச் சென்று அவர்களை அறிமுகப்படுத்தினர்.

இதுவே பின்னர் அவர் 1958ல் நாரத கான சபா துவங்கக் காரணம் ஆயிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக, திரு கிருஷ்ணஸ்வாமியின் பணி, பல அமைப்புகளுக்கு தன்னார்வம் மிக்க ஆலோசகராகவும், நிர்வாகியாகவும் பயன்பட்டிருக்கிறது. நாரத கான சபையின் செயலராக 50 ஆண்டுகள் இருந்ததுடன், ஆஸ்திக சமாஜத் தலைவர், ஸ்ரீ ஸ்ரீ பாரதி தீர்த்த மகாசுவாமிகள் நிறுவிய வித்யா பாரதி அறக்கட்டளை தலைவர், ஞானானந்த ஆசிரம அறக்கட்டளைத் தலைவர், பி.எஸ். கல்விக் கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், பாரதிய வித்யா பவன் சென்னைக் கிளையின் குழு உறுப்பினர், சென்னை சபாக்கள் கூட்டமைப்பின் தலைவர், என பல பொறுப்புகளை அயராது வகித்து வந்திருக்கிறார். ஆர்.ஏ.கே குடும்ப அறக்கட்டளை உருவாக்கி, திருநெல்வேலி அத்தாழநல்லூரில், பல்லவர்கள் கட்டிய ஸ்ரீ கஜேந்திர வரதர் ஆலயக் குடமுழுக்கு விழாவை நடத்தி, அத்திருக்கோயில் சிதிலமடையாமல் காத்திருக்கிறார்.

தம்முடைய தர்ம சிந்தனை மூலம், பல நபர்களின், பல அமைப்புகளின் வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுத்தவர். அவர்களுக்கு இலவச சட்ட உதவி செய்ததோடு நில்லாமல், பல நலிவுற்ற கலைஞர்களின், பாகவத உத்தமர்களின் வாழ்க்கை வளம் பெற, தொழில் முறையிலும், நிதியுதவி அளித்தும் மகத்தான உதவி புரிந்திருக்கிறார். இன்று பல கலைஞர்கள் புகழேணியின் உச்சியில் ஏற உதவியிருப்பதை, அந்தக் கலைஞர்களே நன்றியோடு பாராட்டியிருக்கிறார்கள்.

திரு கிருஷ்ணஸ்வாமி சென்னை மாநகருக்கும், தமிழ்நாட்டுக்கும் தன் இடைவிடாத சேவை காரணமாகப் பல குறிப்பிடததக்க பங்களிப்புகளைச் செய்து செழுமை சேர்த்திருக்கிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.